www.padippakam.com


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 489 | 1998 ஜூலை | ரூபா 8.00


உள்ளே


- சார்க் மாநாடு பற்றிய தொழிலாளர் நிலைப்பாடு எதுவாக வேண்டும்? .................. 2
- நவ சமசமாஜக் கட்சி ஜே.வீ.பி.யின் கரம்பிடிக்கும் தடபுடலின் அர்த்தம் என்ன? .................. 3
- ஸ்டாலினின் பயங்கரங்கள் பற்றிய மாபெரும் ஆய்வு வெளிவந்துள்ளது ............ 4
- கேமர் றவுஜ் தலைவர் பொல்பொட் மரணம் 5
- பிரித்தானிய-அயர்லாந்து ஒப்பந்தம்:............ 6
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ..... 8–9
- பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும் .......................... 12–13
- சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் இராஜ்குமாருக்கு எதிரான அரச வேட்டையைத் தோற்கடி! .................. 14


## முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்துக்கான ஆதரவு – பகிரங்கப் பதில்

— 10–11 பக்கம்

# பொதுஜன முன்னணி இராணுவத்தின் கைகளில் அதிகாரத்தை குவிக்கின்றது

பொதுஜன முன்னணி அரசாங்கம் இராணுவம் பொலிஸ் சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமைகளை வேகமாக அபிவிருத்தி செய்து வருகின்றது. கடந்த சில வாரங்களாக இந்தத் திசையில் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுககப்படுவதும் இராணுவமும் பொலிசும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தைக் கொண்டு அரசியல் தீர்மானங்கள் எடுப்பதும் பற்றிய தகவல்கள் வெளிவந்து கொண்டுள்ளன. தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் புத்திஜீவிகளும் இளைஞர்களும் இந்த அபிவிருத்திகண்டு வரும் நிலைமைகளை தீர்க்கமான முறையில் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அதற்கு எதிராக தொழிலாளர் வர்க்க அரசியல முன்நோக்கின் அடிப்படையில் போராடத் தயாராக வேண்டும் எனவும் சோசலிச சமத்துவக் கட்சி வேண்டுகின்றது.

எதிர்வரும் ஜனவரியில் இருந்து முப்படை நடவடிக்கைகளை ஒருங்குபடுத்தும் பிரிவு என்ற பெயரில் ஒரு புதிய அலகு உருவாக்கப்பட உள்ளதோடு அதற்கு ஜனாதிபதி பிரதான ஆணையிடும் அதிகாரியாகவும் இருப்பார். இதன் கீழ் முப்படைத் தளபதிகளும் செயற்படுவர். முப்படைகளின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் பொருட்டு ஒரு ஒருங்கிணைப்பு அதிகாரி புதிதாக நியமனம் செய்யப்படுவார். பயங்கரவாத தடை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிசாரும் இந்த ஆணையிடும் அதிகாரியின் கீழேயே கொணரபபடுவர்.

அரசாங்கமும் இராணுவமும் கூறிக் கொள்ளும் இந்த பயங்கரவாத தடை நடவடிக்கையானது தமிழ் ஒடுக்கப்ட்டும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தை தொடர்வதாகவும் தென் மாகாணங்களில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்குவதாகவும் அமைந்து இருக்கும்.

ஜூன் 5ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சகல வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கும் இராணுவக் கடிவாளம் பூட்டினார். இலங்கையில் இராணுவக் கடிவாளம் பூட்டப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். வடக்கு கிழ்கது இனவாத யுத்தம் உட்பட நாடு பூராவும் இடம்பெறும் இராணுவ, பொலிஸ் நடவடிக்கைகளுடன் தொடர்பான செய்திகளையும் கட்டுரைகளையும் இப்போது இராணுவத்தினால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற அதிகாரியின் அனுமதி இல்லாமல் வெளியிட முடியாது. துவக்கும் கையுமாக இடம்பெறும் இந்தத் தணிக்கை முறையின் கீழ் ஜனாதிபதியும் பிரதி பாதுகாப்பு அமைச்சரும் இராணுவ நடவடிக்கைகள் பற்றி வெளியிடும் பகிரங்க அறிக்கைகள் கூட வெட்டப்படுகின்றன.

அரசியல் தீர்மானம் எடுப்பதற்காக இராணுவமும் பொலிசும் அதிகாரத்தை கையில் குவித்துக் கொண்டுள்ள இலட்சணம் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தும் பிரச்சினையில் வெளிப்பாடாகியது. "தேர்தலை நடாத்துவதற்கு அவசியமான பாதுகாப்பை வழங்கு முடியாது" எனக் கூறி தேர்தல்களை இடம்பெறாது செய்யும் அளவுக்கு பொலிசும் இராணுவமும் செயற்பட்டுக் கொண்டுள்ளன. "யுத்தம் தீர்க்கமான கட்டத்துக்கு வந்துள்ளதால் யுத்தம் இடம்பெறும் பகுதிகளில் இருந்து இராணுவத்தையும் பொலிசையும் விலக்கிக் கொள்ள முடியாது" என பிரதி பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துக் கொண்டுள்ள அதே வேளையில் பொலிஸ் மா அதிபர் இதற்கு ஒன்றும் குறையாமல் "தேர்தலுக்கு பொலிசாரை வழங்க முடியாது" எனத் தேர்தல் ஆணையாளரிடம் நேரில் அறிவித்துள்ளார்.

மாகாண சபைத்தேர்தல்களை ஒத்திப் போடும் பேரில் நாடு பூராவும் அவசரகாலச் சட்டத்தை பிறப்பிப்பதோடு இராணுவம், பொலிஸ் கரங்களில் மேலும் மேலும் அதிகாரங்களை குவிக்கும் ஆபத்தும் இருந்து கொண்டுள்ளது.

தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இந்த அபிவிருத்திகளை தமக்கு விடுக்கப்பட்டுள்ள ஆபத்து சமிக்கைகளாக கொள்ள வேண்டும். பப்லோவாத நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன இந்தக் குமுறல்களை ஜனாதிபதிக்கும் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையே வெடித்துள்ள ஏதோ ஒரு அதிகாரப் போட்டியாகக் காட்ட முயன்றுள்ளார்.

"நாட்டுக்கு ஏதோ ஒன்றை சொல்லி அனுருத்த முயற்சிப்பது, பிரதமர் பதவியை இலக்காகக் கொண்டு முன்செல்வதாகும். இந்தப் பின்னணியில் தான் சந்திரிகாவும் அனுருத்தவும் ஆளுக்காள் முரண்பட்ட கருத்துக்களை தேர்தல் நடாத்துவது, பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக கூறுகின்றார்கள். இந்த முரண்பாட்டின் பின்னணியில் பிரதமர் பதவி சம்பந்தமாக இடம்பெறும் போரின் தன்மை இருந்து கொண்டுள்ளதாக நான் நினைக்கின்றேன்."(ராவய 1998 ஜூலை 05)

இந்த பப்லோவாதி அரசியல்வாதி பொதுஜன முன்னணியும் முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் அபிவிருத்தி செய்து கொண்டுள்ள இராணுவ சர்வாதிகாரத்துக்கான நிலைமைகளை உள்ளங் கையினால் மூடி மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். பொதுஜன முன்னணி அரசாங்கம் இராணுவ பொலிஸ் ஒடுக்குமுறையை அபிவிருத்தி செய்வதோடு மட்டுமன்றி இராணுவமும் பொலிசும் நாட்டின் ஆட்சியை தீர்மானம் செய்யும் அதிகாரங்களை தமது கைக்குள் போட்டுக் கொண்டுள்ளன. சோசலிச சமத்துவக் கட்சி மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டி வந்துள்ளது போல் இதற்கான துரும்பாக வடக்கு-கிழக்கு ஒடுக்கப்படும் மக்கள் வாழும் பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதாகக் கூறி நடாத்தும் இனவாத யுத்தம் இருந்து கொண்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் இராணுவம் ஏற்கனவே "விடுதலை "செய்து கொண்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் பகுதியில் விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகளின் பின்னர் இராணுவ சர்வாதிகாரம் திணிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமாரசுவாமியும் உறவினர்களும் படுகாட்டுமிராண்டித்தனமான முறையில் கொலை செய்யப்பட்டு புதைகுழியில் தள்ளப்பட்டதும் விசாரணையில் செம்மணி மாபெரும் புதைகுழிகள் பற்றிய தகவல்கள் வெளியாகி இருப்பதும் இந்த இனவாத யுத்த இராணுவ

19ம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் மாபெரும் மனித புதைகுழிகள்

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கின் முதலாம் எதிரியான கோர்ப்பரல் சோமரத்ன ராஜபக்ச, யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் இராணுவத்தினரால் கொன்று புதைக்கப்பட்ட 400க்கும் அதிகமான தமிழ் மக்களின் சடலங்களைக் கொண்ட புதைகுழிகள் இருப்பதாக கூறியிருப்பது சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் மனித உரிமைகள் காப்பு என்ற பெயரில் அணிந்து கொண்டுள்ள முகமூடியை தவிடு பொடியாக்கியுள்ளது.

ஜூலை 5ம் திகதி கிருஷாந்தி கொலைவழக்கு விசாரணையில் ராஜபக்ச உட்பட ஐந்து இராணுவத்தினர் குற்றவாளிகள் என ஜூரர்கள் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து ராஜபக்ச கூறுவதற்கு ஏதும் உள்ளதா என நீதியரசர்கள் அவரைக் கேட்டபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

1996 செப்டம்பர் 7ம் திகதி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியை கடத்திச் சென்று கற்பழித்து, கொலை செய்தது அவரைத் தேடிச் சென்ற கிருஷாந்தியின் தாயார், சகோதரர், உறவினரை கடத்திச் சென்று, கொலை செய்தது என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இராணுவ காவல் நிலையத்துக்கு அருகே மூன்று புதைகுழிகளில் புதைக்கப்பட்டு இருந்த இவர்களின் சடலங்கள், இந்த கொலைகள் தொடர்பாக யாழ்ப்பாண பொதுமக்களிடையே பெரும் கொதிப்பை உருவாக்கியதைத் தொடர்ந்தே தோண்டி எடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கு விசாரணையை மேற்கொண்ட கொழும்பு மேல்நீதிமன்றம் சகல எதிரிகளுக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

கோர்ப்பரல் ராஜபக்ச, யாழ்ப்பாணத்தில் 400 தமிழ் மக்கள் கொன்று புதைக்கப்பட்ட புதைகுழிகளை காட்ட முடியும் என நீதிமன்றத்தில் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் இங்ஙனம் கொன்று புதைக்கப்படுவது சாதாரண சம்பவம் எனவும் அவ்வாறு செய்யாது போனால் தாம் உயர் அதிகாரிகளின் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் எனவும் இந்த வழக்கின் சகல எதிரிகளும் குறிப்பிட்டனர். அவர்களின் கூற்றுக்களின்படி கொலை செய்யப்பட்ட பலரின் சடலங்கள் இங்ஙனம் கொணரப்பட்டதாகவும் உயிருடன் கொணரப்பட்டவர்கள் ஸ்தலத்தில் வைத்தே கொலை செய்யப்பட்டதாகவும் இவர்கள் தெரிவித்தனர். இந்தக் குற்றங்கள் பெரும்பாலும் இரவிலேயே இடம்பெற்றதாகவும் இவர்கள் மேலும் தெரிவித்தனர்.

7ம் பக்கம் பார்க்க

## தோட்ட இளைஞர்களை விடுதலை செய்ய அனைத்துலக பிரச்சாரம்

பொலிசாரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடை பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சியின் ஆதரவாளர் சுப்பு உதயகுமார் உட்பட எட்டு தோட்ட இளைஞர்களை விடுதலை செய்யும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் இணைந்து சோசலிச சமத்துவக் கட்சி ஆரம்பித்துள்ள அனைத்துலக ரீதியிலான பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவளிக்குமாறு தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் ஒடுக்கப்படும் மக்களை தொழிலாளர் பாதை வேண்டுகின்றது. செனன் தோட்ட குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டது பற்றிய செய்தி கடிதம் அனைத்துலகக் குழுவின் உலக சோசலிச வெப் நிலையத்தினால் ஜூலை 14ம் திகதி வெளியிடப்பட்டது.

அக்கடிதத்தின் அழைப்புக்கு ஆதரவு காட்டி இலங்கை சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு பிரதிகளுடன் கூடிய கடிதங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நியூயோர்க் நகரின் ஆசிரியர் ஒருவர் அந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களின் விபரம் வருமாறு:

1. சுப்பு உதயகுமாா(சித்திராவத்த)
2. சாம்முத்து பெனடிக் (சலங்கந்த தோட்டம்)
3. யேசு நாயகன்(கொக்காவத்த)

19ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

padippakam

www.padippakam.com



தொழிலாளர் பாதை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# சார்க் மாநாடு பற்றிய தொழிலாளர் நிலைப்பாடு எதுவாக வேண்டும்?

தென் ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் வருடாந்த உயர்மட்ட மகாநாடு ஜூலை 29ம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு அரச தலைவர்கள் இம்மகாநாட்டுக்கு இம்முறை வருகை தருவர். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான யுத்த கோஷங்களும் சகல நாடுகளிலும் வரலாற்றில் முன்னொருபோதும் கண்டிராத நெருக்கடிகளும் அத்தோடு மோதுதல்களும் தலைதூக்கி உள்ள ஒரு நிலையில் இந்த மகாநாடு நடைபெற உள்ளது.

முதலில் நாம் இந்த அமைப்பின் நாடுகளது முதலாளித்துவ ஆட்சியாளர்களது "சாதனை"களை சுருக்கமாக ஆராய்ந்து பார்ப்போம்:

**இந்தியாவின்** நெருக்கடி மிக்க பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் பாகிஸ்தான் ஆளும் வர்க்கத்துடன் அணுவாயுத போட்டியில் ஈடுபட்டு முழுத் தென் ஆசிய பிராந்தியத்தையும் யுத்தத்தின் விளிம்புக்குக் கொணர்ந்துள்ளது. 17 கட்சிகளைக் கொண்ட பா.ஜ.க. அரசாங்கம் எந்த ஒரு கணத்திலும் கவிழ்ந்து போகும் நிலையில் ஈடாடிப் போயுள்ளது. பா.ஜ.க. பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தக் கூச்சல்களில் ஈடுபட்டிருப்பது பிரமாண்டமான குமுறல்களுக்கு இட்டுச் செல்லக் கூடிய சமூகப் பிரச்சினைகளில் இருந்து தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கே: இந்திய சோவினிஸ வெள்ளப் பிரளயத்தினுள் இம்மக்களை நீச்சல் அடிக்க வைப்பதற்கே. இந்தச் சோவினிச அலைவீச்சை உக்கிரமாக்கும் அதே வேளையில் ஆர்.எஸ்.எஸ். போன்ற பாசிஸ்டுகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ள பா.ஜ.க. அரசாங்கம் முஸ்லீம் மதத்தவர்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல்களில் ஈடுபடும் பொருட்டு விஸ்வ ஹிந்து பர்ஷாத் என்ற படுபிற்போக்கு இந்து அடிப்படைவாதிகள் அமைப்பையும் களத்தில் இறக்கியுள்ளது. இந்தக் கும்பல் அயோத்தியில் முஸ்லீம் பள்ளிவாசல் உடைக்கப்பட்ட இடத்தில் இந்து கோவில் கட்ட வேண்டும் என்ற பிரச்சாரத்தை பா.ஜ.க. ஆதரவுடன் நடாத்துகின்றது.

தென்கிழக்கு ஆசிய நெருக்கடியும் நாட்டின் அரசியல் ஈடாட்டமும் அணுவாயுத பரிசோதனையை எதிர்த்து விதிக்கப்பட்டுள்ள தடைகளும் இந்தியப் பொருளாதாரத்தைப் பலமாக பாதித்து வருகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியாவில் இருந்து கடந்த மே மாதத்தில் 218 மில்லியன் டாலர்களையும் ஜூனில் 205 மில்லியன் டாலர்களையும் அப்புறப்படுத்தி உள்ளனர்.

இந்தியாவின் 96 கோடி மக்களில் 40 கோடி மக்கள் படுமோசமான வறுமையில் தலைமூழ்கிப் போயுள்ளனர். நூற்றுக்கு 48 வீதத்தினருக்கு படிப்பறிவு கிடையாது. வாழ்க்கைக்கு வழிதேடும் வகையில் தினசரி 300 இளம் பெண்களும் தாய்மாரும் விலைமாதர் தொழிலுக்கு தள்ளப்பட்டு வருவதாக முதலாளித்துவ பத்திரிகைகள் புள்ளிவிபரங்களை வெளியிட்டுள்ளன.

**பாகிஸ்தான்** பிரதமர் நவாஸ் ஷெரிப் இந்த சாக் மகாநாட்டில் கலந்து கொள்வது பொதுமக்களை படுமோசமான முறையில் நசுக்கித் தள்ளும் நடவடிக்கைகளை எடுத்தபடியேயாகும். இந்தியாவுடன் போட்டா போட்டியாக அணுவாயுத பரிசோதனையில் ஈடுபட்ட ஒன்றரை மாத காலத்தில் நாட்டை இந்திய எதிர்ப்பு சோவினிசத்தினுள் தோய்த்து எடுத்த பாகிஸ்தான் ஆளும் வர்க்க பிரதமர் ஷெரிப் அணுவாயுத பரிசோதனையின் பேரில் பொதுமக்கள் "சிறிது நஷ்டஈடு" செலுத்த நேரிட்டுள்ளது என ஜூலை 11ம் திகதி அறிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாகிஸ்தானில் வந்திறங்கிய கையோடு இந்தக் கசக்கிப் பிழியும் வேலையில் அவர் ஈடுபட்டார். 30 பில்லியன் டாலர் வெளிநாட்டுக் கடனின் பேரில் வருடாந்தம் கட்டித் தீரவேண்டிய 3 பில்லியன் டாலர்களை ஷெரிப் அரசாங்கம் கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ச.நா.நி. இருந்து கிடைக்க வேண்டிய 1.56 பில்லியன் டாலர்கள் கிடைக்காது போய்விடுமோ என்ற கிலி ஷெரிப் அரசாங்கத்தை ஆட்டிப்படைத்து வருகின்றது. இந்நிலையில் ஷெரிப் அரசாங்கம் "காஷ்மீர் பிரச்சினை"யை தீர்க்கவும் பொருளாதாரத் தடையை அகற்றவும் தலையிடும்படி அழைப்பு விடுத்துள்ளது.

பாகிஸ்தானின் படிப்பறிவற்றோர் நாட்டின் முழுச் சனத்தொகையில் 62.2வீதமாகும். அதிலும் பெண்கள் நூற்றுக்கு 75.6வீதமாக உள்ளனர். உயிர் வாழ்க்கைக் காலம் 56 வருடங்களாக உள்ளது. இவை முதலாளி வர்க்கம் பொதுமக்கள் மீது திணிக்கும் படுமோசமான வறுமையையும் சமூக பின்னடைவுகளையும் எடுத்துக் காட்டுகின்றது. பாகிஸ்தான் ஆளும் வர்க்கம் நீண்டகால இராணுவ ஆட்சி மூலம் பொதுமக்கள் பிரச்சாரத்தின் மத்தியில் இந்த ஆட்சி முறைகள் வீழ்ச்சி கண்ட நிலையிலும் இராணுவ ஆட்சி மூலம் பொதுமக்களை நசுக்கிக் கொண்டு உள்ளது. முன்னைய பூட்டோ அரசாங்கத்தினதும் இன்றைய ஷெரிப் அரசாங்கத்தினதும் பின்னணியில் இந்த இராணுவ நிழல் ஆட்டம் இருந்து கொண்டுள்ளது.

**பங்களாதேஷ்** பிரதமர் ஷெயிக் ஹசினாவின் அரசாங்கமும் முழு அரசியல் பிராந்தியமும் முதலாளித்துவக் கோஷ்டி மோதுதல்களினால் நிறைந்து போயுள்ளது. நாட்டில் வேலை செய்யக் கூடிய ஜனத்தொகையில் மூன்றில ஒரு பங்கினர் 35.5 வீதத்தினர் வேலையில்லாது உள்ளனர். நாட்டின் உயிர் வாழ்க்கைக் காலம் 56 வயது. நூற்றுக்கு 67 வீதத்தினர் படிப்பறிவற்றவர்கள். இவை உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்கள். ஆனால் உண்மை நிலைமையோ இதைவிட மோசமானது. ஆண்டுக்கு சுமார் 200000 பெண்களும் குழந்தைகளும் விலைமாதர்களாக பங்களாதேஷ் எல்லைக்கு அப்பால் கடத்திச் செல்லப்படுவதாக அரச சார்பற்ற அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. 1971ல் பாகிஸ்தான் முதலாளித்துவ பிடியில் இருந்து விடுபட்ட பங்களாதேஷ் முதலாளித்துவ வர்க்கம் எந்தவிதமான ஜனநாயக பணிகளையும் இட்டுநிரப்பத் தவறியதோடு ஏகாதிபத்தியவாதிகளின் பிடிக்குள் சிக்குண்ட பொதுமக்களை இராணுவ ஆட்சிக்குள் கொணர்ந்தது. மக்கள் கிளர்ச்சி மூலம் இராணுவ ஆட்சியை தூக்கி வீசியதன் பின்னர் ஆட்சிக்கு வரும் "சிவில் அரசாங்கங்கள்" பொதுமக்களிடையே இடைவிடாத கோஷ்டி மோதல்கள். இன, மத இரத்தக் களரிகளைத் தூண்டுவதன் மூலம் அவற்றை நசுக்கிக் கொண்டுள்ளது. கோஷ்டி மோதுதல்கள் வெளிநாட்டு முதலீடுகளை உரிய முறையில் தருவிக்கத் தடையாக உள்ளதாக முதலாளித்துவ வர்த்தகர்கள் இடைவிடாது முதலாளித்துவ அரசியல் தலைவர்களை எச்சரித்து வருகின்றார்கள். உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தின் கீழ் அனைத்துலக மூலதனத்துக்காக தென் ஆசியாவில் இலாபம் மிக்க உழைப்பு சந்தையாக பங்களாதேஷ் இருந்து கொண்டுள்ளது.

**நேபாளம்** மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் என்ற போலிப் பெயரில் இயங்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் -குட்டி முதலாளித்துவ கட்சியின் முண்டுகோலைக் கொண்டுள்ள பிரதமர் கிரிகா பிரசாத்தின் நேபாளக் காங்கிரசும் கொயிராலின் முதலாளித்துவ அரசாங்கமும் மேலே குறிப்பிட்ட அரசியல் நெருக்கடிகளுக்கு ஒன்றும் குறையாத நெருக்கடிகளால் பற்றிப் பிடிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு ரீதியில் மன்னரைத் தலைமையில் கொண்டுள்ள நேபாள ஆளும் வர்க்கம் கடந்த மூன்று வருடகால மக்கள் கிளர்ச்சியில் இடைவிடாத அரசாங்க வீழ்ச்சிகளுக்கு முகம் கொடுத்தது. குட்டி முதலாளித்துவ மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முதலாளித்துவ ஆட்சியை இந்த இலட்சணத்தில் பாதுகாத்து வருகின்றது. நேபாள காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருப்பது இந்தக் குட்டி முதலாளித்துவ கட்சியின் முண்டுகோலுடனாகும். நேபாளத்தில் தலா வருமானம் 1200 டாலர்களாகும். சனத்தொகையில் நூற்றுக்கு 60 வீதமானோர் வறுமைக் கோட்டுக்கு கீழேயே வாழ்கின்றனர். சனத்தொகையில் 72.5 வீதத்தினர் படிப்பறிவற்றவர்களாக வாழ்கின்றனர். பெண்களில் நூற்றுக்கு 86 வீதத்தினருக்கு படிப்பறிவு கிடையாது.

அரசியலிலும் சமூகத்திலும் நிலமானித்துவச் செல்வாக்குகள் காணப்படும் பூட்டானில் மன்னர் ஆட்சி இருந்து கொண்டுள்ளது. இந்த சாக் மகாநாட்டில் அந்நாட்டு மன்னரான ஜிக்மே சிக் வான்க்சு கலந்து கொள்கிறார். மன்னர் கையில் ஆட்சியைத் தொடர்ந்தும் கொண்டிருக்க ஒரு "ஜனநாயக சீர்திருத்தம்" பற்றி சில நாட்களுக்கு முன்னர் பூட்டானில் பேசிக் கொள்ளப்பட்டது. பூட்டானின் உயிர்வாழ்க்கைக் காலம் 51 வயது. நூற்றுக்கு 58 வீதத்தினருக்கு படிப்பறிவு இல்லை. தலா வருமானம் 73 டாலர்.

அரசியல் கட்சிகளுக்கு தடை இல்லாத போதிலும் வேறு அரசியல் கட்சிகளுக்கு இடமற்ற மாலைதீவின் ஒடுக்குமுறை ஆட்சி அந்நாட்டைச் சொந்தமாக்கிக் கொண்டுள்ள முதலாளித்துவ குடும்பம் ஒன்றின் பிரதிநிதியான பிரதமர் அப்துல் கையூமின் கைகளில் இருந்து கொண்டுள்ளது.

இந்த முதலாளித்துவ ஆட்சியாளர்கள் சாக் மகாநாட்டுக்கு வருகை தருவது. இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நெருக்கடிக்குள்ளாகியுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயேயாகும். பொதுமக்களின் எதிர்ப்புக்கு ஆளாகி செல்வாக்கு இழந்து போய் நான்கு ஆண்டுகள் கழிந்துள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் இரண்டு முண்டு கோல்களில் நின்று கொண்டுள்ளது . ஒன்று சமசமாஜ கம்யூனிஸ்ட் நவசமசமாஜ இ.தொ.கா தொழிற்சங்கங்கள். மற்றையது இராணுவமும் பொலிசும்.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் படுபயங்கரமான இனவாத யுத்தம் ஊடான நாட்டின் ஆட்சியின் இராணுவமயமாக்கம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள ஒரு நிலையிலேயே சாக் மகாநாடு கொழும்பில் நடைபெறுகின்றது. யுத்தம் இடம்பெறும் ஒரு நிலையில் தேர்தல் நடாத்த "பாதுகாப்பு" வழங்க முடியாது என நேரடியாகக் கூறி இராணுவமும் பொலிசும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப்போடுவதற்கான ஒரு நிலைமை உருவாகச் செய்துள்ளன. பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் பொதுமக்களை துடைத்துக் கட்ட எண்ணியுள்ளன. அத்தகைய ஒரு எதிர்ப்புரட்சி மூலோபாயத்துடன் செயற்பட இறங்கக் காரணம், தொழிலாளர் , ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களிடம் இருந்து பிரமாண்டமான போராட்டம் வெடிக்குமோ என்ற அச்சமேயாகும்.

தென்ஆசிய நாடுகளைப் பிடித்துக் கொண்டுள்ள அரசியல் ஈடாட்ட நிலையும் ஆளும் வர்க்கங்களின் வலதுசாரி திருப்பமும் நாடுகளுக்கு இடையேயான ஆதாளபாதளமும் சமூக சமத்துவமின்மையின் அபிவிருத்தியும் சமூக வெடிப்புக்களிற்கான நிலைமையும் உற்பத்தியின் பூகோளமயமாக்க நடவடிக்கைகளின் சிருஷ்டியாகும். சாக் மகாநாட்டுக்கு முதலாளித்துவ அரச தலைவர்கள் வந்திறங்குவது தீ மிதிப்பவர்களைப் போலாகும். இத்தலைவர்கள் இந்த மகாநாட்டினுள் சுபீட்சத்தையும் சமாதானத்தையும் பற்றி கண்ணீர் வடிப்பார்கள். ஆனால் இவர்கள் அறிந்ததெல்லாம் அனைத்துலக மூலதனத்தை ஈர்க்கும் கடைகெட்ட சண்டையில் பொதுமக்களை அதற்குப் பலிகடாக்கள் ஆக்குவதே.

இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும்

4ம் பக்கம் பார்க்க

அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

World Socialist Web Site
http://www.wsws.com

* அமெரிக்கா:
http://www.socialequality.com

* அவுஸ்திரேலியா:
http:www.workersnews.flex.com.au

* பிரித்தானியா:
http:/www.socialequality.org.uk

* கனடா:
http://www.egalitesociale.com

* ஜேர்மன்:
http://gleichheit.de

www.padippakam.com



# நவ சமசமாஜக் கட்சி ஜே.வீ.பி.யின் கரம்பிடிக்கும் தடபுடலின் அர்த்தம் என்ன?

இந்நாட்களில் ஜே.வீ.பி. "இடதுசாரி சக்திகளை ஐக்கியப்படுத்தும் " பேரில் நடாத்திவரும் பேச்சுவார்த்தைகளில் தாமும் கலந்து கொண்டு வருவதாக நவசமசமாஜக் கட்சி மிகவும் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

நவ சமசமாஜக் கட்சியினர் ஜே.வீ.பி.யுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டுள்ளதன் மூலம் தமதும் தாம் இணைந்து கொண்டுள்ள ஐக்கிய செயலகத்தினதும் அரசியல் நாற்றமெடுப்பை மீண்டும் ஒரு முறை அம்பலமாக்கிக் கொண்டுள்ளனர். இந்த அமைப்பு, தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான பிற்போக்கு சக்திகளை ஒன்றுதிரட்டும் முயற்சியில் நேரடியாக ஈடுபட்டுள்ளது.

இடதுசாரி சக்திகளை ஒன்றுதிரட்டும் இயக்கத்தில் தாம் இறங்கியுள்ளதாக ஜே.வீ.பி.யினர் கடந்த மே தினத்தில் தெரிவித்திருந்தனர். ஜே.வீ.பி.செயலாளர் ரில்வின் சில்வா "நியமுவா" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் "குறைந்த பட்சம் " அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுப்பதும் "உயர்ந்தபட்சம்" இடதுசாரி அரசாங்கத்தை வேண்டும் மக்கள் சக்திகளுக்கான இடதுசாரி மையத்தை கட்டியெழுப்புவதும்" தமது இலக்காகும் என்றுள்ளார்.

இந்த "இடதுசாரி சக்திகளை ஒன்று திரட்டல்", "இடதுசாரி அரசாங்கம் அமைத்தல", "ஒன்றிணைந்து எதிர்ப்புக்காட்டல்" முதலான சூத்திரங்களின் மூலம் ஜே.வீ.பி.பொதுமக்களின் கண்களில் மண்ணைத் தூவ முயற்சிக்கின்றது. இந்தச் சூத்திரங்களின் உள் நோக்கம் வேறுபட்டது.

இந்த ஜே:வீ.பி.அமைப்பு ஒரு தீவிரவாத இயக்கம் என்ற நிலையில் இருந்து பாசிச இயக்கமாக பரிணாமம் அடைந்துள்ளது. 1987 90 காலப்பகுதியில் ஜே.வீ.பி.தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக முன்னெடுத்த பயங்கர இயக்கம் இந்தப் பரிணாமத்தின் ஒரு வெளிப்பாடாகும். தமிழர் விரோத இனவாதக் கூச்சல்களுடன் பாசிசக் கலகங்களில் இறங்கிய ஜே.வீ.பி.அன்று யூ.என்.பி.பயங்கரவாத இயக்கத்துக்கு துணை போகும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு மட்டுமன்றி யூ.என்.பி.-பிரேமதாச கும்பலுடனும் அரசாங்கத்துடனும் கொலைகளுக்கான இரகசியக் கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட்டது.

ஜே.வீ.பி.தலைமையில் பிரேமதாசவின் பங்களிப்புடன் மக்கள் படுகொலைக்கு என்றே அலுகோசு இயக்கமான. "தேசபிரேமி ஜனதா வியாபாரய " அமைக்கப்பட்டது. யூ.என்.பி.-ஜே.வி.பி.வன்முறையானது யூ.என்.பி.யின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டுவந்த கொதிப்பை நசுக்கித் த்ள்ளுவதையே இலக்காக்கிக் கொண்டிருந்தது. இதற்கு பிரேமதாச அரசாங்கம் பாசிச கையாட்களை முடிந்தமட்டும் பயன்படுத்திக் கொண்டது. ஆனால் ஜே.வீ.பி.தலைவர்கள் அரசியல் அதிகாரத்துக்கான பேரம்பேசலில் ஈடுபடத் தொடங்கியதன் பின்னர் பின்வாங்கிய பிரேமதாச அரசாங்கம் ஜே.வீ.பி.தலைவர்கள், அங்கத்தவர்கள் கிராமப்புற இளைஞர்கள் சுமார் 60000 பேரை படுகொலை செய்தது.

இந்த வரலாற்றை சிறிய அளவிலேனும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சுவரொட்டிகளால் மதில்களை நிறைப்பதும் சிவப்பு வ்ண்ணம் தீட்டப்பட்ட கடதாசிகள், துணிகளால் வீதிகளை அலங்கரிப்பதும் மார்க்ஸ்,லெனினிடம் இருந்து களவாடப்பட்ட மேற்கோள்களால் இந்தக் கடந்த கால வரலாற்றை பூசிமெழுக முயற்சிப்பதும் மட்டும் இதற்கு காரணம் அல்ல. மீண்டும் சந்தர்ப்பம் கிடைக்குமானால் ஜே.வீ.பி.யை கைத்தேங்காயாக உருட்டி விளையாட எண்ணும் முதலாளித்துவக் குழுக்கள்-பொதுஜன முன்னணி, யூ.என்.பி. முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள், நவசமசமாஜக் கட்சி போன்ற குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள்- ஜே.வீ.பி.க்கு இரத்தம் பாய்ச்சி தூக்கிப் பிடிக்க எண்ணுவதே காரணம்.

அது இப்போது "இடதுசாரி சக்திகளை ஒன்றுதிரட்டுவது" பற்றிப் பேசுவது ஜே.வீ.பி.செயலாளர் கூறுவது போல் ஜே.வீ.பி.யும் "செத்துப் பிழைத்ததால்" அல்ல. ஜே.வீ.பி. சம்பந்தமாக பொதுமக்களிடையே இருந்துவரும் வெறுப்பையும் ஆத்திரத்தையும் ஊடறுத்துச் செல்லும் அவசியம் அதற்கு இருந்து கொண்டுள்ளது. இந்த இடதுசாரி சக்திகள் எனப்படுபவற்றின் காட்டிக்கொடுப்பின் மூலம் வழிதடுமாறிப் போயுள்ள பொதுமக்களிடையே ஊடுருவிக் கொள்ளும் அவசியம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு ஒரு காலத்தில் தாம் தீவிரவாத இயக்கமாக இருந்து வந்துள்ளதாலும் இடதுசாரி வசனங்களை அள்ளி வீசி வந்தததாலும் தமது இன்றைய பிற்போக்கு, வலதுசாரி பரிணாமத்தையிட்டு சந்தேகம் கொள்ள வேண்டாம் என முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் காட்டும் ஒரு கண்காட்சியுமாகும். இன்று ஜே.வீ.பி.சர்வதேச நாணய நிதியத்துக்கு கதவுகளை அகலத் திறந்துவிட வாக்குறுதி அளித்துள்ளது. அத்தோடு சுதந்திர வர்த்தக வலயத்தில் அன்சல் லங்கா, சீ.அன்ட் எச் போன்ற ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களில் தமது தொழிற்சங்கங்களை அமைத்துக் கொண்டு மூலதனத்தின் ஆளுமைக்கு தொழிலாளர்களை கீழ்ப்படிய வைக்க வெளிவெளியாக வேலைசெய்கின்றனர். யூ.என்.பி.யும் பொதுஜன முன்னணியும் செல்வாக்கு இழந்து போயுள்ள ஒரு நிலையில் பாசிஸ்டுகள் தமது தருணத்தை எடுத்துக் கொள்ள ஜே.வீ.பி.தலைகீழாக நிற்கின்றது.

இத்தகைய ஒரு நிலையிலேயே நவசமசமாஜக் கட்சி ஜே.வீ.பி.யுடன் பேச்சுவார்த்தைக்கு இறங்கியுள்ளது. ஜே.வீ.பி.யுடன் காதல் களியாட்டுக்களில் ஈடுபடுவது நவசமசமாஜக் கட்சிக்கு அப்படி ஒன்றும் புதியது அல்ல. ஜே.வீ.பி.யை மீண்டும் அரசியல் அரங்குக்கு கொணர அதற்கு செங்கம்பளம் விரித்த அமைப்பு நவசமசமாஜக் கட்சி. ந.ச.ச.க.1987 90 வன்முறைகளின் பின்னர் 1995ல் ஜே.வீ.பி.யினால் முதற்தடவையாக நடாத்தப்பட்ட மகாநாட்டுக்கு ந.ச.ச.க. தலைவர் கலாநிதி.விக்கிரமபாகு கருணாரத்னவுக்கும் அழைப்புக் கிடைத்தது. அதில் இருந்து ந.ச.ச.க.ஜே.வீ.பி.யுடன் கூட்டுச்சேர இடைவிடாது முயற்சித்து வந்தது. ஜே.வீ.பி.யினுள் இடதுசாரி, இனவாத போக்குக்கள் இரண்டு இருப்பதாகவும் இடதுசாரி போக்கு வெற்றியீட்டும் எனவும் ந.ச.ச.க. தலைவர் குறிப்பிட்டு வந்துள்ளார். 1994 பொதுத் தேர்தலிலும் 1997 உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் ஜே.வீ.பி.க்கு வாக்களிக்கும்படி ந.ச.ச.க. கேட்டுக்கொண்டது.


விக்கிரமபாகு கருணாரத்ன


ரில்வின் சில்வா

ஆனால் பொதுஜன முன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்தை ஆரம்பித்து அதிகாரப் பகிர்வு யோசனை எனப்படுவதை முன்வைத்ததும் ஜே.வீ.பி.இனவாதக் கூச்சலிட்டுக் கொண்டு பிற்போக்கு இயக்கத்தை மீண்டும் ஆரம்பித்தது. அரசாங்கத்தின் அரசியல் தீர்வு "பொதி"யைப் பற்றி கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் ஜே.வீ.பி.புள்ளிகள் ந.ச.ச.க. தலைவரை தாக்கவும் முயற்சித்தனர். ஆனால் ந.ச.ச.க. "இனவாதிகளாக வேண்டாம்" என ஜே.வீ.பி.யின் தோளில் கைபோட்டுக் கொண்டு அதனுடன் கூட்டுக்குச் செல்லும் முயற்சியை கைவிடவில்லை. இப்போது அதற்கு நூல் கட்டியுள்ளது. ஆனால் இது ந.ச.ச.க.வைப் பொறுத்தமட்டில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக புதிய அணிகளை திரட்டச் செய்யும் முயற்சியாகும்.

## புதிய பொறி

பொதுஜன முன்னணி அரசாங்கம் செல்வாக்கு இழந்து போகும் நிலையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை வளைத்துப் பிடிக்கவும் நசுக்கவும் புதிய பொறி அவசியம் என்பது ந.ச.ச.க.வின் கணிப்பாகும். கடந்த மே தினத்தில் ந.ச.ச.க. பல்வேறு மாஜி.தீவிரவாதிகளையுமம் கூட்டி அள்ளி "புதிய இடதுசாரி முன்னணி" என்ப பெயரில் அரங்குக்கு வந்தது. இப்போது இடதுசாரி சக்திகளை ஒன்றிணைக்கும் பேரில் ஜே.வீ.பி.யுடன் ந.ச.ச.க. பேச்சுவார்த்தைகளுக்குச் பாய்ந்து கொண்டுள்ளது.

மே 13ம் திகதி ந.ச.ச.க. தலைமை அலுவலகத்துக்கு சென்ற ஜே.வீ.பி.தலைவர்கள் இடதுசாரி சக்திகளை ஒன்றிணைப்பது சம்பந்தமாக இணக்கத்துக்கு வந்த முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் திரும்பத்திரும்ப அறிக்கை செய்திருந்தன. இப்போது தமது புதிய இடதுசாரி முன்னணியையும் இதில் சேர்த்துக் கொள்ளும் நோக்குடன் ந.ச.ச.க. ஜே.வீ.பி.யுடன் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி பேச்சுவார்த்தை நடாத்த முயற்சிப்பதாக அறிக்கைகளில் இருந்து தெரிய வருகின்றது. இரண்டொருத்தர் இருந்துவரும் புதிய இடதுசாரி முன்னணியை பலிகொடுத்தும் சரி ஜே.வீ.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ள முடியுமானால் ந.ச.ச.க.அதை கவனத்தில் கொள்ளும். ந.ச.ச.க.வுக்கு ஜே.வீ.பி.யுடனான முரண்பாடு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வு "பொதி" யை ஜே.வீ.பி.எதிர்ப்பதேயாகும்.

ஆனால் இது முரண்பாடா? . ந.ச.ச.க.ஒரு புறத்தில் பொதுஜன முன்னணிக்கு பந்தம் பிடிக்கின்றது. வடக்கில் விடுதலைப் புலிகளின் பிற்போக்கு பிரிவினைவாத அரசியலுக்கு ஆதரவளிக்கின்றது. மறுபுறத்தில் ஜே.வீ.பி.பாசிச இயக்கத்துடன் பிணைந்து கொள்கின்றது. இவை அனைத்தினதும் சாராம்சம் என்ன? அனைத்துலக மூலதனத்தினதும் அத்துடன் இணைந்து கொண்டுள்ள இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் அவசியங்களுக்காக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ள பிற்போக்கு சக்திகளை கட்டியெழுப்பும் திட்டம் இருந்து கொண்டுள்ளது. அனைத்துலக ரீதியில் இது பப்லோவாத அமைப்புக்களின் அரசியல் நடவடிக்கைகளாக இருந்து கொண்டுள்ளது. இது தொழிலாளர் வர்க்கத்தை தவிடுபொடியாக்கும் பொருட்டு பாசிச இயக்கங்களை பலப்படுத்துவதுடன் இணைந்து கொண்டுள்ளது. இந்நடவடிக்கைகள் ஒரு தொகை நாடுகளில் பாசிச இயக்கம் தலைஉயர்த்திக் கொண்டுள்ள ஒரு நிலையிலேயே இடம்பெறுகிறது.பிரான்சிலும் ஜேர்மனியிலும் இத்தாலியிலும் நாம் இந்நிலைமையைக் காண்கின்றோம். அயல்நாடான இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சி அரசாங்கத்தின் மூடுதிரையுடன் பாசிச சக்திகள் பலம்பெற துடிக்கின்றன. ஜே.வீ.பி.யின் "இடதுசாரி சக்திகளை ஒன்றிணைக்கும்" இயக்கத்தையும் அவ்வாறே ந.ச.ச.க. அதற்கு வழங்கும் முண்டையும் பற்றி நாம் தொழிலாளர் வர்க்கத்தை எச்சரிக்கை செய்கின்றோம்.

பிறப்பில் இருந்தே இந்த பப்லோவாத அமைப்பு இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் அது பிணைந்து கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகளதும் அவசியங்களின் பேரில் நனவான முறையில் சேவை செய்த ஒரு அமைப்பாகும். சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியே தள்ளப்பட்ட சந்தர்ப்பவாத புள்ளிகளை கொண்டு அமைக்கப்பட்ட இந்தக் கட்சி கிளர்ச்சிகண்டு வந்த பொதுமக்களை தவறான வழியில் திருப்பும் ஒரு நனவான ஏஜன்சியாக செயற்பட்டது. சகல தீர்க்கமான கட்டங்களிலும் இக்கட்சி அந்த விதத்தில் செயற்பட்டுள்ளது. இரண்டொரு சந்தர்ப்பங்களை எடுத்துப் பார்ப்போம். ஜயவர்தன அரசாங்கம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட சமயத்தில் ந.ச.ச.க. அவருடன் வட்டமேசை பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டது. 1987ல் இந்திய ஆக்கிரமிப்பு இராணுத்துக்கு வழிவகுக்க பங்குகொண்டு, ஆதரவு வழங்கியது. 1987 90 காலத்தில் ஒரு புறத்தில் யூ.என்.பி.யுடனும் மறுபுறத்தில் ஜே.வீ.பி.யுடனும் அணிதிரண்டது.1994ல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரத் தோள்கொடுத்த அமைப்புக்களில் ந.ச.ச.க.வும் ஒன்று.

இந்த பப்லோவாத அமைப்பு தொழிற்படுவது சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாளர் வர்க்கத்தை முதலாளி வர்க்கத்தில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமாக்கி . அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்ட முன்னெடுக்கும் போராட்டத்துக்கு முற்றிலும் எதிராகவாகும். இந்த குட்டி முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளை அரசியல் ரீதியில் தோற்கடித்து, தொழிலாளர் வர்க்கத்தின் முன்நோக்கை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு நா.அ.அ.கு.முன்னெடுக்கும் போராட்டத்தில் இணையுமாறு நாம் வேண்டுகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



# ஸ்டாலினின் பயங்கரங்கள் பற்றிய மாபெரும் ஆய்வு வெளிவந்துள்ளது

சோசலிச சமத்துவக் கட்சி பேராசிரியர் வடிம் றொகோவின் எழுதிய "1937: ஸ்டாலினின் பயங்கரத்தின் ஆண்டு "என்ற நூல் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தியை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது. சோவியத் யூனியனின் வரலாற்றில் மிகவும் துன்பகரமானதும் சோகம் நிறைந்ததுமான ஆண்டு பற்றி ஒரு ரூஷ்ய மார்க்சிச வரலாற்று ஆசிரியர் செய்த மாபெரும் ஆய்வு இதுவாகும்.

பேராசிரியர் றொகோவின் சோவியத் மூல சாதனங்களைப் பற்றிய அண்மையில் மட்டுமே வெளியிடப்பட்ட சுவடிக்கூட பத்திரங்கள் உட்பட ஒரு அறிவுக் களஞ்சியமாக விளங்குகின்றார். அவர் ஸ்டாலினின் பயங்கரங்களிற்கான காரணங்கள், தாக்கங்கள், விளைவுகள் பற்றி எல்லாம் தெளிவானதும் விரிவானதுமான ஆய்வுகளை முன்வைக்கின்றார்.

பயங்கரங்களை 1917 அக்டோபர் புரட்சியின் ஒரு தவிர்க்கமுடியாத, நேரடி விளைவாகக் கொண்டுள்ள புகழ்பெற்ற வலதுசாரி வரலாற்றாசிரியர்களான றிச்சார்ட் பைப்ஸ், றொபேட் கொனிகுவஸ்ட்டுக்கு நேர் எதிரான முறையில் றொகோவின் பயங்கரத்தின் முக்கிய தொழிற்பாடும் நோக்கமும் ஸ்டாலினின் அதிகாரத்துவ ஆட்சிக்கு இருந்துவந்த கணிசமான சோசலிச எதிர்ப்பை உடல் ரீதியாக துடைத்துக்கட்டுவதே என்பதைக் காட்டிக் கொண்டுள்ளார்.

"1937: ஸ்டாலினின் மாபெரும் பயங்கரம் "என்ற இந்த நூல் கீழ்வரும் தீர்க்கமான கேள்விகளை எழுப்புகின்றது : ஒரு சமாதான



பேராசிரியர் வடிம் றொகோவின்

காலத்தில் இவ்வளவு பெருந்தொகையான மக்களை ஒழித்துக்கட்ட முடிந்தது எப்படி? இந்த மாபெரும் ஒழித்துக்கட்டலின் தீச்சுவாலையில் ஆளும் தட்டு தாமும் அடியோடு ஒழிந்து போக இடமளித்தது ஏன்? கட்சியில் இந்தப் பயங்கரத்தை தடுக்க முயற்சித்த சக்திகள் இருந்தனவா? ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு ஒரு மாற்றீடு இருந்ததா?

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் பேராசிரியர் றொகோவின் பல சமகால வரலாற்றாசிரியர்கள் பல்வேறு சிந்தாந்தக் காரணங்களுக்காக புறக்கணித்துவிட தள்ளப்படும் தீர்க்கமான அரசியல் புள்ளியை இந்த வரலாற்று துன்பியலின் மையத்தில் இருத்துகின்றார். அவர்தான் லியொன் ட்ரொட்ஸ்கி. பல ஆண்டுகளாக அடக்குமுறைகளுக்கிடையேயும் சோவியத் யூனியனின் உள்ளே கணிசமான ஆதரவும் புரட்சிகர சாத்தியங்களும் கொண்டிருந்த ட்ரொட்ஸ்கியின் செல்வாக்கின் சகல அடையாளங்களையும் துடைத்துக்கட்ட ஸ்டாலின் கொண்டிருந்த திடசங்கற்பத்தில் இருந்து வேறுபடுத்தி ஒழித்துக்கட்டல்களை புரிந்து கொள்ள முடியாது என றொகோவின் வலியுறுத்துகின்றார்.

பேராசிரியர்.றொகோவின் தத்துவ விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். அத்தோடு மாஸ்கோவில் உள்ள ரூஷ்யன் விஞ்ஞான அக்கடமியின் சமுகவியல் நிறுவனத்தின் ஒரு முன்னணி ஆராய்ச்சியாளர்..அவர் மாஜி.சோவியத் யூனியனின் அரசியல் இயக்கங்களின் வரலாறு உட்பட்ட 250 நூல்களை எழுதியுள்ளார். கலாநிதி.றொகோவின் ஸ்டாலினிச ஆட்சிக்கு இருந்துவந்த சோசலிச அடிப்படையிலான எதிர்ப்பு பற்றி உலகம் பூராவும் விரிவுரைகள் நிகழ்த்தியவர்.

"1937: ஸ்டாலின்ஸ் இயர் ஒப் ரெரர் " என்ற இந்நூல் 1922 1940 இடைப்பட்ட காலத்தில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் உள்ளும் இடம்பெற்ற அரசியல் முரண்பாடுகளின் வரலாற்றைக் கூறும் 6 தொகுதிகளைக் கொண்ட நூல்களில் முதலில் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டதாகும்.இந்த நூலின் ஐந்து தொகுதிகள் ஏற்கனவே ரூஷ்ய மொழியில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவை ரூஷ்யாவினுள்ளும் பெரும் பிரபல்யம் அடைந்துள்ளன. இந்நூலின் ஆறாவது தொகுதி 1998ன் இறுதிக்குள் அச்சிட்டு வெளியிடப்படும் என




'1937: ஸ்டாலினின் பயங்கரத்தின் ஆண்டு' என்ற புதிய நூல்

எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஆறு தொகுதிகளும் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டு மெஹ்ரிக் புக்ஸ் நிறுவனத்தினால் பிரசுரிக்கப்படும்.

அந்த விதத்தில் இந்த நூல் "சோசலிசம் செத்துவிட்டது" என்ற சமகால பொய்களுக்கு மட்டுமல்லாது

பல தசாப்த கால ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினதும் அவ்வாறே முதலாளித்துவச் சார்பு பிரச்சாரகர்களது பொய்களுக்கும் ஒரு அடியாகும்.584 பக்கங்களைக் கொண்ட இந்நூல் ஸ்டானிசத்தினதும் அதற்கான புரட்சிகர பதிலீடான ட்ரொட்ஸ்கிசத்தினதும் நிஜப் பண்புகளை தொழிலாளர் வர்க்கத்துக்கு விளக்குவதில் முக்கிய பங்களிப்புச் செய்கின்றது.

## சார்க் மகாநாடு பற்றிய தொழிலாளர் நிலைப்பாடு ...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சகல அரசுகளும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலகளாவிய ரீதியில் நிலைநாட்டப்பட்ட ஏகாதிபத்தியத் தீர்வின் ஒரு பாகமாகவே நிறுவப்பட்டன. அரசியல் அதிகாரத்தை தமது கைகளிற்கு மாற்றிக் கொள்வதில் முதலாளித்துவ வர்க்க ஆட்சியைக் காக்கும் பொருட்டு இந்தியாவை இரண்டு அரசுகளாகக் கூறுபோடும் இரத்தம் தோய்ந்த சதிகளில் இறங்க இந்த முதலாளிகள் துணை போயினர்.நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்த முதலாளிகள் தேசிய சுயபூர்த்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்பி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் மந்திரத்தை ஜெபித்து கொண்டனர். ஆனால் இந்த ஆட்சியாளர்கள் எந்த ஒரு சமூகப் பிரச்சினையையும் சரி எந்த ஒரு ஜனநாயகப் பிரச்சினையையும் சரி தீர்த்து வைப்பதில் வெற்றி பெறவில்லை. செய்தது எல்லாம் அவற்றை மேலும் மேலும் உக்கிரமாக்கியதே.

நவீன தொழில் நுட்பத்தின் விருத்தியுடன் உற்பத்தியின் பூகோளமயமாக்கம் வளர்ச்சி கண்டதும் இந்த தேசியவாத திட்டங்கள் சிதறுண்டு போயின.இதனால் இந்திய காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பல தசாப்தங்களாக வைத்து கொண்டாடி வந்த தேசிய பொருளாதார வேலைத் திட்டத்தை முதலாளி வர்க்கம் 1991ல் சுடலைக்கு அனுப்ப நேரிட்டது..அனைத்துலக மூலதனத்துடன் சேர்ந்து உபரி பெறுமானத்தை சுரண்டும் தேசிய பாதைகள் இன்று சிதறுண்டு போய்விட்டன.

பொதுமக்களின் வறுமையையும் வேலையின்மையையும் இந்த முதலாளிகள் அனைத்துலக மூலதனத்தை ஈர்ப்பதற்கான இலாப உழைப்பை விற்றுத்தள்ளுவதற்காக கையாள்கின்றார்கள். மறுபுறத்தில் இவர்கள் வெளிநாட்டு மூலதனத்தை ஈர்ப்பதற்கான போட்டியின் பாகமாக வரி விடுமுறை, சலுகைகளை அள்ளி வழங்குகின்றார்கள்.ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்குக் கொள்ளை இலாபத்துக்கு தனியார்மயம், மூலவளங்கள் விற்பனை உட்பட பொருளாதாரம் முழுமனே திறந்துவிடப்பட்டுள்ளது. பொதுமக்களின் பொதுநல சேவைகள், கல்வி, சுகாதாரம் இவற்றில் ஏதும் எஞ்சி இருப்பின் அவற்றுக்கு அடி தொடுக்கவும் தொழிலுக்கும் சேவை நிலைமைகளுக்கு மிலேச்ச அடி கொடுக்கவும் இந்த முதலாளிகள் ஆயத்தமாகி உள்ளார்கள். இவர்கள் கமிஷன்கள், இலஞ்சம் போன்றவை மூலம் கடைகெட்ட சுரண்டலிலும் ஈடுபட்டுள்ளனர். சமூகத்தில் வறுமை உக்கிரம் கண்டு பொதுமக்கள் பதட்டம் அடைந்துள்ள தென் ஆசியாவின் அனைத்து நாடுகளிலும் இத்தகைய ஒரு நிலைமையே வளர்ச்சி கண்டுள்ளது.

சாக் அமைப்பு என்பது பிராந்தியத்தின் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக முதலாளித்துவ அரசுகளின் பிற்போக்கு ஒன்றியத்தை அமைக்கவும் பூகோளமயத்தினுள் பிராந்தியத்தின் சந்தையில் சுரண்டலுக்கான வாய்ப்பைத் தத்தம் பக்கம் இழுத்துக் கொள்ளவும் முதலாளி வர்க்கத்துக்கு இருந்து கொண்டுள்ள அவசியத்தினால் அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். முதலாவது அவசியத்தையிட்டு இந்த முதலாளித்துவ ஆட்சியாளர்கள் எவரிடையே தன்னும் எந்தவிதமான ஈடாட்டமும் கிடையாது. இரண்டாவதை எடுத்துக் கொண்டால் முதலாளித்துவ ஆளும் வர்க்கங்கள் ஆளுக்கு ஆள் எதிராக கத்தி நீட்டியபடி ஒன்றாக அமர்ந்து கொண்டுள்ளனர்.

இந்தக் கொழும்பு மகாநாட்டின் தருணத்தில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபுக்கும் இடையே அணுவாயுத போட்டி சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறலாம் எனத் தெரிய வருகின்றது.

இலங்கை, மாலைதீவு, நேபாளம், பங்களாதேஷ் முதலிய நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் மறுபுறத்தில் அனைத்துலக மூலதனத்துடன் இணைந்து இந்தியாவினதும் பாகிஸ்தானதும் பெரிய சந்தையில் ஏதேனும் வாய்ப்பைக் கறந்து கொள்ள முடியுமா என வாயைப் பிளந்தபடி உள்ளார்கள். தமது ஆட்சிகளை காக்கும்பொருட்டு இந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் இராணுவ, அரசியல் உதவிகளை எதிர்பார்த்துக் கொண்டுள்ளார்கள்.

இம்முறை இந்த கொழும்பு மகாநாட்டில் இத்தலைவர்கள் கலந்துரையாட உள்ள ஒரு விடயம் 2001ல் தென்ஆசிய பிராந்தியத்தை சுதந்திர வர்த்தக வலயம் ஆக்குவதா இல்லையா என்பதாகும்.இதைக் காட்டிலும் மேலும் பின்தள்ளுவதானது "பின்வாங்கல்" ஆகும் என இலங்கை முதலாளிகள் தெரிவித்துக் கொண்டுள்ளனர். இலங்கை வர்த்தக, கைத்தொழில் சபையின் முதலாளிகள் இந்தியாவிடம் இருந்து சலுகைகளையும் பாகிஸ்தானிடம் இருந்து சந்தை வாய்ப்புக்களையும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சாக் மகாநாட்டையும் அதன் ஒரு வருடகால தலைமை பதவியையும் கொண்டு தமது அரசாங்கத்தின் செல்வாக்கை பலூன் ஆட்டமாக ஊதிக் காட்டவும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தை உக்கிரமாக்கவும் இராணுவ, பொலிஸ் அடக்குமுறையை பலப்படுத்தவும் முயற்சிக்கின்றது. சாக் தலைவர்கள் மகாநாடு இடம்பெறப் போகும் நாட்களுக்கு முன்னரும் பின்னரும் கொழும்பு பெரும் இராணுவ பொலிஸ் பயிற்சிகளின் நகரமாக மாற உள்ளது.

ஒரு அர்த்தத்தில் பார்த்தால் இந்த தென்ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு என்பது உற்பத்தியில் பூகோளமயமாக்கம் தொடர்பான பிராந்திய முதலாளி வர்க்கங்களின் ஆதரவு ஆகும். உலகளாவிய ரீதியில் தேசிய அரச அமைப்பும் அதன் ஒரு பாகமாக இந்த அரைக் காலனித்துவ அரசுகளும் உலகப் பொருளாதாரத்தினதும் உற்பத்திச் சக்திகளது உலகளாவிய அபிவிருத்தியினதும் விலங்குகளாக மாறியுள்ளன. இந்த ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கையை மேலும் மேலும் ஆதாளபாதாளத்தில் தள்ளுவதாக இருக்கும்.உலகப் பொருளாதாரத்தின் ஒரு பாகமாக இந்த பிராந்தியத்தின் பொருளாதார சமூக கலாச்சார அபிவிருத்திகளை அனைத்துலக சோசலிசத்துக்கான போராட்டத்தின் ஒரு பாகமாக முதலாளித்துவ பிற்போக்கு ஆட்சிகளைத் தூக்கி வீசி தென் ஆசிய சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே ஏற்படுத்திக் கொள்ள முடியும்.அனைத்துலக மூலதனத்தின் அவசியத்துடன் பிணைக்கப்பட்ட ஆளும் வர்க்கங்களின் மூலோபாயத்துக்கு எதிராக ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி, செயலில் இறங்கக் கூடிய மூலோபாயம் தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியம். பெருமளவில் உருவில் ஒத்த தாக்குதலுக்கு தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இலக்காகி உள்ளார்கள். அவர்களைப் பிளவுபடுத்த முதலாளி வர்க்கம் இன, மத பேதங்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. இந்த பேதங்களைத் தாண்டி அனைத்துலக அடிப்படையில் முதலாளித்துவத்துக்கு எதிரான பொது போராட்டத்தில் இம்மக்களை ஒன்றிணைக்கக் கூடிய நிலைமைகள் இந்தச் சகல நாடுகளிலும் முன்னர் ஒரு போதும் இல்லாத அளவில் அபிவிருத்தி கண்டுள்ளன.

ஸ்டாலினிஸ்டுகளும் சீர்திருத்தவாதிகளும் பப்லோவாதிகளும் பல்வேறு தீவிரவாதிகளும் தேசிய முதலாளி வர்க்கத்தின் கீழ் இடம்பெறும் "தேசிய அபிவிருத்திக்கு" உதாரணமாக இந்தியாவையும் இலங்கையையும் காட்டி வந்தனர். தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டம் வீழ்ச்சி கண்டதன் பின்னர் இப்போது இந்த சந்தர்ப்பவாதிகள் பூகோளமயமாக்கத்தினுள் பல்வேறு தேசியவாத சூத்திரங்களை முன்வைக்கின்றார்கள். அதன் அடிப்படையில் இந்த முதலாளிகளின் பின்னால் சென்று ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு சிவப்பு ஆடை விரிக்கின்றார்கள்

இன்று இந்நாடுகளில் அவசியமாக இருப்பது என்ன? சோசலிச முன்நோக்கிற்காக இந்தச் சகல நாடுகளிலும் போராடுவதன் மூலம் அனைத்துலக ரீதியில் ஒன்றிணைந்த சோசலிச மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்புவதேயாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகளை கட்சிகளாகக் கட்டியெழுப்புவதன் மூலம் அதற்கான போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். சாக் அமைப்புக்கும் அதன் அங்கத்தவ பிற்போக்கு ஆட்சியாளர்களுக்கும் எதிராக தொழிலாளர், இளைஞர்கள், புத்திஜீவிகள் அதற்கு ஆதரவு காட்ட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# கேமர் றவுஜ் தலைவர் பொல்பொட் மரணம்

கம்போடிய கேமர் றவுஜ் மாஜி.தலைவர் பொல் பொட் ஏப்பிரல் 15ம் திகதி தாய்லாந்து கம்போடிய எல்லையில் மரணமடைந்தார். இது இருபதாம் நூற்றாண்டின் மிகவும் கிடுநடுக்கம் கொண்டதும் இரத்தம் தோய்ந்ததுமான அத்தியாயங்களை ஒரு முடிவுக்குக் கொணர்ந்துள்ளது. கம்போடியாவில் பொல்பொட்டின் மூன்றரை வருட கால ஆட்சிக்காலம் (1975 78) கேமர் றவுஜ் பரந்த அளவிலான படுகொலைகள் , பட்டினி, அடிமை உழைப்பு மூலம் 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்களைப் பலிகொண்டது.

கம்போடியாவில் இடம்பெற்ற மக்கட்படுகொலைகள் ஒரு சிக்கலான வரலாற்று அபிவிருத்தியின் பெறுபேறாகும். இதில் ஸ்டாலினிஸத்தின் நாசகரமான சித்தாந்த செல்வாக்குகள், இந்தோசீன மக்களுக்கு எதிரான அமெரிக்க இராணுவ இரத்தக் களரிகளுடன் இணைந்து வந்தன. இராட்சத கம்பனிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வெகுஜனச் சாதனங்களின் வர்ணனைகளில் இருந்து இந்த வரலாற்றில் எதையும் பொறுக்கி எடுக்க முடியாது. அவை இச்சந்தர்ப்பத்தை பழைய கம்யூனிச எதிர்ப்பு கட்டுக்கதைகளுக்கு புதிய வடிவம் கொடுக்கவும் கம்போடியன் சோக நாடகத்தில் அமெரிக்க பாத்திரத்தை பூசிமெழுகவும் பாவித்தன.

பொல் பொட்டின்( சலோத் சார்) அரசியல் நடவடிக்கைகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஆரம்பமாகின. பிரான்ஸ் கம்போடியாவை தனது இந்தோசீன காலனியின் ஒரு பாகமாக ஆட்சி செய்து வந்தது. கணிசமான அளவு செல்வந்தரான ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த பொல்பொட் பிரான்சில் படிப்பதற்கு 1949ல் புலமைப் டரிசில் பெற்றார். அங்கு அவர் பிரான்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினிச வட்டாரங்களில் இருந்து ஒரு தொகை நண்பர்களை ஈர்த்துக் கொண்டார்.

1953ல் பனாம்பென் திரும்பிய அவர் ஒரு ஆசிரியராகத் தொழில் புரிந்ததோடு கம்போடியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபிதம் செய்வதிலும் ஈடுபட்டார். காலனித்துவ ஆட்சியின் பின்னர் பதவிக்கு வந்த முதலாவது ஆட்சியாளரான இளவரசர் நொடாம் சிஹானுக் அரசாங்கத்தின் பொலிஸ் அடக்குமுறைகளுக்கு முகம்கொடுத்த கட்சித் தலைவர்கள் 1963ல் நாட்டின் கிராமப்புறங்களுக்கு அடைக்கலம் தேடி ஓடினர்.

பொல்பொட் சீன ஸ்டாலினிஸ்டுகளின் கடும் செல்வாக்குக்கு உள்ளாகினர். பிற்காலத்தில் கேமர் றவுஜ் ஆக உருவெடுத்த அமைப்புக்கான அரசியல் முன்நோக்கைத் தயார் செய்ததும் இங்குதான். இந்த கேமர் றவுஜ் ஸ்டாலினிசம், தேசியவாதம், விவசாயி தீவிரவாதங்களைக் கொண்ட மாஓசேதுங் அச்சாறுவாக விளங்கியது. இதற்கும் மார்க்ஸ், எங்கேல்ஸ், லெனினுக்கும் எந்தவிதமான உறவும் கிடையாது.

சாஸ்த்திரீய மார்க்சிசம் தொழிலாளர் வர்க்கத்தினால் ஜனநாயக ரீதியில் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு புதிய சமுதாயத்தை முன் அனுமானிக்கின்றது. அது முதலாளித்துவத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சக்திகளின் உயர்ந்த மட்டத்தைத் தனது விடுகைப் புள்ளியாகக் கொள்ளும். இது கைத்தொழில், விஞ்ஞானம், தொழில் நுட்பம் என்பவற்றின் அபிவிருத்திக்கான பரந்த சாத்தியத்தை முன்அனுமானித்தது. இவை எல்லாம் நகரங்கள், நகர்ப்புற பாட்டாளி வர்க்கம் , சனத்தொகையின் கலாச்சார வாழ்க்கையின் வளர்ச்சியுடன் பிணைந்து கொண்டுள்ளது.

பொல் பொட்டினதும் அவரது வாரிசுகளதும் கருத்துக்களை "மார்க்சிசம்" ஆக வகுப்பதைவிட வேறு சிரிப்புக்கிடமான திரிப்புக்கள் இருக்க முடியாது. 1950பதுகளில் பொல்பொட்டின் நெருங்கிய சகாவான கியூசாம்பன் விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு புராதன விவசாயிகள் சமுதாயத்தை உருவாக்குவதற்கான ஒரு முன்நோக்கை வரைந்தார். அதில் பணமும் கலாச்சாரமும் நகர வாழ்க்கையின் ஏனைய சகல சின்னங்களும் அழிக்கப்படும்.

மாஓவாதிகளைப் போலவே கேமர் றவுஜ் அழைப்புவிடுத்தது தொழிலாளர் வர்க்கத்துக்கு அல்ல. விவசாயிகளுக்கே. சிறப்பாக விவசாயிகளின் மிகவும் பின்தங்கியதும் வறியதுமான தட்டினருக்கு அழைப்பு விடுத்தது. இவர்களே கெரில்லா படைகளின் முதுகெலும்பாகினர். கேமர் றவுஜ் தனது பிராந்தியவாதம். தேசியவாதத்திற்கும் நகர வாழ்க்கைக்கு எதிரான எதிர்ப்பிலும் இந்த சமூகத் தட்டினரின் பார்வையைப் பிரதிபலித்தது.

## அமெரிக்கப் பாத்திரம்

கேமர் றவுஜ் பிரபல்யம் அடைந்தமைக்கு தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அமெரிக்க அரசாங்கங்களே பொறுப்பாகும். இவை 1960பதுகளிலும் 1970பதுகளிலும் இந்தோசீனா பூராவும் ஒரு நீண்டதும் படுகொடுரமானதுமான ஏகாதிபத்திய யுத்தத்தை நடாத்தின. இந்த யுத்தம் இலட்சோப லட்சம் மக்களையும் கைத்தொழில், விவசாயத்தையும் நாசமர்ககியது.

இளவரசர் சிஹானுக் வியட்னாம் யுத்தத்தில் இருந்து தனது நாட்டை அன்னியப்படுத்தி வைக்கும் பொருட்டு ஒரு பக்கம் சாரா கொள்கையை கடைப்பிடித்தார். ஹோசிமிங் பாதை நீளத்தில் வியட்னாமிய விநியோக மார்க்கங்களுக்கு எதிராக தொழிற்பட மறுத்தார். இந்தப் பாதை கிழக்கு கம்போடியா வரை நீண்டு சென்றது. அதே சமயம் அவர் கம்போடிய மண்ணில் இருந்து இயங்கி வந்த வியட்னாமிய படைகளுக்கு எதிராக அமெரிக்கப் படைகள் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து மௌனம் சாதித்து வந்தார்.

நிக்சன் ஆட்சி இறுதியாக 1970 ஏப்பிரலில் சிஹானுக்குடன் உறவை முறித்துக் கொண்டது. அது சீ.ஐ.ஏ.ஆதரவு இராணுவச் சதியை ஆதரித்ததோடு ஜெனரால் லொன் நொல்லை ஆட்சியில் இருத்தியது. சிஹானுக் பீகிங்குக்கு நாடுகடத்தப்பட்டார். ஒரு மாதத்தின் பின்னர் நிக்சன் கம்போடியாவில் 20000 அமெரிக்க , வியட்னாமிய படைகளின் ஆக்கிரமிப்பு பற்றி அறிவித்தான்.

கம்போடியா கேமர் றவுஜை எதிர்த்துச் சண்டையிடும் லொன் நொல் படைகளினதும் தேசிய விடுதலைப் படைகளையும் வட வியட்னாமிய படைகளையும் எதிர்த்துச் சண்டையிடும் அமெரிக்க சைகோன் படைகளதும் யுத்தக் களமாக மாற்றப்பட்டது. நாட்டின் சனத்தொகை உலக வரலாறு கண்டிராத விதத்தில் குண்டு வீச்சில் தோய்த்து எடுக்கப்பட்டது. ஐந்து வருட கால குண்டு வீச்சுக்களில் (1969 73) கம்போடியாவில் 53200 தொன் குண்டுகள் வீசப்பட்டன. இது இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பானில் வீசப்பட்ட குண்டுகளை காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாகும்.

குண்டு வீச்சுக்களாலும் யுத்த நடவடிக்கைகளின் விஸ்தரிப்புக்களாலும் கம்போடிய சமுதாயம் சின்னாபின்னமாக்கப்பட்டது. 1974ல் கம்போடிய தேசிய வருமானத்தில் 95 வீதம் அமெரிக்க உதவிகளில் இருந்து கிடைத்தது. இதில் பெரும் பாகம் ஊழல் இராணுவ அதிகாரிகளின் சாக்குகளுக்குள் சென்றது. 70 இலட்சம் மக்களில் 20 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்தனர். வருடாந்த அரிசி உற்பத்தி 3.8 மில்லியன் தொன்களில் இருந்து 655000 தொன்களாக வீழ்ச்சி கண்டது. கம்போடிய விவசாய நிலங்களில் பெரும்பகுதி இன்னமும் பயிரிட முடியாத அளவுக்கு குண்டுவீச்சுக்களால் நாசமானவையாகவே இருந்து கொண்டுள்ளன.

இந்தச் சமூகப் பேரழிவுக்கான பொறுப்பு நிக்சனையும் அவரது வெளிநாட்டு ஆலோசகராக விளங்கிய ஹென்றி கீசிங்கரையுமே சாரும். கம்போடிய குண்டு வீச்சுக்கள் இரகசியமாகவும் , சட்டவிரோதமாகவும் நடாத்தப்பட்டன. நிக்சன் ஆட்சியாளர்கள் ஒரு சமாதானமானதும் நடுநிலையானதுமான ஒரு நாட்டுக்கு எதிராக யுத்தம் நடாத்த அரசியலமைப்புச் சட்ட அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்தக்



பொல்பொட்

குண்டுவீச்சுக்கள் பற்றி நிக்சன் நிர்வாகம் அமெரிக்க காங்கிரசுக்குத் தன்னும் அறிவிக்காது இருந்தது. காங்கிரஸ் 1973 ஏப்பிரலில் அமெரிக்க தரைப்படைகள் வியட்னாமில் இருந்து வாபஸ்பெற்றதன் பின்னர் அல்லது தோல்வி கண்டதன் பின்னரே இதைப்பற்றி அறிந்து கொள்ள முடிந்தது.

கம்போடியாவில் அமெரிக்கத் தலையீட்டின் பின்னரே பொல் பொட்டும் கேமர் றவுஜ்சும் பரந்த ஆதரவை வெற்றிகொள்ளத் தொடங்கின. 1970ல் ஒழுங்கற்ற முறையில் திரட்டப்பட்டு நன்றாக ஆயுதபாணியாக்கப்படாத படையாக விளங்கிய கேமர் றவுஜ் 1975 ஏப்பிரலில் சுமார் 70000 படையாக மாறியதோடு இறுதியில் லொன் நொல் சர்வாதிகாரம் தூக்கி வீசவும் பட்டது.

நகர்ப்புற பொருளாதார வாழ்கை தகர்ந்து கொட்டியதோடு மட்டுமன்றி விவசாயிகளின் மிகவும் பின்னேற்றமான தட்டினரை அடிப்படையாகக் கொண்டு கலாச்சார, சமூக ரீதியில் புராதன சமூதாயத் தரப்பினரை அடிப்படையாகக் கொண்டு கேமர் றவுஜின் தலைமையில் இயங்கியதும் நகர்ப்புற வாழ்க்கையுடனோ அல்லது பணப் பொருளாதாரத்துடன் எந்தவிதமான உறவும் கொண்டிராததுமான பாரம்பரிய விவசாயம் கூட தகர்ந்து கொட்டியது. இந்த விதத்தில் கேமர் றவுசுகள் சமகாலத்தின் பேருவின் சென்சேரோ லுமினோசோ இலங்கையின் ஜே.வீ.பி.போன்ற அமைப்புக்களை ஒத்துக் காணப்பட்டன. இவை மத்தியதர வர்க்க புத்திஜீவிகளான தீவிரவாதிகளின் தலைமையில் தலையெடுத்தன. அத்தோடு இவை பாசிசத்தின் திசையில் பயணம் செய்துகொண்டுள்ளன.

கேமர் றவுச் விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட இராணுவத்தின் தலைமையில் ஆட்சிக்கு வந்ததும் அதன் தலைவர்கள் தொழிலாளர் வர்க்க எதிர்ப்பு பண்புகொண்ட கொள்கைகளை அமுல் செய்தனர். இது சோசலிசத்தைக் காட்டிலும் பாசிசத்துடன் பெரிதும் இனங்காணத் தக்கவையாக விளங்கின. பொருளாதாரம் சிதறுண்டுபோய் நகரங்களுக்கு உணவு வழங்க முடியாமலும் விரும்பாமலும் போன ஒரு நிலையில் கேமர் றவுஜுகள் பனாம்பென்னில் இருந்தும் ஏனைய நகரங்களில் இருந்தும் மக்களை அப்புறப்படுத்தும்படி உத்தரவிட்டனர். முழு நகர்ப்புற சனத்தொகையும் தொழிலாளாளர்கள், புத்திஜீவிகள், சிவில் ஊழியர்கள், சிறிய கடைச் சொந்தக்காரர்களும் ஏனையொரும் நாட்டுப்புறங்களுக்கு கலைக்கப்பட்டனர். மிகவும் கொடிய நிலைமைகளின் கீழ் நீர்பபாசனத் திட்டங்களிலும் மற்றும் திட்டங்களிலும் சேவைசெய்யத் தள்ளப்பட்டனர். அடையமுடியாத மட்டத்துக்கு இந்த விவசாய உற்பத்தியை உயர்த்திப்பிடிக்க இவர்கள் தள்ளப்பட்டனர்.

பல்லாயிரக் கணக்கானோர் வேலைச் சுமையினாலும் பட்டினியினாலும் நோய்களினாலும் இறந்தனர். அனைத்து வடிவங்களிலான கலாச்சாரத்துக்கும் புத்திஜீவி வாழ்க்கைக்கும் எதிராகத் தொடுக்கப்பட்ட கொலைகளால் இன்னும் பலர் கொல்லப்பட்டனர். கேமர் றவுஜ்சின் பொருளாதார திட்டங்கள் தவிடுபொடியாகி போனதன் காரணமாகத் தோன்றிய படுமோசமான கன்னை தகராறுகளினால் இன்னும் பலர் கொல்லப்பட்டனர். அரசியல் அதிகாரத்தின் மீதான இதன் தாக்கம் மிகவும் பதட்டமான நிலைமையை உருவாக்கியது.

கம்போடியன் தலைமையின் தேசியவாத மோதுதல்கள் வியட்னாமிய இனக் குழுக்களுக்கு எதிரான தாக்குதல்களை நடாத்தியது. கேமர் றவுஜ் படைகள் கம்போடிய வியட்நாம் எல்லையில் வாழ்ந்த வியட்னாமியர்களுக்கு எதிராக இரத்தம் தோய்ந்த தாக்குதல்களை நடாத்தியது. ஒரு வருடகாலம் இடம்பெற்ற இத்தகைய தாக்குதல்களைத் தொடர்ந்து ஹனொய் அரசாங்கம் ஒரு முழு அளவிலான வியட்னாமிய ஆக்கிரமிப்புக்கு 1978 டிசம்பரில் உத்தரவிட்டது. இது கேமர் றவுஜ் படைகளை வெற்றியிட்டச் செய்ததோடு இன்றைய ஆட்சியாளரான பிரதமர் ஹுன் சென்னை பனாம் பென்னில் இருத்தியது.

## அமெரிக்க பாது காப்பின் கீழ் பிரமாண்டமான கொலையாளி

இந்தச் சீரழிவுகளுக்குப் பின்னால் கேமர் றவுஜ் அடியோடு சின்னாபின்னமாகிப் போகாது இருந்திருக்குமானால் அதற்குக் காரணம் அது சக்திவாய்ந்த ஆதரவாளர்களைக் கொண்டிருந்ததேயாகும். வியட்னாம் கம்போடியா மீது நடாத்திய ஆக்கிரமிப்புக்குப் பதிலடியாக சீனா வியட்னாம் மீது இராணுவத் தாக்குதலை நடாத்தியது. அமெரிக்க கார்ட்டர் அரசாங்கத்தின் ஆதரவுடனேயே இதை நடாத்தியது.

கம்போடியா மீது வியட்னாம் நடாத்திய தாக்குதலுக்கு மத்தியில் டெங்ஷியாவோ பிங் 1979 ஜனவரியில் வாஷிங்டனுக்கு விஜயம் செய்தார். இந்த தாக்குதலை அமெரிக்காவும் வியட்னாமும் கண்டனம் செய்திருந்தன. இரண்டு மாதங்கள் செல்வதற்குள் சுமார் 10 இலட்சம் சீனத் துருப்புக்கள் வியட்னாம் வடக்கு எல்லைப்புறமாக தாக்குதலை நடாத்தின.

அமெரிக்க அரசாங்கம் மிகவும் தீர்க்கமான பாத்திரத்தினை வகித்தது. வியட்னாம் சோவியத் யூனியனுடன் கூட்டுச் சேர்ந்து இருந்ததால் அது பொல்பொட்டை ஒரு உபயோகமான குளிர்யுத்தகால சகாவாகக் கண்டது. அமெரிக்காவின் ஆதரவுடன் சீனா கேமர் றவுஜுக்கு இராணுவத் தளபாடங்களை விநியோகித்தது. தாய்லாந்து வலதுசாரி இராணுவ ஆட்சியாளர்கள் ஒரு அமெரிக்க கைக்கூலி அரசு தாய்லாந்து கம்போடிய எல்லை நீளத்துக்கு பொல்பொட் கெரில்லாக்களுக்கு இராணுவ விநியோகங்கள் பெருக்கெடுக்க அனுமதி வழங்கியது.

அமெரிக்க ஜனாதிபதி கார்ட்டரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான பிரசென்ஸ்கி பின்னர் ஒப்புக் கொண்டது போல் " நான் சீனாவை பொல்பொட்டை ஆதரிக்கும் படி ஊக்குவித்தேன். கம்போடியன் மக்களுக்கு எப்படி உதவுவது என்பதே பிரச்சினையாக இருந்தது. பொல்பொட் ஒரு இழிவானவர். நாம் ஒரு போதும் அவரை ஆதரிக்க முடியாது. ஆனால் சீனா ஆதரிக்கலாம். "

கேமர் றவுஜை ஒரு சட்டரீதியான அரசாங்கமாக அங்கீகரித்து அமெரிக்காவும் மற்றும் ஏகாதிபத்திய சக்திகளும் பொல்பொட் பிரதிநிதியை கம்போடியன் பேராளராக ஒரு தசாப்தத்துக்கு மேலாக ஐ.நா.வில் அமர்த்த ஆதரவளித்தமை இராஜதந்திர ஆதரவாகும். 1980பதுகள் பூராவும் றீகன் ஆட்சியாளர்கள் 1975 78காலப்பகுதியில் கம்போடியாவில் இடம்பெற்ற சம்பவங்களை மனிதப் படுகொலைகளாக பண்பாக்கம் செய்வதையோ அல்லது கேமர் றவுஜ் தலைமையை பரந்த கொலைகளுக்கான பொறுப்பாளிகளாக்கும் அனைத்துலக முயற்சியையோ தடைசெய்தது. ஏனெனில் இது பொல் பொட்டுடனான அமெரிக்க உறவுகளைப் பாதிக்கும் என கருதியதே இதற்குக் காரணம்.

இன்னொரு முக்கியமான விடயமும் உண்டு. அமெரிக்காவும் மற்றும் ஏகாதிபத்திய நாடுகளும் கேமர் றவுஜுக்கு வழங்கிய இராஜதந்திர ஆதரவை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவை கேமர் றவுஜை கம்போடியாவின் சட்டரீதியான அரசாங்கமாக அங்கீகரித்ததோடு ஒரு

18ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# பிரித்தானிய-அயர்லாந்து ஒப்பந்தம்: கோஷ்டி பிளவுகளை ஸ்தாபிதம் செய்கின்றது

ஏப்பிரல் 10ம் திகதி வட அயர்லாந்தின் எதிர்காலம் பற்றி பிரித்தானிய , அயர்லாந்து அரசாங்கங்களுக்கிடையே கைச்சாத்தான உடன்படிக்கை – இந்தச் "சமாதான திட்டம்" அயர்லாந்து தொழிலாளர் வர்க்கத்தினதோ, கத்தோலிக்க புரட்டஸ்தாந்தியர்களதோ அல்லது எல்லைக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ளவர்களதோ நலன்களை எந்த விதத்திலும் பிரதிபலிப்பதாக இல்லை.

இந்த உடன்படிக்கை அல்ஸ்டர் யூனியனில்ட் கட்சியினதும் சமூக ஜனநாயக தொழிற் கட்சியினதும் சின்பின் தலைமையினதும் பரா இராணுவ குழுக்களதும் ஆதரவை வென்றி கொண்டுள்ளது. பெரும் அரசியல் குழுக்களுள் இயன் பெயிஸ்லியின் தீவிர வலதுசாரி ஜனநாயக யூனியனிஸ்ட் கட்சி மட்டுமே இதை எதிர்த்துள்ளது.

இக்கட்சிகளின் முழு ஆதரவுக்கிடையேயும் இந்தப் புதிய உடன்படிக்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் பல நூற்றாண்டுகளாக விதைக்கப்பட்ட கோஷ்டி மோதுதல்களை முடிவுக்கு கொணர்வதற்கு எந்தவிதமான அத்திவாரமும் இடுவதாக இல்லை. அயர்லாந்தின் அடிப்படைப் பிளவுகள் மத, இன அடையாளங்கள் காரணமாக ஏற்பட்டவை என்ற கருத்தை இந்த உடன்படிக்கை அங்கீகரிக்கின்றது. வட அயர்லாந்தை யூனியனிஸ்ட், அயர்லாந்து தேசியவாதிகள் "சமூகங்களாக" பிரிப்பதன் அடிப்படையில் ஒரு தொகை அரசியலமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

ஐரிஸ் குடியரசுவாதிகள் வட அயர்லாந்தின் 6 மாகாணங்களுக்கான தமது கோரிக்கையை கைவிட உள்ளன. அதற்குப் பதிலாக ஆட்சி நடவடிக்கைகளிலும் அயர்லாந்து ஒன்றணைக்கப்படுவதன் சாத்தியம் குறித்து ஏழு ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெற உள்ள கருத்துக் கணிப்பிலும் பங்கு கொள்ளும். வடக்கு தெற்கு அமைச்சரவைகளதும் ஆளும் சபைகளதும் தலைமையிலான சபைகள் பொது அக்கறைக்குரிய பிராந்தியங்களை நிர்வகிக்கும்.

ஒரு புதிய வட அயர்லாந்து சபையானது ஜனநாயக சுய ஆட்சியைக் குறிக்கும் அடிப்படைப் பாராளுமன்ற அவையைக் குறிக்கும். "முக்கிய தீர்மானங்கள் கூட்டு சமூக அடிப்படையிலேயே எடுக்கப்படும்" என உடன்படிக்கை குறிப்பிடுகின்றது. இந்த வகையில் பிரதிநிதிகள் சபை அதனது முதல் கூட்டத்தில் ஒரு அடையாள பதவிகளை தேசியவாதிகள், கூட்டாட்சியினர் அல்லது ஏ!னையோர் பதிவு செய்யும் . பிரதிநிதிகள் சபையில் சமூகங்களிற்கு இருந்து கொண்டுள்ள கலப்பு ஆதரவை கணக்கிடும் நோக்கத்துடன் இது செய்யப்படும்.

இந்த உடன்படிக்கையின் பேரில் இறுதி நிமிடத்தில் செய்து கொள்ளப்பட்ட சேர்க்கையின் படி உத்தேச விகிதாசார பிரதிநிதித்துவ சபையில் ஒரு ஆசனத்தை வெற்றி கொள்வதற்கு அவசியமான வாக்குக்கள் 17 வீதத்தில் இருந்து 14 வீதத்துக்கு குறைக்கப்பட்டது. இந்தச் சிறிய மாற்றம் ஒரு அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. இன்றைய வாக்களிப்பு முறையின்படி இது பிரதிநிதிகள் சபையில் சிறிய யூனியனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை உத்தரவாதம் செய்கின்றது. அதே சமயம் சமய அடிப்படையில் இயங்கும் மகளிர் கூட்டணி, வட அயர்லாந்து தொழிற்கட்சி போன்ற கட்சிகளை தள்ளி வைக்கின்றது.

வட அயர்லாந்தில் கத்தோலிக்க சிறுபான்மையினரதும் புரட்டஸ்தாந்து பெரும்பானமையினரதும் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்கான சின்னமாக தேர்தல், பிரதிநிதிகள் சபை வாக்களிப்பு முறைகள் காட்டப்பட்டுள்ளன. நடைமுறையில் அவை குறுங்குழுவாத பிளவுகளை ஏற்றுக்கொள்வதோடு தீர்வைத் திணிக்கவும் செய்கின்றது. பிரித்தானிய ஏகாதிபத்தியமும் அயர்லாந்து முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் இத்தீவில் தமது மேலாதிக்கத்தைத் தொடர்ந்து திணிக்கச் சுரண்டி வந்தவையாகும்.

இந்தச் சிக்கலான வாக்களிப்பு முறையானது சகல தீர்மானங்களும் இன்று இருந்து வரும் இன, மத வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டதும் அவற்றுக்கு அழைப்புவிடுக்கின்றதுமான கட்சிகளின் ஆதரவு கிடைப்பதை உத்தரவாதம் செய்கின்றது. இது இந்தப் பிளவுகளையும் வேறுபாடுகளையும் தாண்டி ஒரு சோசலிச, அனைத்துலகவாத தொழிலாளர் வர்க்க ஐக்கியத்துக்காக போராடும் எந்த ஒரு அரசியல் இயக்கத்துக்கும் எதிரான முன்கூட்டிய தாக்குதலாகும். பொதுவர்க்க நலன்களை காக்கும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் ஒரு அமைப்பு ஓரங்கட்டப்படுவதோடு அதன் ஆதரவாளர்களின் வாக்குக்களும் ஒரு இரண்டாந்தர அந்தஸ்துக்குத் தள்ளப்படும்.

இந்த உடன்படிக்கையின் சிறப்பு முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதற்கு ஒருவர் இந்தக் கட்சிகளை ஒருங்கு கூட்டவும், அவற்றின் வாதப்பிரதிவாதங்களின் பண்புகளை உருவமைத்ததுமான பொருளாதார, சமூக உந்து சக்திகளை ஆய்வு செய்தாக வேண்டும். பொருளாதார வாழ்க்கையின் பூகோளரீதியிலான தன்மையின் வளர்ச்சியும் உலகளாவிய ரீதியில் இயங்கும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் வளர்ச்சியும் மூலதனத்தின் அனைத்துலக ரீதியான பெயர்ச்சியும் பெரும் தேசிய பொருளாதாரங்களின் மீது கூட உலகச் சந்தையின் ஆதிக்கமும் அனைத்துலக மூலதனத்தின் நிலைப்பாட்டில் இருந்து இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஆதிக்கத்தில் இருந்து வந்த பல அரசியல் உறவுகளையும் காலவதியானதாக்கிவிட்டது.

பழைய அரசியல் உறவுகளுக்கும் பரந்த சந்தைகளுக்கும் மூலப் பொருட்களுக்கான புதிய மூலங்களையும் பொதுவில் பூகோளரீதியான பொருளாதாரத்தினை ஈட்டிக் கொள்வதற்கான ஒன்றிணைக்கப்பட்ட, நிதி நலன்களின் அவசியங்களுக்கும் இடையேயான வேறுபாடுகளும் தென் ஆபிரிக்காவில் சட்டரீதியான இனஒதுக்கலை சிதறடிக்கச் செய்ததற்கும் மத்திய கிழக்கில் ஒரு புதிய அரசியல் நிலைமையினுள் பீ.எல்.ஓ.வை இணைத்துக் கொண்டதற்கும் அடிப்படையாக உள்ளது. இதே சக்திகளே வட அயர்லாந்திலும் மூலதன முதலீடுகளுக்கும், இலாப உழைப்புக்கும் தடையாக இருந்து கொண்டுள்ள பழைய தடைகளை தாண்டுவதில் முன்னணியில் உள்ளன.



சின்பின் தலைவர் ஜெரி அடம்ஸ்

அடுத்த ஆண்டில் ஈரோ நாணயம் உட்பட்ட (Euro currency) ஐரோப்பிய பொருளாதார ஒருங்கிணைப்பின் அழுத்தங்கள் ஆயுத மோதுதல்களுக்கு முடிவு கட்டுவதையும் அனைத்துலக, உள்நாட்டு மூலதனங்களுக்கு தடையாக உள்ளவற்றை அகற்றுவதற்கான அழுத்தங்களை அதிகரிக்கச் செய்துள்ளது. இதன் மூலம் மலிவானதும் பயிற்சிபெற்றதுமான உழைப்பின் விநியோகத்துக்கு கதவுகள் திறந்து விடப்படும் என ஏகாதிபத்தியவாதிகள் எதிர்பார்க்கின்றனர். அத்தோடு கண்ட ரீதியான சந்தை வாய்ப்புக்களும் திறந்துவிடப்படும் என எதிர்பார்க்கின்றனர்.

பிரித்தானிய , ஐரிஸ் , அமெரிக்க அரசாங்கங்களை இந்த உடன்படிக்கையை உருவாக்கச் செய்தது என்ன? அவற்றின் அடிப்படை நோக்கங்கள் என்ன?

பிரித்தானிய ஆளும் வர்க்கம் அயர்லாந்து அரசாங்கத்துடன் எல்லைக்கு குறுக்கேயான ஆரம்பிப்புக்களை அபிவிருத்தி செய்து வைக்க முயற்சிக்கின்றது. இதன்மூலம் வடக்கு ஐரோப்பாவில் முக்கிய மலிவு உழைப்பு சுரங்கத்தில் கூடிய பிரிததானிய மூலதனத்தின் மூலம் இலாபம் உழைக்க முயற்சிக்கின்றது. வட அயர்லாந்தின் பொருளாதார வீழ்ச்சி எனக் கூறும் போது அது பிரித்தானியா ஆண்டு ஒன்றுக்கு 3.2 பில்லியன் ஸ்டேர்லிங் பவுண்களை பாதுகாப்புக்கும், நலன்புரி செலவுகளுக்கும் மானியமாகச் செலவிடுகின்றது. சுருங்கச் சொன்னால் ஒரு ஆளுக்கு 2000 ஸ்டேர்லிங்குகளை (ரூபா. 200000)



அயர்லாந்து வீதிகளில் இராணுவ பயங்கரங்களில் ஈடுபட்டுள்ள பிரித்தானிய இராணுவம்

www.padippakam.com



# யாழ்ப்பாணத்தில் மாபெரும் மனித புதைகுழிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்ட மக்கள் பொதிகளில் கட்டப்பட்டு

யாழ்ப்பாண நகரில் இருந்து 3 கி.மீட்டர் தொலைவில் உள்ள செம்மணி இராணுவக் காவல் நிலையத்துக்கு அருகே புதைக்கப்பட்டனர்.

கடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் இங்ஙனம் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட புதைகுழிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பிராந்தியத்தினுள் இருந்து வருவது நிச்சயம்.செம்மணி அவற்றுள் ஒன்றாகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவை வைத்துக் கொண்டு இத்தகைய சம்பவங்களை பூசி மெழுகும் கையாலாகாத்தனமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. தற்காலிக நீதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டுபுள்ளேயிடம் முன்னணி புதினப் பத்திரிகையொன்று இந்த விடயம் தொடர்பாக கேட்டபோது அவர் வழங்கியுள்ள பதில், அரசாங்கத்தின் கடைகெட்ட முயற்சியை அம்பலமாக்கியுள்ளது. அமைச்சர் கூறியது இதுதான்: "சில உயர் (இராணுவ) அதிகாரிகளை பழிவாங்கும் பொருட்டு படையாட்கள் ஆத்திரத்தில் இந்த அறிக்கையை விடுத்து இருக்கலாம். ஆதலால் நாம் இதை மிகவும் கவனமாக ஆய்வு செய்ய வேண்டும் "என்றுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் ஆய்வு என்ற பெயரில் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்பட்ட ஆணைக்குழு வாய்மூடி மௌனிகளாக சென்று எதிர்வரும் வாரத்தில் கோர்ப்பரல் ராஜபக்சவிடம் அறிக்கை பெறும் எனவும் அதன் பின்னர் மேலதிக விசாரணைக்கு ஏதும் கிடைப்பின் சட்டமா அதிபர் விசாரிப்பார்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு விடயம் தெளிவாகியுள்ளது. பெரும் புதைகுழிகள் பற்றி "ஆத்திரத்திரத்திலேயே"குறிப்பிட்டதாக ஒரு அறிக்கையை கோர்ப்பரல் ராஜபக்சவிடம் இருந்து பெறும் திட்டம் இருந்து கொண்டுள்ளது. இதை நனவுள்ள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

1995 ஏப்பிரலில் பொதுஜன முன்னணி அரசாங்கம் ரிவிரச இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் யாழ்ப்பாணக் குடாநாட்டினைக் கைப்பற்றும் யுத்தத்தை பல கட்டங்களில் நடாத்தியது. அது முன்னொருபோதும் இல்லாத மிலேச்ச இராணுவ நடவடிக்கையாகும். யுத்த டாங்கிகள், பீரங்கிகள் பொருத்தப்பட்ட புல்டோசர்கள், குண்டுவீச்சு விமானங்கள், கடற்படைக் கப்பல்களின் துணையோடு இடம்பெற்ற இந்த இராணுவ நடவடிக்கையின் போது இலட்சக் கணக்கான மக்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் இடம்பெயர்ந்து செல்ல நேரிட்டதோடு வன்னிக்கும் ஓட்டமெடுக்க நேரிட்டது. பலர் இத்தாக்குதல்களுக்கு பலியாகினர். யாரேனும் எஞ்சி இருந்திருப்பின் அவர்கள் இடம்பெயர்ந்து செல்ல இலாயக்கற்று மரணத்தை எதிர்பார்த்து இருந்தவர்களே. இத்தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத அமைப்பின் படையாட்கள் இறந்திருப்பின் ஒரு சிலரே. அவர்கள் தமது யுத்த உபகரணங்களோடு வன்னிக் காட்டுப் புறமாகப் பின்வாங்கினர்.

இதைத் தொடர்ந்து இராணுவம் இடம்பெயர்ந்த மக்களை பட்டினி, தொற்று நோய்களுக்கும் இன்னும் சில வேளைகளில் காட்டுமிராண்டி விமானத் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கியது. மீட்கப்பட்ட பிராந்தியங்களுக்கு மக்கள் ஜனநாயக உரிமைகளும் வாழ்க்கைக்கான மார்க்கங்களும் வழங்குவோம் என்ற வாக்குறுதிகளுடன் மீள அழைத்துச் செல்லப்பட்டனர். மக்களில் பலர் விடுதலைப் புலிகளின் காட்டுமிராண்டி ஒடுக்குமுறைகளில் இருந்து தலைதப்பும் அவசியத்துடனேயே திரும்பிச் சென்றனர் என்பதைக் கூற வேண்டியதில்லை. ஆனால் அவர்கள் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு உள்ளாகினர். யாழ்ப்பாணமும் அதை அண்டிய பகுதிகளும் புல்டோசர்களைக் கொண்டு நிர்மூலமாக்கப்பட்ட கட்டிடங்களின் அழிபாடுகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட பண்ட் டினால் சுற்றி வளைக்கப்பட்ட "திறந்த சிறை முகாம்" ஆகியுள்ளது. இந்த பண்ட் நீளத்துக்கு இராணுவம் நிலக் கண்ணி வெடிகளை புதைத்துள்ளதோடு யாழ்ப்பாண நகரத்தினுள் செல்வோர் இராணுவ பொலிஸ் காவல் நிலைய நுழைவாயல்களின் ஊடாக மட்டுமே செல்ல முடியும்.இப்பகுதிதினுள் 50 அல்லது 100 மீட்டருக்கு ஒன்றாக வாகனங்களை சோதனையிடும் காவல் நிலையங்கள் இருந்து கொண்டுள்ளன.

இத்துடன் இராணுவ ஆட்சியை தொடர்ந்து பராமரிக்கும் பொருட்டு வீடுகளுக்குள் பாய்ந்து விழுவதும் கடத்திச் செல்வதும் இடம்பெறுகின்றது. சுமார் 700 தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் வளர்ந்தோரும் காணாமல் போயுள்ளதாக தமிழ் பொதுமக்களும் தமிழ் முதலாளித்துவ அரசியல் கட்சிகளும் குற்றம் சாட்டுகின்றன. காணாமல் போன 600 பேர் பற்றி தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. காணாமல் போனவர்களின் பெற்றோர் . பிள்ளைகளின் அமைப்பினது நெருக்குவாரத்தின் பேரில் அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழு 170 பேர் பற்றிய தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக அறிவித்துள்ளது. ஏனைய சகலரும் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் எனவும் தகவல் கிடைக்காத சிலர் காணாமல் போய் இருக்கலாம் எனவும் பொதுமக்கள் நம்புகின்றார்கள்.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியும் அவரது குடும்பத்தினரும் கடத்தப்பட்டது, கற்பழிக்கப்பட்டது, கொலைசெய்யப்பட்டது இந்தக் காட்டுமிராண்டி பயங்கரத்தின் ஒரு சம்பவமாகும். பொதுமக்கள் கொதித்து எழுந்த ஒரு நிலையில் அதைப் பற்றி விசாரிக்கவும் அதை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட் இராணுவப் படையாட்களை நீதியின் முன் நிறுத்தவும் அரசாங்கத்துக்கு நேரிட்டது. முன்னைய யூ.என்.பி.அரசாங்க காலத்தில் போலவே இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழும் பலிகடாக்கள் தேடும் படலங்களால் அதன் கை இரத்தம் தோய்ந்து போயுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கம் மனித உரிமைகள் 'காப்பது பற்றிய சாதனைகள் கொண்ட மோசடி அறிக்கைகளை சிருஷ்டித்துக் கொண்டுள்ளது. இந்தப் பரந்த புதைகுழிகள் பற்றி இராணுவ அதிகாரியிடம் இருந்து தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு அதைச் சிதறடித்த ஒரு அடியாகும். அவ்வாறே இந்தப் பயங்கரத்தின் மூலம் ,தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் ஒரு சம்பவம் ஆகியுள்ளது.இந்தப் பயங்கரத்தின் மூலமாக பொதுஜன முன்னணி அரசாங்கம் காட்டுமிராண்டித்தனமான முறையில் நடாத்திச் செல்லும் இனவாத யுத்தமும் அதனூடாக யாழ்ப்பாணத்தில் திணிக்கப்பட்டுள்ள இராணுவ ஆட்சியும் இருந்து கொண்டுள்ளது.

பொதுமக்கள் காணாமல் போவதும் பெருமளவில் கொலை செய்யப்படுவதும் கங்கைகளிலும் பெரும் புதைகுழிகளில் தள்ளப்படுவதும் கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கை முதலாளி வர்க்க ஆட்சியின் இரத்தம் தோய்ந்த வரலாறாக இருந்து கொண்டுள்ளது. இவை வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு எதிரான யூ.என்.பி.அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துடன் ஆரம்பமானவை. 1987 90 காலப்பகுதியில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களை கையளித்து, தென் மாகாணங்களில் ஜே.வீ.பி.கலகத்தை அடக்கியதன் மூலம் 60000 கிராமப்புற இளைஞர்களை கடத்திச் சென்று படுகொலை செய்ததோடு அதில் ஆயிரக்கணக்கானோரை மாபெரும் புதைகுழிகளிலும் தள்ளியது. எம்பிலிப்பிட்டி சூரியகந்த புதைகுழி அவற்றில் ஒன்றாகும். தெற்கில் சகல மாகாணங்களிலும் அத்தகைய புதைகுழிகள் உள்ளன. பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்காக யூ.என்.பி.யின் இத்தகைய மாபெரும் புதைகுழிகளை பற்றி முதலைக் கண்ணீர் வடித்ததோடு யூ.என்.பி.பயங்கரத்தை ஒழித்து மனித உரிமைகளை காப்பதாக மோசடி வாக்குறுதிகளையும் வழங்கியது. இதனை பொதுமக்களின் கண்களில் மண்போடும் துரும்பாக்கிக் கொண்டது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறி ஒரு ஆண்டு கழிவதற்குள் இனவாத யுத்தம் ஆரம்பமானதோடு முன்னொரு போதும் இல்லாத பயங்கரம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்டது. அதையே தென் மாகாணங்களில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளுவதற்கு பயன்படுத்திக் கொண்டுள்ளது. உக்கிரம் கண்டுவரும் பொருளாதார அரசியல் நெருக்கடியின் மத்தியில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கான நிலைமைகளை வெகு வேகமாக சிருஷ்டித்து வருகின்றது. மக்கள் போராட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப் பயிற்றப்பட்ட இராணுவமும் பொலிசும் அதற்கெனக் கையாளப்பட்டு வருகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பீ.ஆர்.எல்.எப். ஈ.பீ.டி.பி.போன்ற தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் இந்த புதைகுழிகள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை "உடனடியாக விசாரணை செய்யும்படி" ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளன.அதனை அரசாங்கத்தின் கடமையாகவும் பொறுப்பாகவும் அவை குறிப்பிட்டுள்ளன. ஆனால் இந்த அமைப்புக்கள் பற்றி கொஞ்சமேனும் குறிப்பிடுவதானால் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்ந்[illegible] அதன் அரசியல் தீர்வு பொ[illegible]க்கும் யுத்தத்துக்கும் ஆதரவு வழங்குவதன் மூலம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பயங்கரத்துக்கும் இந்த அமைப்புக்களும் பொறுப்புச் சொல்லியாக வேண்டும்.

விடுதலைப் புலிகள் பொதுஜன முன்னணியின் பயங்கரங்களை தமிழ் மக்களின் "விடுதலை போராளி" தாம் எனக் காட்டிக் கொண்டு, அவர்களின் மீது ஒடுக்குமுறைப் பிடியைத் தொடர்வதற்கு பயன்படுத்திக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் தலைமீட்டுடன் தனி நாடு அமைக்கும் எதிர்பார்ப்புக்களுடன் விடுதலைப் புலிகள் நடாத்தும் பிரிவினைவாத இயக்கத்தின் மூலம் பொதுமக்கள் முட்டுச் சந்தினுள் தள்ளப்பட்டு உள்ளனர்.

கடந்த ஏப்பிரல் மாதம் இலங்கைக்கு வந்த கிளின்டன் அரசாங்கத்தின் சிறப்பு பிரதிநிதியான பில் றிச்சார்ட்சனும் இராஜாங்கத் திணைக்களத்தின் கார்ள் இன்டர்பேர்த்தும் மனித உரிமைகள் பற்றிய பிரச்சினை தோன்றி இருப்பினும் யுத்தத்தின் மத்தியில் அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டுள்ள விதத்தைப் பாராட்டியதன் மூலம் பயங்கரத்துக்கு அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் அங்கீகாரத்தை வெளிப்படுத்தினர்.

# எம்பிலிப்பிட்டி தொழிலாளி மரணம்: பொதுஜன முன்னணியின் மற்றொரு பலிகடா

பல கோரிக்கைகளின் பேரில் உண்ணாவிரதம் செய்து வந்த மகாவலி பொருளாதார ஏஜன்சியின் எம்பிலிப்பிட்டி பிரிவைச் சேர்ந்த நான்கு தொழிலாளர்களுள் ஒருவரான டீ.கே.வில்பேட்(55வயது) ஜூன் 25ம் திகதி எம்பிலிப்பிட்டி ஆஸ்பத்திரியில் காலமானார். இந்தத் தொழிலாளியின் மரணம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளி வர்க்கத்தினதும் இலாப வெறி வேலைத்திட்டத்தின் புதிய பலியெடுப்பாகும்.

வில்பேட்டின் மரணமும் மற்றும் தொழிலாளர்களின் உண்ணாவிரதமும் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் நஷ்டஈடு பெற்றுக் கொண்டு சேவையில் இருந்து இழைப்பாறும் தீர்மானம்,தொழிலாளர் வர்க்கத்தினுள் இருந்து வரும் ஆழமான முன்நோக்கு நெருக்கடியையும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா.கட்சிகளதும் தொழிற்சங்கத் தலைவர்களது வங்குரோத்தையும் பிற்போக்கையும் பிரத்தியட்சமாக்கிக் கொண்டுள்ளது.

இந்த எம்பிலிப்பிட்டி தொழிலாளர்கள் அமைய தொழிலாளர்களை சேவையில் நிரந்தரமாக்க வேண்டும், உரிய சம்பளத்திட்டத்தின் கீழ் நஷ்டஈடு வழங்க வேண்டும். ஊழியர் சேமலாபநிதி உரிய முறையில் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வந்தனர். இந்தப் பிரச்சினைகளுக்கு சுமார் 140 தொழிலாளர்கள் முகம் கொடுத்தனர். இந்த நால்வரின் உண்ணாவிரதப் போராட்டமும் இவர்களின் சார்பிலேயே ஆரம்பமாகியது. வில்பேட் ஜூன் 15ம் திகதி 55 வயதை பூர்த்தி செய்து கொண்டிருந்தார். ஆனால் அவரின் சேவைக் காலம் வழக்கமாக இடம்பெறுவது போல் 60 வயது வரை நீடிக்கப்படாது 55வயதிலேயே ஓய்வு பெறத் தள்ளப்பட்டார். கடந்த ஜூன் 16ம் திகதியில் இருந்து இந்த நிறுவனம் நஷ்டஈடு வழங்கி சுயவிருப்பின் பேரில் சேவை ஓய்வு பெறச் செய்யும் திட்டத்தை அமுலுக்கு கொணர இருந்தது.ஆதலால் அதற்கு முன்னர் ஓய்வு பெறும் வயதை எட்டிய தொழிலாளர்களை உடனடியாக வேலைநீக்கம் செய்து அவர்களுக்கு நஷ்ட ஈடு செலுத்தும் பொறுப்பில் இருந்து தலைதப்பித்துக் கொள்ள அரசாங்கமும் நிறுவனத்தின் நிர்வாகமும் முயன்றன.

வில்பேட் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையிலும்( )

மகாவலி சபையிலும் 20 ஆண்டுகள் அமையத் தொழிலாளியாக வேலை செய்தவர். 1982ம் ஆண்டில் இருந்து மகாவலித் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய ஊழியர் சேமலாப நிதியும் அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கை நிதியமும் மகாவலி அதிகார சபையினால் உரிய நிறுவனங்களில் வைப்புச் செய்யப்படவில்லை. நிதிக் கஷ்டங்கள் காரணமாக இந்த நிதியங்களில் உரிய வைப்புக்கள் செய்யப்படவில்லை எனவும் அரசாங்கத்தின் எதிர்கால வரவு செலவுத் திட்டங்களில் இவற்றைச் செலுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் மகாவலி பொருளாதார ஏஜன்சியின் பணிப்பாளர் நாயகம் கூறித் தலைதப்பிக் கொள்ள முயற்சித்துள்ளார்.

சுயவிருப்பின் பேரிலான சேவை ஓய்வு திட்டத்தை தொழிலாளர்கள் ஏற்க வேண்டுமா? அவர்கள் வேலையில் இருந்து விலக்கப்பட்ட பின்னர் வீழ்வது வறுமையின் ஆதாளபாதாளத்தில் அல்லவா? அத்தோடு அரசாங்கம் வெட்டித் தள்ளும் ஒவ்வொரு தொழிலும் தமக்கு மட்டும் அல்ல எதிர்காலச் சந்ததிக்கும் சொந்தமானது அல்லவா? தொழிலாளர்கள் தமது தொழில்களை காக்கும் போராட்டத்துக்கு எந்த ஒரு நிஜமான வேலைத்திட்டமும் இல்லாமல் உள்ளனர். தொழிற்சங்கத் தலைமைகள் நஷ்டஈட்டுக்கு தொழில்களை விற்றுத்தள்ளுவதை ஏற்றுக் கொண்டுள்ளனர். அத்தோடு இந்த துரோக தலைவர்களின் தோளில் நின்று கொண்டுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் வழங்கும் நஷ்டஈட்டில் ஒரு சொற்ப தொகையைக் கூட்டிப் பெறும் பேரம்பேசல்களில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தொழிலாளர்களுக்கு முற்றிலும் புதிய வேலைத்திட்டம் அவசியம் :

- தொழிலாளர்களின் போராட்டம் உலகளாவிய ரீதியில் அனைத்துலக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்படுத்தப் பட வேண்டும்.
- தொழிலாளர்களின் உரிமைகளை இலாபம் கறக்கும் முதலாளித்துவ அமைப்பினுள் பாதுகாக்க முடியாது.முக்கிய உற்பத்தி சாதனங்களை தொழிலாளர் வர்க்கம் கைப்பற்றி, சோசலிச ரீதியில் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தை ஸ்தாபிதம் செய்ய வேண்டும்.
- தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை காக்கும் வேலைத்திட்டத்தை அமுல் செய்ய தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர வேண்டும்.
- சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே இந்த அனைத்துலக சோசலிச முன்நோக்கிற்கான போராட்டத்தை முன்னெடுக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com





# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்-12

## கறுப்பு ஜூலையின் 15வது ஆண்டுநிறைவு

1983 ஜூலை 23ம் திகதி ஆரம்பமான தமிழ் படுகொலை இரத்தக் களரி இயக்கம் பல நாட்கள் தொடர்ந்து பரந்து வந்தது.

தனது சொந்த அனுபவங்களின்படி இந்தக் காட்டுமிராண்டி இயக்கத்தின் பல கோணங்களையும் அரசாங்க முன்னணிப் புதினப் பத்திரிகை நிறுவனமான லேக்ஹவுசின் முன்னணிப் பத்திரிகையாளரும் தெகிவளைவாசியுமான ரீ.சபாரத்தினத்தின் ஒரு மிதவாதியின் படுகொலை (The Murder of a moderate) என்ற நூலில், பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

ஜூலை 24 காலை 5மணிக்கு எனக்கு நாராஹேன்பிட்டவில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பு காடையர்கள் பிராந்தியத்தில் நடமாடுவதாகவும் கொள்ளையடித்துக் கொண்டு திரிவதாகவும் தெரிவித்தது. நான் எனது இளைய ஆண் மக்கள் இருவருடனும் பம்பலப்பிட்டி காசில் ஒழுங்கையில் உள்ள எனது உறவினரின் வீட்டுக்கு விரைந்தேன். அந்த வீடு இத்தகைய சந்தர்ப்பங்களில் அகதிகள் முகாமாக மாற்றப்படும் இந்து கோவிலுக்கு அருகில் அமைந்திருந்தது. இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் ஒரு அணிதிரண்ட கும்பல் இரும்பு கம்பிகளுடனும் மற்றும் ஆயதங்களுடனும் ஆயுதபாணிகளாகி தமிழ்க் கடைகளையும் வீடுகளையும் உடைத்துத் தள்ளி, நகரை வலம் வந்தது. இவர்களின் பின்னால் பெற்றோல் தகரங்களை தாங்கிய கும்பல்கள் கடைகளையும் வீடுகளையும் தீமூட்டி வந்தனர்.

அன்று பகல் முழுவதும் கலகக்காரர்கள் பஸ்கள், லொறிகள், புகையிரதங்கள், அரசாங்க வாகனங்களில் கொழும்பிற்கு பெருக்கெடுத்து வந்தனர். அவர்கள் தமிழர்களின் வீடுகளை கண்டுபிடிப்பதற்காக தேர்தல் இடாப்புக்களை எடுத்து வந்தனர். அத்தகைய ஒரு குழு தெகிவளைக்குச் சென்றது. அவர்கள் அயலவர்களை எனது வீட்டைக்காட்டும்படி கேட்டனர். அந்தப் பகுதியில் தமிழ் வீடுகள் கிடையாது என அவர்கள் கூறியதும் அவர்கள் தமிழரைக் காக்க முயற்சிப்பதாக குற்றம் சாட்டி தேர்தல் இடாப்பைக் காட்டினர்.எனது பெயரின் கீழ்ச் சிவப்பினால் கோடிடப்பட்டு இருந்தது. கலகக்காரர்கள் எனது வீட்டுக்குச் சென்றனர். முன் கதவை உடைத்துத் திறந்தனர். எனது அலுவலக அறையில் இருந்து புத்தகங்களை இழுத்து வீழ்த்தி அதற்குத் தீ மூட்டினர். அந்த அறையில் இலங்கை, இந்திய வரலாறு பற்றிய அருமையான நூல்கள் இருந்தன. இது மூன்று நாட்களுக்கு தொடர்ந்து எரிந்ததாக எனக்குக் கூறப்பட்டது.

மத்தியானமளவில் நான் காசில் ஒழுங்கையில் இருந்து எனது அயலவர்களுடன் தொலைபேசியில் பேசினேன். வீடு தீப்பற்றி எரிவதாக அவர்கள் கூறினர். அதே நேரத்தில் ஆர்.சிவகுருநாதன், பீ.பாலசிங்கம், கே.நடராசா, கே.சிவப்பிரகாசம், திருமதி..பொன்மணி குலசிங்கத்தினதும் பத்திரிகைத் துறையில் செல்வாக்கான பதவிகளை வகித்த இன்னும் பலரது வீடுகளும் தீமூட்டப்பட்டன. அந்த நேரத்தில் மத்தியூ தலைமையிலான ஜாதிக சேவக சங்கமய ஆளும் யூ.என்.பி.யின் தொழிற்சங்க கன்னையே இந்தக் கும்பல்களுக்குப் பெயர்களையும் விலாசங்களையும் வழங்கியதாகத் தமிழர்கள் நம்பினர்.

அதே வேளையில் ஒரு காடையர் கும்பல் கடற்கரைப் பக்கமாக காசில் ஒழுங்கையினுள் நுழைந்து , கடைசி வீட்டைத் தாக்கியது. நான் நான்கு அமைச்சர்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் எடுத்தேன். ஆனால் அவர்கள் ஜனாதிபதியுடன் இருப்பதாக கூறப்பட்டது. உண்மையில் அவர்கள் அவரை நாட்டுக்கு உரை நிகழ்த்தும்படி நெருக்கி வந்தனர். தெளிவாகக் குழம்பிப்போய் இருந்த அவர் ஆழ்ந்த யோசனையில் மூழ்கிப் போய் இருந்தார். "விடயம் கட்டுப்பாட்டைத் தாண்டிவிட்டது." என அவர் தனது அமைச்சர்களிடம் தெரிவித்தார். தொண்டமானும் மற்றும் தமிழ் பிரமுகர்களும் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிக்கும்படி அவரை நெருக்கினார்கள்."

இந்த விதத்தில் ஒரு நாடகப் பாணியில் இங்கே விபரிக்கப்பட்டிருப்பது சிங்கள இனவாத குண்டர் கும்பல்களின் கடைகெட்ட தன்மையாகும். எப்போதுமே பிற்போக்குக்கு செவிமடுக்கும் வரலாறு கொண்ட தொண்டமான் உட்பட்ட தமிழ்ப் பிரமுகர்கள் எனப்படுவோரின் மலட்டுத் தன்மையையும் இது எடுத்துக் காட்டுகின்றது. ஜனாதிபதி ஜயவர்தன "ஆட்சி செய்து" கொள்ளப் போனதன் பரிமாணம் எவ்வளவு என்பது மட்டுமே கூறப்படவில்லை.

1977 தேர்தலில் வென்றவுடன் பொலிசாரை மூன்று நாட்கள் லீவில் அனுப்பி தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக ஜயவர்தனவின் கீழ் யூ.என்.பி.கட்டவிழ்த்துவிட்ட பயங்கர இயக்கம் இதைக் காட்டிலும் பன்மடங்கு உக்கிரமாக்கப்பட்டு கொழும்பிலும் ஏனைய மாகாணங்களிலும் வசித்த தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டமை ஜனாதிபதி ஜெயவர்தனாவின் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பயங்கரத்தின் அளவாகும் என்பதில் எதுவிதமான சந்தேகமும் கிடையாது.இது ஜூலை 23ம் 24ம் திகதிகளில் அவர் செயற்பட்ட விதத்திலும் அவ்வாறே அதன் பின்னர் அவரின் நடைமுறையின் மூலமும் நன்கு நிரூபணமாகின்றது.

ஜூலை 23ம் திகதியில் இருந்து கொலைகார காடையர் கும்பல்களும் அவர்களுடன் இணைந்து இரத்தக் களரிகளில் ஈடுபட்ட பொலிசும் இராணுவமும் ஒன்றரை நாட்கள் சுதந்திரமாக வீதிகளில் உலாவ இடமளித்ததன் பின்னர் ஜூலை 25 மாலை 2 மணிக்கே ஜனாதிபதி ஜயவர்தனா கொழும்பில் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்தார். ஏனைய மாவட்டங்களுக்கு செல்லுபடியான விதத்தில் அன்று ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது மாலை 6 மணிக்கேயாகும்.

எவ்வாறெனினும் அவசரகாலச் சட்டமும் ஊரடங்குச் சட்டமும் பிற்போக்கு முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறையின் ஆயுதங்களின் ஒரு அங்கமாகும். அவை மூலம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்குக் கிட்டும் நிவாரணமோ அல்லது பாதுகாப்போ கிடையாது. இத்தகையவை கிட்டும் என முதலாளித்துவ ஒடுக்குமுறைப் பிடியை இறுக்கமாக்கவும் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை துடைத்துக் கட்டவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள சமசமாஜ ஸ்டாலினிச இ.தொ.கா. நவசமசமாஜ கட்சிகள் போன்ற துரோக அமைப்புக்கள் மட்டுமே கூற முடியும். பொதுமக்கள் அந்தப் பொறியில் மாட்டிக் கொள்ளக் கூடாது. அதற்குப் பதிலாக பொதுமக்கள் தமது பாதுகாப்பை ஊர்ஜிதம் செய்து கொள்ள முதலாளித்துவ அரசாங்கத்தில் இருந்தும் அரசில் இருந்தும் முதலாளித்துவ, முதலாளித்துவச் சார்பு கட்சிகளில் இருந்தும் முற்றிலும் சுயாதீனமான முறையில் தொழிலாளர் வர்க்கத் தலைமையின் கீழ் ஒடுக்கப்படும் மக்கட் குழுக்களை அணிதிரட்டிக் கொண்டு பாதுகாப்பு கமிட்டிகளை நிறுவிக் கொள்ள வேண்டும்.

அன்றைய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் இன்றைய சோசலிச சமத்துவக் கட்சியினதும் மேற்சொன்ன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்களை அணிதிரட்டும் அவசியம் 1983 கறுப்பு ஜூலையின் அனுபவத்தின் மூலம் மேலும் ருசுப்படுத்தப்படுகின்றது.

முதலில் கொழும்பிலும் பின்னர் மேல் மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் குண்டர்கள் ஏனைய மாகாணங்களுக்குள் ஊடுருவி தமது இரத்தக் களரியையும் படுகொலைகளையும் முன்னெடுக்க வழங்கப்பட்ட ஒரு அரச ஆணையாகியது. ஜூலை 26ம் திகதி இனவாதிகள் கண்டி, நுவரெலிய, திருகோணமலை, குருணாகலை, இரத்தினபுரி, பலாங்கொடை முதலான பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிராகத் தமது காடைத்தனங்களை காட்டிக் கொண்டனர். திருகோணமலை பொதுச்சந்தை தரைமட்டமாக்கப்பட்டது. இங்கு இதற்குக் கடற்படையினர் தலைமை தாங்கினர். இனவாத காடைத்தனங்கள் நிறைந்த குண்டர் இயக்கத்துக்கும் முதலாளித்துவ் சட்டத்துக்கும் அரச படைகளுக்கும் இடையே நிலவிய பிரிக்கமுடியாத பிணைப்பை இது வெளிக்காட்டியது.

### அரசின் உறவு

ஜூலை 26ம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் இனவாதக் குண்டர்களுக்கும் அரச நிறுவனத்துக்கும் இடையேயான உறவினைப் பலம் வாய்ந்த முறையில் அம்பலமாக்கியது. வெலிக்கடை சிறையில் சிறைவைக்கப்பட்டு இருந்த சிறைக் கைதிகள் தூண்டிவிடப்பட்டனர். தடுப்புக்காவல் கைதிகள் உட்பட 35 தமிழ் சிறைக் கைதிகள் இருந்த இடத்தில் வைத்தே கொல்லப்பட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியினால் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் பேரால் எதிர்ப்புக் காட்டுவதாகக் கூறி பாராளுமன்ற உறுப்பினராகப் பேர் பிரேரிக்கப்பட்டு ஈடேறாது போன குட்டிமணியும் இதில் அடங்குவார். இது முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறை அமைப்பான சிறைச்சாலை அதிகாரிகளின் உடன்பாடும், பங்களிப்பும் இல்லாமல் இடம்பெறக் கூடிய ஒரு சுயமான நிகழ்வு அல்ல. இந்தச் சம்பவம் இடம்பெற்றதற்கு மறுநாள் ஜூலை 27ம் திகதியும் அதே விதத்தில் இதே இடத்தில் வைத்து மேலும் 17 தமிழ்க் கைதிகள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த விடயம் விவாதத்துக்கு இடமற்ற முறையில் நிரூபணமாகியது.

முதலாளித்துவ அமைப்பினால் எதுவித எதிர்காலமும் அற்றமுறையில் அனாதைகள் ஆக்கப்பட்டு இம்சைக்குள் தள்ளப்பட்ட லூம்பன்(பன்னாடை) சமூகத்தின் ஒரு பகுதியினர் முதலாளித்துவ வர்க்கத்தின் கடைகெட்ட தேவைகளின் பேரில் எவ்வளவு இலகுவான விதத்தில் தூண்டிவிடப்படுகின்றார்கள் என்பதை கறுப்பு ஜூலையின் சகல சம்பவங்களும் பிரசித்தமாக்கியது. விஞ்ஞானபூர்வமான சோசலிச இயக்கத்தின் ஸ்தாபக பத்திரமான கம்யூனிஸ்ட் அறிக்கை( 1848 ) யில் மார்க்சும் எங்கேல்சும் இந்த விடயத்தை புகழ்வாய்ந்த முறையில் தீர்க்கதரிசனமாகக் கண்டார்கள்

அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது:

"பழைய சமுதாயத்தின் அடிமட்டத்து அடுக்குகளில் இருந்து எறியப்பட்டுச் செயலற்று அழுகிக் கொண்டிருக்கும் சமூகக் காடாகிய "அபாயகரமான வர்க்கம்" பாட்டாளி வர்க்கப் புரட்சியால் எங்கேனும் ஒரு சில இடங்களில் இயக்கத்தினுள் இழுக்கப்படலாம். ஆனால் அதன் வாழ்க்கை நிலைமைகள் பிற்போக்குச் சதியின் கைக்கருவியாக இலஞ்சம் பெற்று ஊழியம் புரியவே மிகப்பெரும் அளவுக்கு அதைத் தயார் செய்கின்றன." (கம்யூனிஸ்ட் அறிக்கை பக்கம் 60)

பாசிஸ்டுகளும் அவ்வாறே பாசிஸ்டுகளுக்கு கம்பளம் விரிக்கும் தீவிரவாத பைத்தியங்களும் எப்போதும் வக்காலத்து வாங்குவது இந்த லூம்பன் சமூகத் தட்டினை அணிதிரட்டிக் கொள்வதற்கேயாகும். அது அவர்களின் தொழில்சார் எதிர்ப்பு இயக்கத்தின் காரணமாகத் தவிர்க்கமுடியாத விதத்தில் தலைநீட்டும் பிற்போக்கு அவசியமாகும். ஜே.வீ.பி.யின்தும் ஜனதா மித்துரோ அமைப்பினதும் நவசமசமாஜக் கட்சியினதும் இன்னும் பல தீவிரவாத கும்பல்களதும் வாய்வீச்சுக்களினுள்ளும் திட்டங்களினுள்ளும் இந்த லூம்பன் குழுவின் அவசியத்தை நன்கு கண்டுகொள்ள முடியும். இனவாதம், சாதிவாதம் உட்பட்ட ஜனநாயகம் தொடர்பான இந்தப் பிற்போக்கு அமைப்புக்களின் ஈர்ப்பு லூம்பன் சமூகத் தட்டு சம்பந்தமான அவர்களின் வக்காலத்து வாங்கலின் திட்டவட்டமான ஒரு வெளிப்பாடாகும்.

கடந்த காலத்தில் இருந்து நாகரீகத்தின் பயணத்தில் சமூக முன்னேற்றம் , இன்றைய சமூக முறையினுள் இருந்துவரும் உற்பத்திச் சக்திகளை அழித்தொழிப்பதாக அல்லாது மிகவும் உயர்ந்த நிலைக்கு அபிவிருத்தி செய்யும் வல்லமை கொண்ட வர்க்க சக்தியை அரசியல் அரங்குக்கு கொணர்வதாக அமைந்துள்ளது. நிலமானித்துவ முறைக்கு எதிராக அந்தப் பணியை இட்டுநிரப்பக் கூடியதாக விளங்கிய சமூக சக்தி முதலாளி வர்க்கமேயானால் முதலாளித்துவ அமைப்பின் கீழ் நாகரீகத்தின் பேரழிவைத் தவிர்த்து, சமூக முன்னேற்றத்தின் முக்கிய பிரதிநிதி தொழிலாளர் வர்க்கமேயாகும்.மார்க்சும் எங்கேல்சும் தீர்க்கதரிசனமாகக் கண்ட விஞ்ஞான சமூக உண்மை இருபதாம் நூற்றாண்டின் முழு அனுபவங்களின் மூலமும் ருசுப்படுத்தப்பட்டுள்ளது.

சமசமாஜ ஸ்டாலினிச நவசமசமாஜ இ.தொ.கா.மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் தேசியவாத முதலாளித்துவச் சார்பு அரசியல் வேலைத்திட்டத்தின் மூலம் தொழிலாளர் வர்க்கம் துயரடையச் செய்யப்பட்டது. இதனால் ஒரு புறத்தில் தமிழ் தேசியவாத குட்டி முதலாளித்துவ குழுக்கள் தலைதூக்கின. மறுபுறத்தில் இனவாத ஜே.வீ.பி.போன்ற அமைப்புக்கள் தெற்கில் வளர்ச்சி கண்டன. இது ஆளும் வர்க்கத்துக்கு

படிப்பகம்

அவசியமாக இருந்த இனவாத யுத்தத் தீப்பிளம்புக்கு எண்ணெய் வார்ப்பதாக விளங்கியது.

கறுப்பு ஜூலையில் கொலைகளுக்கும் இரத்தக் களரிகளுக்கும் இலக்கானவர்களின் எண்ணிக்கை 350 எனவும் 18000 தமிழர் வீடுகளும் கடைகளும் கொள்ளையிடப்பட்டுத் தீவைக்கப்பட்டதாகவும் அரசாங்க அறிக்கைகள் கூறுகின்றன. முதலாளித்துவ அரசு வெளியிட்டுள்ள இந்த உத்தியோகபூர்வமான அறிக்கைகள் தவறானவை என்பதை என்றும் அப்படியே இங்கும் குறிப்பிட்டாக வேண்டும்.

## சிங்கள வெகுஜனங்களின் இயக்கம் அல்ல

ஆனால் அந்த உத்தியோகபூர்வமான அறிக்கைகள் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் இருந்து அகதிகளான தமிழ் மக்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகமானது எனக் குறிப்பிடுகின்றன. அதில் இருந்து ஒரு முடிவுக்கு வருவது அவசியம். கறுப்பு ஜூலை சிங்கள பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற ஒரு தமிழர் எதிர்ப்பு இனவாத இயக்கமாக இருந்திருக்குமானால் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாகுவது அல்ல கொலைசெய்யப்பட்டு இருப்பார்கள். இல்லையா?அது பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் தொடுக்கப்பட்ட படுகொலை, இரத்தக்களரி இயக்கமாக விளங்கவில்லை. அதற்குப் பதிலாக யூ.என்.பி.அரசாங்கம் முன்கூட்டியே அணிதிரட்டிக் கொண்ட பாதாள உலகின் கொலையாளிகளை இனவாதத்தினால் தூண்டிவிட்டு, இராணுவ பொலிஸ், சிறைச்சாலை உட்பட்ட அரச ஒடுக்குமுறை நிறுவனங்களின் ஆதரவுடன் தொடுக்கப்பட்ட



கறுப்பு ஜூலையில் பொரளை சந்தியில் வைத்து இனவாதக் குண்டர்களால் தாக்கப்பட்டு மரணமான தமிழ் இளைஞன்

காட்டுமிராண்டி இயக்கமாகவே விளங்கியது. இடம்பெயர்ந்து அகதிகள் முகாம்களுக்கு பாதுகாப்புக்காக வந்த தமிழ் மக்களிடமிருந்து பலருக்கு தமது அயல் சிங்கள நண்பர்கள் உயிர்தப்ப உதவிய விதம் பற்றிக் கூற வேண்டி இருந்த உண்மைக் கதைகளோ பல. துயருறும் பொதுமக்கள் என்ன மொழியில் பேசினாலும் என்ன மதத்தையும் கலாச்சாரத்தையும் கடைப்பிடித்தாலும் துயரத்தில், சங்கடத்தில் பொதுவில் நடந்து கொள்ளும் விதிமுறை அதுதான். இனவாத, இனக்குழுவாத மோதுதல்கள் ஆளும் வர்க்கத்தின் அவசியங்களுக்கு இணங்க, அவர்களின் நலன்களுக்கு அவர்களால் வழி நடாத்தப்படும் காடையர்கள், அரச இயந்திரத்தைக் கொண்டு கட்டவிழ்த்து விடும் காட்டுமிராண்டித்தனத்தின் வெளிப்பாடாகும். பொதுமக்கள் தமது வாழ்க்கைப் பழக்கவழக்கங்களின்படி பொதுவில் ஈடுபடுவது காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிரான கட்டுப்பாடான சமூக வாழ்க்கைக்கான மனித முயற்சிகளில் ஆகும்.

இந்த மனிதத்தன்மை வாய்ந்த முயற்சிகளுக்கு வர்க்க சமுதாயம் என்றும் எதிரிடையாக இருந்து வந்துள்ளது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் வர்க்கத் துருவப்படுத்தலுக்கு உள்ளான வர்க்க சமுதாயம், முதலாளித்துவ அமைப்பின் வீழ்ச்சி நிலைமையின் கீழ் அதன் நச்சுத்தனமான இலட்சணமான ஏகாதிபத்திய யுத்தத்தையும் நாட்டுக்கு நாடு காலனித்துவத்தை இலக்காகக் கொண்ட இனவாத, கணக்குழுவாத முறை மோதுதல்களையும் நனவான முறையில் சிருஷ்டிக்கின்றது. இலங்கையினுள் இனவாத யுத்தமாக இந்த ஏகாதிபத்திய அவசியத்தின் பெரிதும் நச்சுத்தனமான தன்மையே வெளிப்பட்டு உள்ளது.

யூ.என்.பி. அரசாங்கம் விதித்த அவசரகாலச் சட்டமும் ஊரடங்குச் சட்டமும் இனவாத குண்டர்களையும் ஆயுதப் படைகளின் கொலையாளிகளையும் இரத்தக்களரிக் காரர்களையும் பாதிக்கவில்லை. அதற்குப் பதிலாக அது அவர்களின் குண்டர் நடவடிக்கைகளுக்குப் புதிய உத்வேகத்தை வழங்கியது.

அத்தகைய ஒரு பக்கபலம் இல்லாமல் இந்தக் காடையர் இயக்கம் இடம்பெற்று இருக்குமானால் அதனது நிலையான கோழைத்தனம் அம்பலமாக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருந்திருக்கும். இது ஹிட்லரின் இயக்கம் தொடக்கம் ஜே.வீ.பி.யின் பாசிச இயக்கம் வரையிலான இந்த வகையறாக்களைச் சேர்ந்த இத்தகைய இயக்கங்களால் பல தடவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அவற்றின் கொலைகார நிழலானது எங்கும் இறுக்கமாக்கப்பட்டதும் இருகால்கள் மாற்றப்பட்டதும் அரச இயந்திரத்தின் பொலிஸ் இராணுவம் உட்பட்ட முதலாளித்துவ அமைப்புக்களின் மூலமாகும். முதலாளித்துவ அரசைத் தூக்கிவீசும் மூலோபாயம் இல்லாமல் முதலாளித்துவ ஜனநாயகத்தை சுமந்து கொண்ட பாசிச எதிர்ப்பு, இனவாத எதிர்ப்பு இயக்கம் எனக் கூறிக் கொள்பவை எங்கும் தமது வங்குரோத்தினையும் மலட்டுத்தனத்தையும் வெளிக்காட்டிக் கொண்டுள்ளன. மார்க்சிஸ்டுகள் இனவாத குண்டர்களுக்கும் பாசிஸ்டுகளுக்கும் எதிரான போராட்டம் முதலாளித்துவ அரசுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் அரச அதிகாரத்தினை ஸ்தாபிதம் செய்யும் மூலோபாயத்துடன் இணைத்துக் கொள்ள போராடுகின்றார்கள்.

ஜனவரி 29ம் திகதி இடம்பெற்ற சம்பவங்களின் மூலம் குண்டர்களின் மேற்சொன்ன தன்மை சுட்டிக்காட்டியது. அது "புலிகள் கொழும்புக்கு வந்துவிட்டனர்" என்ற பிரச்சாரம் பரந்ததுடன் இணைந்து கொண்டது.

இந்தப் பிரச்சாரத்துக்கு புறக்கோட்டையில் இடம்பெற்ற சம்பவம் சாட்சாக அமைந்தது. அதை ஆரம்பித்தவர்களும் பொலிசாரே. இனவாதக் காடையர்களிடம் இருந்து உயிர்தப்பும் பொருட்டு ஒரு அறையினுள் புகுந்து கதவைப் பூட்டிக் கொண்டிருந்த தமிழ் மக்கட் குழுவை வெளியே இழுத்து வந்து கொலைகாரர்களிடம் ஒப்படைக்கும் பொருட்டு பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதுதான் தாமதம் அக்கம் பக்கத்தில் உலாவிக் கொண்டிருந்த காடையர்கள் தமது மனதில் குடிகொண்டு இருந்த அச்சத்தை வெளிப்படுத்துவதை இருகால்களுக்கும் வழங்கினர். கிடுநடுக்கம் பிடிக்க ஓடிய வேளையில் அவர்கள் "கொழும்புக்கு புலிகள் வந்துவிட்டனர். "உயிரைக் காப்பாற்றுங்கள்"எனக் கூச்சலிட்டனர். ஒரு சில கணங்களில் இந்தக் கதை கொழும்பு முழுவதிலும் அயல் பகுதிகளிலும் காட்டுத் தீ போல் பரவியது. அது குண்டர்களுக்கு ஊடாக குண்டர்களின் பீதி வாய்மூலம் பரவியதாகியது. சகல சந்திகளிலும் மாறுவேடம் பூண்டு உலாவி வந்த இனவாதிகள் அகப்பட்ட இடங்களில் ஒழித்துக் கொண்டனர். பல இடங்களில் இராணுவ, பொலிஸ் காவல் நிலையங்கள் வெளிச்சோடியதாகவும் அறிக்கைகள் வந்தன.

## பு.க.க.வின் அஞ்சாத தலையீடு

சமூகத்தின் லூம்பன் தட்டினில் இருந்து திரட்டி, அரச இயந்திரத்தின் சக்தியை ஊட்டி, வீதியில் இறக்கப்படும் இந்தக் குண்டர் இயக்கத்துக்கு எதிராகப் புரட்சிகர சமூக சக்தியான தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்களை அணிதிரட்டுவதற்கான போராட்டத்தை இந்த இரத்தக் களரி தீவைப்புகளுக்கும் அரச அடக்குமுறைகளுக்கும் மத்தியில்



கறுப்பு ஜூலையில் இனவாதக் குண்டர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி கொழும்பு அகதிகள் முகாமில் தள்ளப்பட்ட தமிழ் தேசிய இனத்தவர் உணவுக்கு கியூவில் நிற்கும் காட்சி

கைவிடாதிருக்க சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பார்த்துக் கொண்டது.

சிங்கள இனவாதிகள் சிருஷ்டித்துள்ள பேரழிவுகளின் பரிமாணத்தையிட்டு பொதுமக்களை விழிப்படையச் செய்வதைக் கூட தவிர்க்கும் பொருட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட பத்திரிகைத் தணிக்கைகளின் மூலம் கொலைகள், இரத்தக் களரிகள் பற்றிய செய்திகள் வெளியிடுவது அடியோடு தடைசெய்யப்பட்டு இருந்தது.தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளை வெளியிட பு.க.க. தணிக்கை அதிகாரியிடம் சமர்ப்பித்த கட்டுரைகள் தலைமுதல் அடிவரை வெட்டித் தள்ளப்பட்டது. இந்த நிலையில் புரட்சிகர இயக்கத்தின் வாயைக் கட்டிப் போடுவதற்கு எதிராக ஆபத்துக்கிடையிலும் போராடுவது தவிர்க்க முடியாததாகியது. தணிக்கை அதிகாரிகளின் தணிக்கைக்கு சமர்ப்பிக்காமல் இரகசியமாக ஒரு பிரசுரத்தை அச்சிட்டு வெளியிட பு.க.க.முடிவு செய்தது.

அது கட்சியின் அச்சகத்தினது மட்டுமல்ல முழுக் கட்சிக் காரியாளர்களதும் பாதுகாப்பை பணயம் வைத்து எடுத்த அஞ்சாத தீர்மானமாகும். புரட்சிகர இயக்கம் ஆபத்தை சகிக்காது இருக்க முடியாது. புரட்சிக் கட்சி காரியாளர் பயிற்சியின் மையம். பிற்போக்கு பிரச்சாரங்களினால் வழிதடுமாறாததும் முதலாளித்துவ அரச ஒடுக்குமுறையின் எதிரில் கிடுநடுக்கம் பிடிக்காத தலைமையினால் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு பங்களிப்புச் செய்வதே. அது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைத் தவிர்ந்த வேறு எந்த ஒரு அரசியல் அமைப்பும் அன்று செய்யாத ஒன்றாகும். அது ஏனைய சகல அரசியல் கட்சிகளும் முதலாளித்துவ அரசின் சட்டத்தை தாக்கும் காரியத்தை அங்கீகரித்துக் கொண்டு இருந்ததோடு தொடர்ந்தும் இருந்துவருவதை காட்டியது.

தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் அடிப்படையாகக் கொள்ள வேண்டிய வேலைத்திட்டத்தை விளக்கி 17 பக்கங்களுடன் வெளியான இந்தச் சிறிய நூல் ஜூலை 27ம் திகதியில் இருந்து ஆரம்பமான இனவாத நாசகார இயக்கத்தின் தன்மையையும் அதன் அடிப்படைகளையும் பின்வருமாறு விளக்கியது.:

"ஜூலை 23ம் திகதி தொடங்கிய இனவாத மக்கள் படுகொலை கலம்பகத்தினால் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். கொழும்பு மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்து நாற்பதினாயிரம் தமிழ் தேசிய இனத்தினர் அகதிகள் முகாம்களில் தள்ளப்பட்டனர். இந்த மாவட்டத்தில் ஒரு தமிழ்க் கடையோ வேலைத்தலமோ அல்லது வெற்றிலை சுருள் வண்டியோ மிஞ்சவில்லை.ஒரு சில இடங்களைத் தவிர தமிழ் தேசிய இனத்தினர் அவர்கள் வாழ்ந்த சகல இடங்களிலும் இருந்தும் துரத்தி அடிக்கப்பட்டு, நூல் பந்துவரை கொள்ளையடிக்கப்பட்டு அவற்றுக்கு தீமூட்டப்பட்டுள்ளது.

சாதாரண மனிதன் மட்டும் அல்ல அரசாங்க உயர் அதிகாரிகளும் பொலிஸ் திணைக்களத்தினதும் இராணுவத்தினதும் அதிகாரிகளும் நீதிபதிகளும் அவர்கள் தமிழராக இருந்திருந்தால் இந்த தலைவிதிக்கு முகம் கொடுத்தனர். அதாவது வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய சகல மாகாணங்களிலும் சகல தமிழ் தேசிய இனத்தவர்களும் உக்கிரமான தாக்குதல்களினால் அவ்விடங்களில் இருந்து அடியோடு தூக்கி வீசப்பட்டனர்.

கலகம் தேயிலை, இறப்பர் தோட்டங்கள் வரை பரந்து சென்றது. தோட்டத்துறை அடியோடு தீமூட்டப்படாது போனதற்கு காரணம், தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்ப்புக்களும் இந்திய மக்கள் இயக்கமும் உக்கிரம் கண்டதேயாகும்.கலகக்காரர்கள் அரசாங்க அமைச்சரான தோட்டத் தொழிலாளர் தலைவர் தொண்டமானின் இ.தொ.கா.கொழும்பு தலைமையகத்தைத் தாக்கி அதன் ஒரு பகுதிக்கும் தீ வைத்தனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கலகக்காரர்கள் இந்தியர்களுக்கும் இலங்கை தமிழர்களுக்கும் சொந்தமான பெரிய, சிறிய கைத்தொழிற்சாலைகளை அடியோடு தாக்கியதோடு உற்பத்தி கருவிகளை தவிடுபொடியாக்கி, அவற்றுக்கு தீமூட்டி நாசமாக்கினர். இந்த பக்டரிகளில் வேலைசெய்தவர்களில் நூற்றுக்கு 90 வீதமானோர் சிங்களம் பேசும் தொழிலாளர்களாவர். மஹாராஜா கைத்தொழில்சாலைகள், சின்டெக்ஸ், சென்ட் அன்தனீஸ் ஹாட்வெயர்ஸ், ஹைட்ராமணி, கே.ஜீ.இன்டஸ்ட்ரீஸ் டாட்டா காமன்ட்ஸ் போன்ற ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலைசெய்த பக்டரிகள் அடியோடு தவிடுபொடியாக்கப்பட்டன.

இதைக்காட்டிலும் மிகவும் பயங்கரமான சம்பவம் வெலிக்கடை அரச சிறையில் இருந்த தமிழ் விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு அமைப்புக்களையும் சேர்ந்த அரசியல் தலைவர்கள் 54 பேர் அரசாங்க இராணுவத்தின் தலையீட்டில் சிறைச்சாலைக்குள் படுகொலை செய்யப்பட்டதாகும்.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இடம்பெற்ற இந்த கடைகெட்ட அநியாயங்கள் 35 வருடங்களாக இடம்பெற்று வந்த தேசிய ஒடுக்குமுறையினதும் அடக்குமுறையினதும் உச்சக்கட்டமாகும். இவற்றை தற்செயலான சம்பவங்களாக வருணிக்க துரோகியினால் மட்டுமே முடியும்.

இந்த மக்கள் படுகொலை நடவடிக்கைகள் உலக பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்துக்கு உள்ளான வங்குரோத்து தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தமது மரணத்தை ஒத்திப்போடும் பொருட்டு கையாலாகாத்தனமான பிரயத்தனத்தில் இருந்து பெருக்கெடுக்கின்றது என மார்க்சிஸ்டுகள் முன்கூட்டியே நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

இந்த கொலைகார நடவடிக்கைகளுக்கும் மக்கள் படுகொலைகளுக்கும் முதலாளி வர்க்கத்தின் சகல பகுதியினரும் சகல கட்சியும் இராணுவமும் சிறைச்சாலை உட்பட்ட முதலாளித்துவ அரசின் அனைத்து நிறுவனங்களும் புத்த கோவில்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும் முழு முதலாளித்துவ பத்திரிகை பைத்தியங்களும் குட்டி முதலாளித்துவத்தின் உயர்தட்டினரும் அவரவர்களின் விதிமுறைகளுக்கு இணங்க தொடர்புபட்டுள்ளனர் என இந்தக் கலகத்தின் உள்ளடக்கத்தை கவனமாக ஆயும்போது நிரூபணமாகும்.

இது தேசிய ஒடுக்குமுறை பற்றிய உலகளாவிய ஒரு தோற்றப்பாடேயன்றி ஸ்டாலினிஸ்டுகளும் திரிபுவாதிகளும் பூசிமெழுக முயற்சிக்கும் விதத்தில் பிற்போக்கு முதலாளித்துவ சமுதாயத்தினுள் அழிபாடுகளாக இருந்து கொண்டுள்ள பின்தங்கிய சிறப்பு சமூகத் தட்டினரிடமிருந்து காலத்துக்குக் காலம் வெடித்துக் கிளம்பும் இனவாத குமுறல் அல்ல.1983 ஜூலை கலவரம் இறுதியாக முதலாளித்துவ ஜனநாயக புரட்சியின் பாத்திரங்கள் தீர்க்கப்படாத ஒரு நாட்டில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கம் உலக நெருக்கடியின் கொதிப்புக்குள் அகப்பட்டுகின்றதும் தேசிய ஒடுக்குமுறைக்கும் இடையே இருந்து கொண்டுள்ள பிரிக்கமுடியாத உறவை நிரூபித்துக் காட்டியுள்ளது. இதில் இருந்து தலைதப்ப எவராலும் முடியாது. "

தொடரும்

www.padippakam.com


# முதலாளித்துவத்துக்கு எதிரான போரா

**சோ.ச.க.வுக்கு கிடைத்த கடிதம்:**

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி.
ஐயா,

நான் இலங்கை இடதுசாரி அரசியல் பற்றி அறிந்து கொள்வதில் அக்கறை கொண்டவன். முதலாளித்துவ அரசியல் ஒடுக்குமுறை இயந்திரத்தின் மற்றொரு பலிகடாவாகிப் போக இருந்து உங்களது கட்சியினதும் அனைத்துலகத் தோழமைக் கட்சிகளதும் கூட்டு இயக்கத்தினால் விடுதலை பெற்ற செல்லையா இராஜ்குமாரைப் பற்றி உங்களது கட்சிப் பிரசுரத்தின் மூலம் அறிந்தேன். முதலாளித்துவத்தை ஊடுருவிச் செல்வதற்கு அனைத்துலகத் தொழிலாளர்களுக்கு உங்களிடம் இருந்து கிடைக்கும் உதவி பெருமைக்குரியது.

இலங்கை அரசியலில் விழிப்புடன் இருக்கும் எவரும் இடதுசாரி அரசியல் செயற்பாட்டினை பல கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்ய முயல்வதைக் காணலாம்.அதில் புரட்சிகரப் பாத்திரத்தில் நிரூபிக்கத்தக்க் பங்களிப்பை சோ.ச.க., மட்டுமே வழங்குகின்றது என்ற கருத்து உங்களின் வெளியீட்டினுள் பரந்து கிடக்கின்றது. சிறப்பாக நவசமசமாஜக் கட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் உங்கள் கட்சி வன்மையாக விமர்சனம் செய்வது நிரூபணமாகின்றது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மனித உரிமைகள் காக்கும் படையணி என்ற துடைப்பத்தை நக்குபவர்களாக காட்டியுள்ளதன் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்புரட்சியாளர்களாகியது எப்படி என்பதை மேலும் தெளிவுபடுத்துவீர்கள் என நினைக்கின்றேன்.

ந.ச.ச.க. எதிர்ப்புரட்சியாளர்களானதற்கு ஒரு உதாரணமாக இராஜ்குமார் சம்பவத்தை எடுத்துக் காட்டியிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கின்றேன். ஆனால் இராஜ்குமாரை விடுதலை செய்யும் இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்து ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் ஒரு பிரதியைக் கண்ட போது அங்கு ஒரு கேள்வி எழுந்தது: நீங்கள் ந.ச.ச.க. பற்றி அம்பலப்படுத்தும் விடயங்களுக்கும் மேற்படி ஆதரவுக்கும் இடையே முரண்பாடு உள்ளதல்லவா? இந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைக்க ஒத்துழையுங்கள்.

இங்ஙனம்,
அன்புள்ள,
ஏ.ஜே.

தோழர்,

உங்கள் கருத்தை எழுதி அனுப்பியதையிட்டு மகிழ்ச்சி தெரிவிப்பதோடு இந்தச் சுருக்கமான பதிலை நான் ஆரம்பிக்க விரும்புகின்றேன்.

நீங்கள் கேட்டுள்ள விளக்கங்களையிட்டு எனது கவனத்தை திருப்புவதற்கு முன்னர் உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் சில விடயங்களை பற்றி நான் தோழமையுடன் குறிப்பிட அனுமதிக்கவும்.

"முதலாளித்துவத்தை ஊடறுத்துச் செல்வதற்கு அனைத்துலகத் தொழிலாளர்களுக்கு" எம்மிடம் இருந்து கிடைக்கும் ஆதரவையிட்டு நீங்கள் பூரிப்படைந்துள்ளீர்கள்.ஆனால் எமது இலக்கு இருந்து கொண்டுள்ள சமூகத்தை ஊடறுத்துச் செல்வதையும் தாண்டிச் செல்லும் சமூக மாற்றமாகும். இயக்கவியல் சடவாதத்தின்படி இயற்கையினதும் அவ்வாறே சமூக தொடர்ச்சியினதும் நடவடிக்கையானது பரஸ்பரம் முரண்பட்ட சக்திகளின் ஐக்கியம், மோதுதல், ஊடுருவல், பரிமாற்றத்தினை உள்ளடக்கிக் கொண்டதாகும். தொழிலாளர் வர்க்கத்தினால் முதலாளித்துவ அமைப்பு ஊடுருவி- தொழிற்சங்கவாதிகள் உட்பட்ட சகல வகையறாக்களையும் சேர்ந்த சீர்திருத்தவாதிகளும் முதலாளித்துவ அமைப்பை ஊடுருவுவதையே தமது மூலோபாயமாக்கிக் கொண்டுள்ளனர். அதைத் தூக்கிவீசுவதும் அதைத் தொடர்ந்து சோசலிச சமூக அமைப்பை ஸ்தாபிதம் செய்வதும் அவர்கள் இலக்கு அல்ல. முதலாளிகளின் இலாப மூட்டைகள் ஊதிப் பருக்கும் காலகட்டத்தில் இந்த ஊடுருவல்கள் மூலம் ஏதேனும் சில சலுகைகளை வெற்றி கொள்ளவும் முடிந்திருப்பினும் இலாபப் பொதிகள் சுருங்கி காய்ந்து போகும் காலங்களில் ஊடுருவல் அடியோடு அடைபட்டு தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை பிடுங்கிக் கொள்ள முதலாளிகள் திரும்பும் ஒரு நிலைமையினுள் இந்தச் சீர்திருத்தவாதிகள் முதலாளி வர்க்கத்தின் சார்பில் கைக்கூலி வேலையில் இறங்குகின்றார்கள். நாம் இன்று உலகம் பூராவும் தரிசிப்பது இந்நிலைமை இல்லையா?

எனவேதான் புரட்சியாளர்களான நாம் முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசி, சோசலிச சமத்துவத்தை ஸ்தாபிதம் செய்யும் மூலோபாயத்துக்கு கீழ்ப்படுத்தி, முதலாளித்துவ அமைப்பினுள் உரிமைகளை வெற்றி கொள்வதும் வெற்றி கொண்ட உரிமைகளைக் காப்பதும் ஒழுங்குசெய்யப்பட வேண்டும் எனச் சுட்டிக் காட்டுகின்றோம்.

நாம் சுட்டிக்காட்டும் இந்த விடயங்களையும் அதற்கு இணங்க எமது சகல அரசியல் நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்வதனாலேயே எமது கட்சி இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்ளும் ஏனைய கட்சிகள், அமைப்புக்களில் இருந்து வேறுபட்டு நிற்கின்றது.

## பொது மனோபாவம்

உங்களது வாக்கியத்தை மேற்கோளாகக் காட்டினால் "இடதுசாரி அரசியல் நடைமுறையினுள் பல கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்ய எடுக்கும் முயற்சியை"யிட்டு நீங்கள் கவலை கொண்டுள்ளதாக எமக்கு தெரிகின்றது. தொழிலாளர் வர்க்கத்தின் சில பகுதியினரைத் தழுவிய விதத்தில் கணிசமான சமூகத் தட்டினரினுள் இந்த மனோபாவம் இருந்து கொண்டுள்ளதை நாம் அறிவோம். இந்த மனோபாவம் அரசியல் நனவின்மையின் மீதேயே காலூன்றிக் கொண்டுள்ளது என்ற விடயத்தை நீங்கள் கவனத்தில் கொள்ளின் தெளிவாகும்.

பிற்போக்காளர்கள் "கட்சி அரசியல் நாட்டுக்கு தீமையானது " என்ற பதாகையை பொதுமக்களிடையே நிலவும் அந்த அரசியல் நனவின்மையில் நீச்சல் அடித்துக் கொண்டே தூக்கிப் பிடிக்கின்றார்கள்.

"புரட்சிகரப் பாத்திரத்தில் நிரூபிக்கத்தக்க பங்களிப்பை சோ.ச.க. மட்டுமே வழங்குகின்றது என்ற கருத்து உங்களின் பிரசுரத்தினுள் பரந்து கிடக்கின்றது" என நீங்கள் குறிப்பிடுவது முற்றிலும் உண்மை. ஆனால் அது "எமது எண்ணம்!" ஆனதால் அதை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என நாம் எங்கும் எவருக்கும் கூறியதில்லை. அங்ஙனம் கூறுவது சோசலிசத்துடன் இணைந்தது அல்ல. பாசிசத்துடனேயே இண்ணந்தது.

"புரட்சிகரப் பாத்திரத்தில் எமது நிரூபிக்கத்தக்க தன்மையை" எடைபோடுவதை எமது கட்சியின் முன்நோக்கினதும் வேலைத்திட்டத்தினதும் அடிப்படையில் மட்டுமன்றி எமது நடைமுறையின் அடிப்படையைக் கொண்டும் செய்யுமாறும் நாம் எப்போதும் கூறுகின்றோம். எமது கட்சியின் முன்நோக்கும் வேலைத்திட்டமும் நடைமுறையும் அடிப்படையாகக் கொண்டிருப்பது இவற்றையே: 1.தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் நனவான ஐக்கியத்தை ஸ்தாபிதம் செய்வது. 2.தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனம். 3. சோசலிச சமூக அமைப்பை நிர்மாணிப்பது. வேறு எந்த ஒரு அரசியல் கட்சியோ அல்லது அமைப்போ இவற்றை அடிப்படையாகக் கொண்டதில்லை. இதனை இவர்கள் சகலரதும் முன்நோக்கு, வேலைத்திட்டம், நடைமுறையினுள் தினமும் கண்டு கொள்ள முடியும். நாம் தனியான கட்சியாக அணிதிரண்டிருப்பதும் எமது கட்சியை (சோ.ச.க.) ஒடுக்கப்படும் போராளிகளை அணிதிரட்டிக் கொண்ட தொழிலாளர் வர்க்க வெகுஜனக் கட்சியாக கட்டியெழுப்பப் போராடுவதும் அதானாலேயேயாகும்.

எமது வேலைத்திட்டத்தின் சரியான தன்மைக்கும் அவ்வாறே பலத்துக்கும் ஒரு உதாரணமாக தோழர்.செல்லையா இராஜ்குமார் "முதலாளித்துவ ஒடுக்குமுறை இயந்திரத்தின் மற்றுமோர் பலிகடாவாகிப் போக இருந்து, கட்சியினதும் அனைத்துலக தோழமைக் கட்சிகளதும் கூட்டு இயக்கத்தினால்" (உங்களது சொந்த வார்த்தைகள்) விடுதலையாக முடிந்தமை இராஜ்குமாரின் வார்த்தைகளில் சொன்னால் இன்னும் நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ள பயணத்துக்கு சோ.ச.க.அங்கத்தவரான அவரைப் போலவே கட்சியும் சபதம் செய்து கொணடுள்ளது.

முதலாளித்துவ வெகுஜன ஒடுக்குமுறை இயந்திரத்தின் கூரிய நச்சுவாள் நீட்டப்படுவது முதலாளித்துவ அமைப்பை தூக்கி வீசப் போராடும் தொழிலாளர் வர்க்க புரட்சிகர இயக்கத்திற்கு எதிராகவேயாகும் என்பதை புதிதாகக் கூற வேண்டியதில்லை. ஆனால் ஜே.வீ.பி.போன்ற அமைப்புக்கள் முதலாளித்துவ ஆட்சியாளர்களினால் கொலை செய்யப்பட்ட தமது அங்கத்தவர்களதும் தலைவர்களதும் எண்ணிக்கையை தூக்கிப்பிடிப்பதன் மூலம் தாம் முதலாளித்துவ எதிர்ப்பின் உச்சியில் நின்று கொண்டுள்ளதாக காட்ட முயல்வதை நாம் கண்டுள்ளோம். ஆனால் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பலிகடாக்களாக்க தமது கட்சி அங்கத்தவர்களையும் விட்டுவைக்கும் பொருட்டு தமது தலைவர்கள் 1970ல் சி.ல.சு.க. ல.ச.ச.க. க.க.. கூட்டரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்த பங்களிப்புச் செய்ததையும் 1987 89 காலப்பகுதியில் பிரேமதாச ஆட்சியுடன் நடாத்திய காதல் களியாட்டுக்களையும் மிகவும் இலகுவாக மறந்து போய்விடுகின்றார்கள். எவ்வாறெனினும் 1971ல் சி.ல.சு.க. கூட்டரசாங்கமும் 1987-89 காலப்பகுதியில் ஜயவர்தன பிரேமதாச ஆட்சியாளர்களும் ஜே.வீ.பி.க்கு எதிரான அடக்குமுறையின் பேரில் ஜே.வீ.பி.அங்கத்தவர் தொகையையும் தாண்டிச் செல்லும் பரந்த இளைஞர் படுகொலைகளை நடாத்தியது. இதை அறியாதோர் இருக்கமுடியாது. ஜே.வீ.பி.அந்த படுகொலைகளின் பலிகடா மட்டும் அல்ல.பங்காளியும் ஆகும். இது ஒரு யதார்த்தமான முடிவு என்பதால் நீங்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வீர்கள் என நாம் எண்ணுகின்றோம்.

நான் இந்த விடயத்தை சிறப்பாகக் குறிப்பிட்டதற்குக் காரணம் எமது அரசியல் விமர்சனத்துக்கு ந.ச.ச.க.வும் கம்யூனிஸ்ட் கட்சியும் மட்டுமே இலக்காகின்றன என்ற கருத்து உங்களின் கடிதத்தில் தொக்கி நிற்பதனாலாகும். அது அப்படி அல்ல. தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் சார்பில் நின்று வரும் தொழிற்சங்கங்கள் உட்பட அனைத்து பழைய அமைப்புக்களும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலையையிட்டு அவர்களின் தற்போதைய உரிமைகளைக் காப்பதையிட்டு அடியோடு வங்குரோத்தடைந்துள்ளன என்பதை எம்மைப் போலவே நீங்களும் இன்று உலகம் பூராவும் கண்டு கொள்ள முடியும்.அவற்றின் வங்குரோத்துக்குச் சமாந்தரமாக அவை முதலாளித்துவத்தின் கைப்பொம்மையாக பிற்போக்கு பாத்திரத்தை இட்டுநிரப்ப முன்வந்துள்ளன. இது நவசமசமாஜக் கட்சி,ஸ்டாலினிச்க் கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவே சமசமாஜ, இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி மற்றும் பல்வேறு தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களைப் பொறுத்தமட்டிலும் காணக்கூடியதாக உள்ள நிலைமை அல்லவா?

கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி நீங்கள் எம்மிடம் நம்பிக்கையுடன் முன்வைத்துள்ள ஒரு வேண்டுகோள் "கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்புரட்சியாக விளங்குவது எப்படி என்பதை மேலும் விளக்கும்படியாகும்." சோசலிச சமத்துவக் கட்சியினரான நாம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் என்ற பெயரில் அரசியல் ரீதியில் செயற்பட்ட 28 ஆண்டுகள் பூராவும் தொடர்ச்சியாக ஆயிரக் கணக்கான கட்டுரைகளை வெளியிட்டும் விரிவுரைகள் நடாத்தியும் தெளிவுபடுத்த ஓயாது முயன்றுள்ளோம் என்பதைக் கூறிவைக்க எனக்கு இடமளிக்கவும். அந்தக் கட்டுரைகள், விரிவுரைகள் மூலம் நாம் முன்வைத்த எந்த ஒரு அரசியல் சவாலுக்கும் சரி அரசியல் ரீதியிலோ அல்லது கோட்பாட்டு ரீதியிலோ பதிலளிக்க இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இதுவரை காலமும் முன்வந்தது கிடையாது என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகின்றோம். அவர்களுக்கு பலம் இருந்த அளவுக்கு அவர்களின் பதில் முதலாளித்துவ அரச இயந்திரத்தின் ஒடுக்குமுறையை எமது கட்சிக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடுவதற்கு ஆத்திரமூட்டல்களில் ஈடுபடுவதும் உளவு பார்ப்பதுமாக மட்டுமே விளங்கியது. அதற்குக் காரணம் ஸ்டாலினிசத்துக்கு எதிராக உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர முன்நோக்கினை வழங்குவதில் 1923ல் இருந்து போராடி வந்த ட்ரொட்ஸ்கிச இயக்கம் தொடர்பாக ஸ்டாலினிஸ்டுகள் என்ற வகையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மம் கொண்டிருந்தது மட்டும் அல்ல. அது ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிந்து தமது வசதிவாய்ப்புக்கள் நிலைமையைக் கட்டிக்காப்பதற்காக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக ஈடுபட்டுள்ள போராட்டம் தொடர்பாக வன்மம் பாராட்ட ஸ்டாலினிச அதிகாரத்துவம் தள்ளப்பட்டதுடன் நெருக்கமாக இணைந்ததாகும்.

## 60வருடகால துரோகம்

இலங்கை ஸ்டாலினிச இயக்கத்தின் 60 ஆண்டுக்கால வரலாறு பூராவும் இந்நாட்டு வர்க்கப் போராட்டத்தின் சகல கட்டத்திலும் கம்யூனிஸ்ட் கட்சி செயற்பட்டுள்ள விதத்தைக் கொண்டு இதைப் புரிந்துகொள்ள முடியும். இத்தகைய ஒரு சுருக்கமான பதில் கடிதத்தினுள் குறிப்பிடக் கூடிய அளவுக்கு வர்க்கப் போராட்டத்தின் சில கட்டங்களில் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சி, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஆற்றிய சில கொடிய துரோகங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

இரண்டாம் உலக யுத்தத்தின் மத்தியில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்காக இடம்பெற்ற போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதற்காக பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுடன் இணைந்து தொழிற்பட்டமை. இது "ஜனநாயக" ஏகாதிபத்தியத்துடன் இணைந்து பாசிச ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்கும் வஞ்சகமான சூத்திரத்தின் கீழ் இடம்பெற்றது. பொதுமக்களின் புரட்சிகரப் போராட்டத்துக்கு எதிராக பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கும் தேசிய முதலாளிகளுக்கும் இடையே இடம்பெற்ற சதியின் மூலம் திணிக்கப்பட்ட பாராளுமன்ற ஆட்சி முறையின் கீழ் நடாத்தப்பட்ட 1947 முதலாவது பொதுத் தேர்தலில் சமசமாஜக் கட்சிக்கும் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி உட்பட்ட தொழிலாளர் வர்க்க கட்சிகளுக்கும் எதிராக யூ.என்.பி.யுடன் கைகோர்த்துக் கொண்டமை. 1952ல் பண்டாரநாயக்க

படிப்பகம்

# டத்துக்கான ஆதரவு – பகிரங்கப் பதில்



கதிர்காம பாத யாத்திரையில் தீவிர வலதுசாரியும் இனவாதியுமான திலக் கருணாரத்ன. அனுர பண்டாரநாயக்கவுடன் அணிதிரண்டுள்ள ந.ச.ச.க.பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன

சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் மாற்று முதலாளித்துவக் கட்சியை திணித்த காலத்தில் இருந்து அதன் வக்கீல்களாக தொழிலாளர் அமைப்புக்களுக்கு எதிராக தொழிற்பட்டமை. பண்டாரநாயக்கவின் "சிங்களம் மட்டும்" அரசாங்க மொழியாக்கும் திட்டத்துக்கு ஆதரவு வழங்கி தொழிலாளர் வர்க்கத்தை இனவாதத்தினால் பிளவுபடுத்தி, பலவீனமாக்கியமை. சிங்களம் மட்டும் மசோதாவை அங்கீகரித்த இனவாத தொழிற்சங்கத்தை( சமஸ்த லங்கா ரஜயே லிபிகறு சேவா சங்கமய அகில இலங்கை அரசாங்க லிகிதர் சேவை சங்கம்) ஸ்தாபித்தமை. பொதுஜன பாதுகாப்பு மசோதாவுக்கு எதிராக 1958ல் இடம்பெற்ற ஒரு நாள் பொது வேலைநிறுத்தத்தில் கருங்காலி வேலை செய்தமை.1964 மாபெரும் காட்டிக் கொடுப்பின் பங்காளிகளாக 21 கோரிக்கைகள் இயக்கத்துக்கு முதுகில் கத்தியால் குத்தி முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கத்தை அமைத்தமை. தோட்டத் தொழிலாளர்களை இலட்சக் கணக்கில் இந்தியாவிற்கு நாடுகடத்த இயற்றப்பட்ட சிரிமா சாஸ்திரி ஒப்பந்தத்துக்கு லங்கா சமசமாஜக் கட்சியுடன் சேர்ந்து வாக்களித்தமை. 1966 ஜனவரி 8ம் திகதி சிங்கள இனவாத வேலை நிறுத்தத்தையும் ஊர்வலத்தையும் ஒழுங்கு செய்தமை. இந்த 25 வருட காலத்தினுள் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்ட நாளில் இருந்து இழைத்த துரோகங்களின் ஒரு சிறு துணுக்கு மட்டுமே இவை.அக் கட்சியின் இந்த எந்த ஒரு நடவடிக்கையும் சரி எதிர்ப்புரட்சி அல்ல என வாதிட எவருக்கும் இடம் உண்டா?

1968-70 இடைப்பட்ட காலத்தில் அன்று இருந்துவந்த யூ.என்.பி.அரசாங்கத்துக்கு எதிராக அரசாங்கத் துறையிலும் கூட்டுத்தாபனத் துறையிலும் தனியார் துறையிலும் தொழிலாளர்கள் ஒரேயடியாகப் வேலைநிறுத்தத்தில் குதித்த போது சமசமாஜ, சமசமாஜ(புரட்சிகர) கட்சிகளுடன் சேர்ந்து அந்தச் சகல போராட்டங்க்ளையும் அரசியல் ரீதியில் தடம்புரளச் செய்ய கம்யூனிஸ்ட் கட்சி செயற்பட்டது. 1970 முதலாளித்துவ சிறீலங்கா- சமசமாஜ கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் "மக்கள் அரசாங்கம்" ஆக ஆட்சிக்குக் கொண்ரப்பட்டது வர்க்கப் போராட்டத்துக்கு குழிபறித்த அந்த பிற்போக்கு பாதையின் ஊடாகவேயாகும்.1970 75க்கு இடைப்பட்ட காலத்தில் மட்டுமன்றி 1975ன் கடைப்பகுதியில் சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கத்தில் இருந்து கலைக்கப்பட்டதன் பின்னரும் முதலாளித்துவ சிறீலங்கா அரசாங்கத்தினை கட்டியணைத்துக் கொண்டு 1976ன் கடைப்பகுதியின் தோன்றிய தொழிலாளர் போராட்ட அலைகளுக்கு எதிராக அவசரகாலச் சட்டத்தையும் அத்தியாவசிய சேவை விதிகளையும் இராணுவ தலையீட்டையும் கொண்ட ஒடுக்குமுறையை கையாளக் கூட விக்கிரமசிங்க கெனமன் - கே.பி.சில்வா தலைமையிலான ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துழைப்பு வழங்கியது.

அதிலிருந்து 17 ஆண்டுகள் யூ.என்.பி.அரசாங்கத்தின் கீழும், இப்போது நான்கு வருடங்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழும் கம்யூனிஸ்ட் கட்சியின் துரோகம் பற்றிக் குறிப்பிட நான் முயற்சிக்காததற்குக் காரணம் இந்த கடிதம் நீண்டு விடும் என்பதற்காக மட்டும் அல்ல. அது புதிய தலைமுறையினரின் பார்வையில் ஏதோ ஒரு அளவுக்கேனும் அகப்பட்டுக் கொண்டுள்ளதன் காரணமாகவேயாகும். நாற்றம் கண்ட யூ.என்.பி.ஆட்சியை தூக்கி வீச "நாம் பங்களிப்புச் செய்தோம்" என விடுதலைப் புலிகள் தொடக்கம் ஜே.வீ.பி.வரையிலான பல்வேறு அரசியல் கட்சிகளும் பெருமை பாராட்டும் காலம் இப்போது ஒரு முடிவுக்கு வந்துள்ளது. யூ.என்.பி.யை தோற்கடித்து ஆட்சிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஜனாதிபதியும் மிகவும் படுகொடூரமான முறையில் பொதுமக்களுக்கு எதிராக தாக்குதல் தொடுக்க தொடங்கியுள்ள ஒரு நிலையிலேயே இங்ஙனம் செய்கின்றார்கள்.

ஸ்டாலினிசக் "கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்புரட்சியானது எப்படி "என்ற கேள்விக்கு பதிலாக இலங்கையில் வ்ாழும் நாம் அனுபவித்துள்ள இந்தத் தீர்க்கமான அனுபவங்க்ள் மட்டும் போதுமானதல்ல . அதற்குக் காரணம் இந்நாடு உள்ளடங்கலான உலகம் பூராவும் ஸ்டாலினிஸ்டுகள் ஆற்றிய துரோக பாத்திரங்கள் பற்றிய நோய்க்ளின் அறிகுறிகள் மட்டுமே. நோய்களின் சுரங்கமாக சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவம் இருந்து கொண்டு இருந்தது.இதனால் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தினால் தொடுக்கப்பட்ட ஸ்டாலினிசத்தைத் தோற்கடிக்கும் போராட்டம் சகல விதத்திலும் சோவியத் அதிகாரத்துவத்தைத் தொழிலாளர் வர்க்க பதிலீட்டினால் இடப்பெயர்ச்சி செய்யும் ஒரு அனைத்துலக இயக்கத்தைக் கட்டியெழுப்பும் மையத்தைச் சூழ அமைக்கப்பட்டது.

லெனின் ட்ரொட்ஸ்கி முதலான போல்ஷிவிக்குகள் ரூஷ்யப் புரட்சி முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாதத்தினை தலைகீழாக்கிய ஸ்டாலினிச அதிகாரத்துவம் 1923ல் இருந்து தனிநாட்டில் சோசலிசம் என்ற தேசியவாத பிற்போக்கு வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இது மற்றைய நாடுகளில் தொழிலாளர் வர்க்கப் புரட்சிகளைக் காட்டிக் கொடுக்கும் செலவில் பிற்போக்கு ஆளும் வர்க்கத்துடன் சமரசத்துக்கு சென்றது. இதன்மூலம் சோவியத் யூனியனினுள் அதிகாரத்துவத்தின் சிறப்பு சலுகைகள் படைத்த நிலைமையை பேணிக்காப்பதை இலக்காக்கிக் கொண்டது.

1928ல் ட்ரொட்ஸ்கி பின்வருமாறு எழுதினார்: 1923-28 ஆண்டுகளின் அனுபவங்களின் பின்னர் தொழிலாளர் அல்லாத வர்க்கங்களினால் தொழிலாளர் வர்க்கத்தின் மீது திணிக்கும் அழுத்தங்களின் வெளிப்பாடும், ஆயுதமும் சோவியத் யூனியனின் அதிகாரத்துவமாகும் என்பதையிட்டு எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது. ஆதலால் அதிகாரத்துவத்தின் வளர்ச்சிக்கான காரணத்தை தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரி வர்க்கங்களின் தாக்கம் வளர்ச்சி காணும் நிலைமையினுள்ளேயே ஆராய வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிகள்-அதாவது, முக்கியமாக அதன் த்லைமைப் பீடமான சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின் மாற்றங்கள், மீளக் குழு அமைப்புக்களுடன் அமைப்பு ரீதியில் அணிதிரண்டு கொண்ட அளவுக்கு ஏற்ப வெளிநாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் அதிகாரத்துவவாதம் பெருமளவுக்கு சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியுள் நிலவிய அதிகாரத்துவத்தின் பிரதிபலிப்பு மட்டுமேயாகும்."(ஏகாதிபத்திய சகாப்தத்தில் மூலோபாயமும் உபாயமும்)

சோசலிசத்துக்கான தொழிலாளர் வர்க்க அவசியங்களுக்கு ஏற்ப அல்லாது வசதி வாய்ப்புக்கள் கொண்ட அதிகாரத்துவத்தின் அவசியங்களுக்கு இணங்க மூன்றாம் கம்யூனிஸ்ட் அகிலத்தைச் செயற்படுத்த ஸ்டாலினிச அதிகாரத்துவம் கடைப்பிடித்த நடவடிக்கைகளின் நாசகார விளைவுகளுக்கு சோவியத் தொழிலாளர் வர்க்கம் உட்பட்ட உலகத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுத்தனர். பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் உலக அரங்கினுள் ஐந்தாம் ஆண்டளவில் இடம்பெற்ற மாபெரும் காட்டிக் கொடுப்புக்கள் சிலவற்றை குறிப்பிடுவதாயின்: 1. 1926 பிரித்தானிய பொது வேலைநிறுத்தத்தை தொழிற்சங்க சம்மேளனங்களின் "இடது" குழு எனப்படுவதற்கு ஆதரவு வழங்குவதன் மூலம் தோற்கடிக்க இடம் அளித்தமை.2. ஏகாதிபத்தியச் சார்பு தேசிய முதலாளி சியாங்கைசேக்கின் குவாமிங்டானுடன் கூட்டுச் சேர்ந்து 1927ல் சீனப் புரட்சியின் குரல்வளையை நசுக்கியமை. 3.ஜேர்மனியில் நாசிச ஹிட்லரின் எழுச்சியை நசுக்க ஐக்கிய முன்னணி உபாயத்தின் கீழ் ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்ட மறுத்தமை.4. கம்யூனிஸ்ட் அகிலத்தின் 1920 இரண்டாம் மகாநாட்டுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட்கள் கலந்து கொண்டிருந்த ஒரு நிலையிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை 1926ம் ஆண்டுவரை நிறுவாது இருந்தமை ஆகியவற்றை குறிப்பிட முடியும். இந்த நான்காவது விடயம் இந்திய மக்கள் மீது தேசிய முதலாளித்துவ காங்கிரசினதும் காந்தி நேரு தலைமையினதும் அரசியல் ஆளுமையை திணிக்க துணை போனதோடு மட்டுமன்றி, இலங்கையினுள் மார்க்சிச இயக்கத்தின் ஆரம்பத்தை ஒன்றரை தசாப்தங்களால் பின்தள்ளியும் போட்டது.

உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக ஸ்டாலினிஸ்டுகளால் இளைக்கப்பட்ட சகல கேவலமான காட்டிக் கொடுப்புக்களையும் பற்றிய முழு விபரத்தை இத்தகைய ஒரு சிறிய கட்டுரையினுள் உள்ளடக்கிவிட முடியாததாலும் நீங்கள் இடதுசாரி அரசியல் பற்றி நனவுபெற அக்கறை கொண்டவனாகக் குறிப்பிட்டுக் கொண்டுள்ளதாலும் கீழ்க்கண்ட கம்கறுமாவத்த வெளியீடுகளை ஆய்வு செய்யும்படி நினைவுபடுத்த நான் விரும்புகின்றேன்.

1. சோவியத் யூனியன் எங்கே செல்கின்றது?டேவிட் நோர்த்
2. சோவியத் யூனியனின் முடிவு (நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை)
3. சோவியத் யூனியனுள் நடப்பது என்ன? (நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு) (இவை தமிழிலும் வெளிவந்துள்ளன)
4. மாஸ்கோ பொய் வழக்கு (மார்க்ஸ் ஷட்மன்)
5. ஸ்டாலினிச இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 5 0வருடகால எதிர்ப்புரட்சி காட்டிக் கொடுப்பு கே.ரத்னாயக்க.
6. சோசலிசம் எதிர் பெரொஸ்ரொயிகா டேவிட் நோர்த்
7. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 11வது மகாநாடு ஸ்டாலினிசத்தின் மரணத்தைத் தள்ளிப்போடும் முயற்சி
8. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 11வது மகாநாடு ஸ்டாலினிசம் அம்பலம்

## ந.ச.ச.க. தொழிற்பாடு

நவசமசமாஜக் கட்சி இராஜ்குமாரை விடுதலை செய்யுமாறு கேட்டு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் பிரசுரிக்கப்பட்டதை பற்றியும் விளக்கும்படி கேட்டுள்ளீர்கள். "ந.ச.ச.க. பற்றி அம்பலப்படுத்தும் விடயங்களுக்கும் இந்த ஆதரவுக்கும் இடையே முரண்பாடு இல்லையா" என நீங்கள் கேட்டுள்ளீர்கள்.

இந்த விடயத்தை தெளிவுபடுத்துகையில் இராஜ்குமாரை விடுதலை செய்வது தொடர்பாகவும் ந.ச.ச.க.வின் இரண்டு அங்கத்தவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு இருப்பது தொடர்பாகவும் சோசலிச சமத்துவ கட்சியின் பொதுச் செயலாளரான நான் 1997 05 08ல் ந.ச.ச.க.செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தின் நான்கு பந்திகளை இங்கு மேற்கோளாகக் காட்ட விரும்புகின்றேன்:

"நவ சமசமாஜக் கட்சிக்கும் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் இடையே ஆழமான அரசியல் வேறுபாடுகள் இருப்பதை நாம் மூடி மறைக்கவில்லை. ஆனால் நாம் எப்போதும் செய்துள்ளது போல் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தாக்குதல் தொடுக்கும் போது அதற்கு எதிராக ஐக்கிய முன்னணி விதிமுறையின் அடிப்படையில் நின்று போராட எமது தயார் நிலையை நாம்

## கைவிட்டது கிடையாது.

"ஒருவருக்கு விழும் அடி சகலருக்கும் உறைப்பதாகும்" என்ற தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கொள்கை, காலவதியான பிதற்றல் அல்ல. இன்று அரச எல்லைகளைக் கடந்து செல்லுபடியாகும் உயிர்புஷ்டியுள்ள விதிமுறையாக நாம் கணிக்கின்றோம். ஆதலால் உங்களது அமைப்பின் அங்கத்தவர்களுக்கு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தொடுக்கும் தாக்குதல்களுக்கும் கெடுபிடிகளுக்கும் எதிராக அவர்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பாக நாம் காட்டும் அக்கறையை எமது அமைப்பின் அங்கத்தவர்களுக்கு எதிராக நடாத்தும் செல்லையா இராஜ்குமார் காலவரையறை இல்லாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளது போன்ற ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரங்களுக்கு உங்கள் கட்சியும் காட்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

நவசமசமாஜக் கட்சி தொழிற்சங்க

16ம் பக்கம் பார்க்க

www.padippakam.com



# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

அமெரிக்க ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் மே இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகின்றது.

(கடந்த இதழின் தொடர்ச்சி)

### பூகோளமயமான உற்பத்தியும் தொழிற்சங்கங்களும்

பூகோளமயமான உற்பத்தியின் பரந்த வரலாற்று சிறப்பம்சங்களை மறுக்கும் ஸ்பார்ட்டசிஸ்டுகளின் முயற்சியின் பின்னாலான மைய அரசியல் உந்து சக்தியின் ஒன்று தொழிறச்ங்க வடிவிலான அமைப்புக்களை அவர்கள் பாதுகாப்பதாகும். ஸ்பார்ட்டசிஸ்டுகள் தமது தாக்குதலை(அமெரிக்க) சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளர் டேவிட் நோர்த் 1992ல் வழங்கிய ஒரு அறிக்கையின் ஒரு பந்தியை மையமாகக் கொண்டு தொடுக்கின்றனர்.

"தொழிலாளர் வர்க்கத்தின் பழைய அமைப்புக்களின் வீழ்ச்சியானது அடிதப்படையில் சிறப்பான வரலாற்று, பொருளாதார நிலைமைகளின் பெறுபேறாகும். இந்த நிலைமைகளைப் புரிந்து கொள்வதானது இடம்பெற்றவற்றுக்கான பொறுப்புக்களில் இருந்து நாம் இந்த அமைப்புக்களின் தலைவர்களினை விடுதலை செய்வதைக் குறிக்காது. மாறாக தலைவர்களின் நாற்றெமடுப்பும் கூட ஒரு புறநிலைப் போக்கினது ஒரு அகநிலை வெளிப்பாடு மட்டுமே என்பதை இனங்காண எம்கரு உதவுகின்றது. ... பிரமாண்டமான ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் தேசிய அரச முறையின் இறுதியான நெருக்கடியின் கீழ் முதலாளித்துவ உற்பத்தியின் பூகோளரீதியான ஒருங்கிணைப்பு தொழிலாளர் வர்க்கத்தின் பழைய அமைப்புக்களின் நடவடிக்கைகள் அடிப்படையாகக் கொண்டிருந்த கட்டியெழுப்பப்பட்டிருந்த அடிப்படை புவிசார் பொருளாதார அத்திவாரத்தை தகர்த்துவிட்டது. தேசிய அடிப்படையிலான தொழிலாளர் அமைப்புக்கள் அனைத்துலக ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களை கண்டிப்பான முறையில் சவால் செய்ய இலாயக்கற்றவையாக்கிவிட்டன.

ஸ்பார்ட்டசிஸ்டுகள் அனைத்துலக குழுவுக்கும் டேவிட் நோர்த்துக்கும் எதிராக தூக்கிவீசிய முக்கிய குற்றச்சாட்டு " உலகப் பொருளாதாரத்திலான புறநிலை மாற்றங்கள் தொழிற் சங்கங்களை மலடாக்கிவிட்டதாக அவர் ஊர்ஜிதம் செய்கிறார்."

என்பதாகும். ஸ்பார்ட்டசிஸ்டுகளின்படி தொழிற்சங்கங்கள் தொழிலாளர் வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்தமைக்கான பொறுப்பு முற்றிலும் தொழிற்சங்க அதிகாரத்துவத்தையே சார்ந்தது. அது முதலாளி வர்க்கத்துக்கு இயைந்து போய், "கடும்பந்தை விளையாட" தொழிற்சங்க அங்கத்துவத்தை அணிதிரட்ட மறுக்கின்றது.

"அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தின் பின்னடைவு அடிப்படையில் பூகோளமயத்தின் புறநிலைத் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்டது அல்ல. ஆனால் ஏ.எப்.எல்.-சீ.ஐ.ஓ. கடைகெட்ட தலைவர்களின் தோற்கடிப்பு, துரோகக் கொள்கைகளினால் ஏற்பட்டது." என இவர்கள் பிரகடனம் செய்கின்றனர்.

தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் துரோகப் பாத்திரத்தை மறுப்பதிலும் தொழிலாளர் வர்க்கத்தின் சமூக அந்திஸ்தின் சீரழிவுக்கான பொறுப்பில் இருந்து அவர்களை விடுதலை செய்வதிலும் கடைசியில் நிற்பது அனைத்துலகக் குழுவே. ஆனால் அது இறுதி ஆய்வுகளில் தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் பாத்திரம் ஒரு புறத்தில் உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிலான மாற்றம், மறுபுறத்தில் தொழிற்சங்க அமைப்புக்கு இயற்கையான பண்பு என்ற இரண்டுடனும் இணைந்து கொண்டுள்ள ஆழமான புறநிலை போக்குக்களின் வெளிப்பாடாகும் என வலியுறுத்துகின்றது.

நாம் இந்தப் பிரச்சினைகளையிட்டு பின்னர் மேலும் விரிவாக ஆராய்வோம். இந்தக் கட்டத்தில் கீழ்வரும் விடயத்தை மட்டும் குறித்து வைக்க விரும்புகின்றோம்: "சகல அகநிலை விளக்கங்களைப் போல் தொழிற்சங்கங்களது காட்டிக் கொடுப்பும் அதிகாரத்துவத்தினது நாற்றம் கண்ட தன்மையின் பெறுபேறே "என்ற ஸ்பார்ட்டசிஸ்ட் குழுவின் வாதம் இறுதியில் எதையும் விளக்கத் தவறிவிடுகின்றது.

உலகின் சகல நாடுகளிலும் தொழிற்சங்க அதிகாரத்துவத்தினதும் சகல பகுதியினரும் ஒரே நேரத்தில் ஒரே கொள்கையையே கடைப்பிடித்துள்ளன என்ற விடயத்தைத் தெளிவுபடுத்துவது எப்படி? தொழிலாளர் வர்க்கம் கடந்த காலத்தில் தொழிற்சங்கங்களின் மூலம் வரையறுக்கப்பட்ட சடரீதியான சலுகைகளை வெற்றிகொண்ட போதிலும் இப்போது தொடர்ந்து பின்நோக்கி தள்ளப்பட்டு வருவது எப்படி? 1950பதுகளில் தொழிற்சங்கங்களை பிடித்துக் கொண்டிருந்த கடைகெட்ட கம்யூனிஸ்ட் விரோதிகள் இன்றைய தொழிற்சங்க அதிகாரத்துவங்களைக் காட்டிலும் குறைவாக நாற்றம்கண்டுபோய் இருந்தார்கள் என்பது இதன் அர்த்தமா? அவர்களது அரசியல் உறவுகள் என்னவாக இருந்தாலும் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் ஒரே பாத்திரத்தினையே இட்டுநிரப்புவார்கள் என்பதற்கு காரணம் என்ன? அனைத்துலகக் குழு பெரும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும்



கார்ள் மார்க்ஸ்



எங்கேல்ஸ்

அவற்றின் பேச்சாளர்களதும் பிரச்சார இயக்கத்தின் எதிரில் தோற்கடிப்புவாதத்தையும் அடிபணிவையும் போதிப்பதன் மூலம் அதிகாரத்துவத்தின் காட்டிக் கொடுப்புக்களை நியாயப்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்ற தமது நிலைப்பாட்டை ஊர்ஜிதம் செய்ய எடுக்கும் முயற்சியில் ஸ்பாரர்ட்டசிஸ்டுகள் அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளர் நிக் பீம்சினால் வழங்கப்பட்ட ஒரு அறிக்கையில் இருந்து பின்வரும் மேற்கோளை முன்வைக்கின்றார்கள்.

உபரி பெறுமானத்தின் பிடுங்கலானது தரப்பட்ட அரசின் வரையறைக்குள் இன்னமும் இடம்பெற்றுக் கொண்டு இருக்கும்வரை தேசிய அரசின் ஊடாக தொழிலாளர் வர்க்கம் சீர்திருத்தங்களுக்கும் சலுகைகளுக்கும் மூலதனத்தின் மீது நெருக்குவாரம் கொடுப்பது சாத்தியமாக இருந்தது. இது தொழிற்சங்கங்களதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும்

வேலைத்திட்டமாக இருந்தது. இது இனித் தொடர்ந்தும் சாத்தியமில்லை."

இந்தப் பந்தியின் மீது கருத்து தெரிவிக்கையில் ஸ்பார்ட்டசிஸ்டுகள் தேசியவாதத் தகவமைவினை வெளிக்காட்டிக் கொள்கின்றனர். அது அனைத்துலக குழுவின் மீதான அவர்களின் தாக்குதலின் அடிப்படையாக அமைகின்றது.

"வேறுவார்த்தைகளில் சொன்னால் வேலைநிறுத்தங்கள் அல்லது வேறு நடவடிக்கைகள் மூலம் என்னதான் உபாயங்களையும் கொள்கைகளையும கடைப்பிடித்தாலும் தொழிலாளர் வர்க்கம் மூலதனத்தின் கொள்ளையடிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியாது என நோர்த்வாதிகள் வாதிடுகின்றார்கள்." (வேர்க்கர்ஸ் வன்கார்ட் 1997 சனவரி 27)

இங்கு நாம் குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்தின் சகல வடிவிலான அரசியலுக்கும் பொதுவான சித்தாந்தத்தினை கண்டு கொள்ள முடியும் : யுத்தத்துக்குப் பிந்திய காலப்பகுதியில் தோற்றம் எடுத்த தேசிய அடிப்படையிலான தொழிற்சங்க உருவங்களுடன் வர்க்கப் போராட்டத்தை அடையாணங்காண்பது.

தொழிலாளர் வர்க்கம் தேசிய அடிப்படையிலான வேலைகொள்வோர் மீதும் தேசிய அரசு மீதும் கைத்தொழில், அரசியல் அழுத்தங்களைக் கையாள்வதன் மூலம் தனது சமூக அந்தஸ்தினைப் பேணவும் அபிவிருத்தி செய்யவும் முயன்ற தேசிய சீர்திருத்தவாத சகாப்தம் முடிவடைந்துவிட்டது என்பதை அனைத்துலக குழு விளக்கியுள்ளது. எவ்வாறெனினும் ஸ்பார்ட்டசிஸ்டுகளின்படி இது தொழிலாளர் வர்க்கம் அதனது நலன்களைக் காக்கும் எந்த ஒரு வழியையும் கொண்டிருக்கவில்லை என்பதாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால் தொழிலாளர் வர்க்கமும் தொழிற்சங்கங்களும் ஒன்று. வர்க்கப் போராட்டம் தொழிற்சங்கப் போராட்டமே. தேசிய அரசின் பொருளாதார சக்தியானது குழிபறிந்து போய்விட்டது என ஊர்சிதம் செய்வது வர்க்கப் போராட்டம் முடிவடைந்துவிட்டது என வாதிப்பதற்குச் சமமாகும்.

வர்க்கப் போராட்டத்தை யுத்தத்தின் பின்னைய கால செழிப்பின் போது அடைந்த திட்டவட்டமான பெரிதும் இறுக்கமான தேசிய வடிவங்களுடன் சமப்படுத்துவதன் மூலம் ஸ்பார்ட்டசிஸ்டுகள் அத்தகைய போராட்டங்கள் தொடர்வது சாத்தியம் என்பதை நிரூபிக்க வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



பூகோளமயமான உற்பத்திக்கும் தொழிற்சங்கங்களின் வீழ்ச்சிக்கும் எதுவிதமான தொடர்பும் கிடையாது எனக் காட்டும் முயற்சியில் ஸ்பார்ட்டசிஸ்டுகள் பிரகடனம் செய்வதாவது :

1980பதுகளில் அமெரிக்க தொழிலாளர் இயக்கத்தின் வீழ்ச்சியையும் தோல்வியையும் குறித்துநின்ற எந்த ஒரு பெரும் வேலைநிறுத்தங்களிலும் பற்கோ விமானப் போக்குவரத்தாளர், கிறேஹன்ட் பஸ் சாரதிகள், பெப்ஸ் டொட்ஜ் செம்பு சுரங்க தொழிலாளர்கள், ஈஸ்டேர்ண் எயார்லைன்ஸ் இயந்திரவியலாளர்கள், ஹோமால் இறைச்சி பொதியாளர்கள் வெளிநாட்டு போட்டியோ அல்லது வெளிநாட்டில் பன்நாட்டு கம்பனிகளின் இயக்கமோ எந்த ஒரு கணிசமான பாத்திரத்தையும் வகிக்கவில்லை. கிறேஹோன்ட், ஈஸ்டேர்னம் எயார்லைன்ஸ், ஹோர்மல் ஆதியன தமது சகல உபரி பெறுமானத்தையும் அமெரிக்கன் அரசின் வரையறைக்குள் உள்ள தொழிலாளர்களில் இருந்தே சுரண்டிக் கொள்கின்றன".12

புத்திஜீவி வங்குரோத்துக்கு இதைக்காட்டிலும் பிரமாண்டமான வேறு எடுத்துக்காட்டு இருக்கமுடியாது. முதலாம் இடத்தில் தொடர்ந்துவந்த தாக்குதல்களுக்கு களம் 1981ல் பற்கோ(வேலைநிறுத்தம்) தவிடுபொடியாக்கப்பட்டமை உலக முதலாளித்துவத்தின் அரசியல் தலைமையான அமெரிக்க அரசுகளின் அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு அமுல்செய்யப்பட்டது என்பதை நினைவுகூர வேண்டும். இது அமெரிக்க நிதிமூலதன்ததினால் ஒழுங்கு செய்யப்பட்ட அனைத்துலக பொருளாதார கொள்கை மாற்றத்தின் போது இடம்பெற்றதோடு அமெரிக்க சமஷ்டி ரிசேர்வ் வங்கி தலைவர் போல் வோர்க்கரினால் 1979ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர் வட்டி வீதத்தை முன்னொரு போதும் இல்லாத உயர்ந்த மட்டத்துக்கு அதிகரித்ததோடு யுத்தத்துக்கு பிந்திய காலத்தில் ஆழமான பொருளாதார பின்னடைவையும் ஏற்படுத்தினார்.

இந்தப் பெரிதும் முக்கியமான அரசியல் உண்மையை தள்ளிவைத்தாலும் கூட ஸ்பார்ட்டசிஸ்டுகளின் ஆய்வுகள் முதலாளித்துவ அமைப்பின் தொழிற்பாடுகள் பற்றி அவர்கள் எதையும் அறிந்திருக்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. மார்க்சிச அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிக் கூறவேண்டியதில்லை.

மூலதனத்தின் மூன்றாம் அத்தியாயத்தில் "போட்டி ஊடாக பொதுஇலாப வீதத்தை சமப்படுத்தல் "என்ற தலைப்பிலான பகுதியில் மார்க்ஸ் ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின் இலாப மட்டங்கள் ஒரு குறிப்பிட்ட கூட்டுத்தாபனம் தொழிலாளர்களிடமிருந்து நேரடியாக சுரண்டும் உபரிப் பெறுமானத்தினால் நிர்ணயிக்கப்படுவது இல்லை எனக் காட்டினார். மாறாக, ஒவ்வொரு நிறுவனமும் தொழிலாளர் வர்க்கத்திடமிருந்து சுரண்டிக் கொள்ளப்பட்ட மொத்த உபரிப பெறுமானத்தின் ஒரு பகுதியை அதைக் கறக்க பயன்படுத்தப்பட்டுள்ள மொத்த மூலதனத்தில் அதன் பங்குக்கு ஏற்ப-பெறுகின்றன. உபரிப் பெறுமானத்தின் இந்தப் பகுதி- இலாப உருவில் ஒரு சமூகப் போக்காகும். இது மூலதனத்தின் வேறுபட்ட பகுதிகளுக்கு இடையேயான போட்டி போராட்டங்களின் மூலம் இடம்பெறுகின்றது. சராசரி செலவுக்கு குறைவாக உற்பத்தி செய்யும் மூலதனத்தின் அந்தப் பகுதிகள் சராசரி இலாபத்தைக் காட்டிலும் கூடுதலாகப் பெறுகின்றன. எவரின் செலவுகள் சராசரியைக் காட்டிலும் கூடுதலாக உள்ளதோ அவர் சமூக சராசரியைக் காட்டிலும் குறைவான வீதத்தில் இலாபம் பெறுவார்.

இந்தச் சராசரிகள் புதிய உற்பத்தி போக்கினதும் தொழில்நுட்பங்களதும் அபிவிருத்தியை தொடர்ந்து மாற்றத்துக்கு உரியவை. ஒரு கட்டத்தில் ஒரு புள்ளியில் சராசரி அல்லது சராசரிக்கு குறைவான செலவைக் கொண்டிருந்த ஒரு உற்பத்திச்



உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தின் கீழ் சீனத் தொழிலாளர்கள் நிக்கே ட்ரான்ஸ்நஷனல் கம்பனிக்கான சப்பாத்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்

போக்கானது புதிய விதிமுறைகள் அபிவிருத்தி கண்டதைத் தொடர்ந்து மற்றொரு காலப் பகுதியில் சராசரி செலவைக் காட்டிலும் உயர்ந்து போகச் செய்கின்றது.

கடந்த காலத்தில் பெருமளவுக்கு தேசிய சந்தைகளுக்குள் நிறுவனங்கள் இயங்கிய சமயத்தில் உபரி பெறுமானப் பங்கீடு மீதான போராட்டம் ஆரம்பத்தில் ஒரு தரப்பட்ட தேசிய அரசின் எல்லைகளுக்குள்ளேயே இடம்பெற்றது. இந்த உற்பத்தியின் பூகோளமயமாக்கம் ஒரு புதிய நிலைமையை உருவாக்கி உள்ளது. தேசிய சந்தைகளில் இருந்து அவற்றுக்கு கிடைக்கும் வருமான வீதாசாரத்தை பொருட்படுத்தாமல் செலவுகள், திறமை, உழைப்பு, உற்பத்தித் திறன், இலாப வீதம் எல்லாம் இந்த அனைத்துலக அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட நிறுவனம் இயங்குவது பூகோள ரீதியிலா தேசிய ரீதியிலா அல்லது ஒரு பிராந்திய அல்லது நகராந்த அடிப்படையிலா என்பது எல்லாம் இது முகம் கொடுக்கும் செலவு அடிப்படையானது இதில் இருந்து சுயாதீனமாக இயங்கும் உலகப் பொருளாதாரப் போக்கின் பெறுபேறாகும்.

சேவைகளும் பண்டங்களும் ஒரு தேசிய சந்தைக்குள்ளேயே உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டாலும் அவை பூகோளரீதியான தரத்தையும் செலவையும் சந்திக்க வேண்டியுள்ளது. பெரும் உள்நாட்டு சந்தையைக் கொண்ட ஐக்கிய அமெரிக்காவினுள் 1960பதுகளினுள் 4 வீத உள்நாட்டு உற்பத்தி மட்டுமே அனைத்துலகப் போட்டிக்கு உள்ளானதோடு இன்று இது 70 வீதத்தை தாண்டியுள்ளதாகக் கணிக்கப்படுகின்றது.

மேலும் அவர்களின் பண்டங்களுக்கும் சேவைகளுக்குமான சந்தை என்னவாக இருந்த போதிலும் சகல கம்பனிகளும் அனைத்துலக மூலதனத்தினதும் நிதிச் சந்தைகளதும் ஆணைகளுக்கு உட்பட்டவை. அனைத்துலக செலவுத் தரங்களை அதாவது, அனைத்துலக ரீதியில் நிர்ணயம் செய்யப்பட்ட இலாப வீதத்தை சந்திக்க முடியாத நிறுவனங்கள் அந்த மூலதனத்தை பெரும் செலவுக்குரியதாக காணும்.

முதலாளித்துவமும் தேசிய அரசின் தோற்றமும்

ஸ்பார்ட்டசிஸ்டுகள் தேசிய அரசைப் பற்றி ஒரு இராணுவ ரீதியிலானதும் இறுதியில் அகநிலை ரீதியிலானதுமான ஒரு நோக்கினை முன்வைக்கின்றனர். அவர்களின் கருத்தின்படி தேசிய அரசு உற்பத்திச் சக்திகளின் வரலாற்று அபிவிருத்தியின் ஒரு திட்டவட்டமான காலகட்டத்தின் ஒரு அரசியல் தோற்றப்பாடு அல்ல. ஆனால் வெறுமனே முதலாளி வர்க்கம் தனது பொருளாதார மேலாதிக்கத்தை பராமரிக்க அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு அரசியல் -இராணுவக் கருவியே.

முதலாளித்துவ தேசிய அரசு எந்தவிதத்திலும் ஒரு இராணுவ மோதுதல்களின் உற்பத்தி அல்ல. அது நிலமானித்துவ ஆட்சிகளுக்கு குழிவெட்டிய வர்த்தகம் அதிக அளவிலான பணப் பாவனையுடன் இணைந்த ஆழமான பொருளாதார மாற்றங்களுடன் தோன்றியது. இராணுவப் பலம் ஆரம்பக் காரணியாக இருக்கவில்லை. எங்கேல்ஸ் விளக்கியது போல் நிலமானித்துவ பிரபுக்களின் கோட்டைகளின் சுவர்களை உடைத்துக் கொண்டு செல்லும் குண்டுகளை பீரங்கிகளில் இருந்து தீர்ப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே இந்தத் தாக்குதல்களில் இவை ஏற்கனவே பணத்தினால் பலவீனம் கண்டு போயின. உண்மையில் வெடிகுண்டு பணத்தின் சேவையில் இருந்து கொண்டுள்ள ஒரு கொலையாளி மட்டுமே. பணம் கைகளில் இருந்து கொண்டிருந்த பெரும் அரசியல் மட்டமாக்கும் கருவியாக விளங்கியது.

தேசிய அரசின் ஸ்தாபிதத்தின் பின்னால் இருந்து கொண்டிருந்த முக்கிய உந்து சக்தி பொருளாதாரம். முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியும் மூலதனத்தின் திரட்சியும் ஒரு தேசிய சந்தையின் அபிவிருத்தியையும் வேண்டிநின்றதோடு சலுகைகள் அரசியல் கட்டுப்பாடுகள், உள்ளூர் சுங்க தடைகள், வரிகளை தகர்க்கும்படியும் வேண்டின. இவை உற்பத்தியை சகல புறங்களிலும் கட்டுப்படுத்தின.

முதலாளித்துவ உற்பத்தியின் அபிவிருத்தியானது பின் தங்கிய கிராமங்களையும் மாகாணங்களையும் ஒன்றிணைத்தது. இது மாகாணங்களை நகரங்களுடன் இணைத்ததோடு ஒரு தேசிய சந்தையையும் உருவாக்கியது. ஒரு பொதுவான மொழி, சட்டங்கள், பொதுவான நாணயத்துடனும் ஒன்றாக இணைந்தது.

எவ்வாறெனினும் உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியானது தேசிய அரசினதும் தேசிய சந்தைகளதும் உருவாக்கத்துடன் நின்றுவிடவில்லை. அதனது மேலாய அபிவிருத்தியில் முதலாளித்துவ உற்பத்தி தேசிய அரச வரம்பையும் தாண்டிச் செல்லத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டின் முழு வரலாறும் ஏகாதிபத்திய போட்டிகளின் உக்கிரம் தொடக்கம் 1914ல் உலகப் போரின் வெடிப்பு வரை இந்த வளர்ச்சி கண்டுவரும் முரண்பாடுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அன்றைய சகல மார்க்சிஸ்டுகளும் விளக்கியது போல் முதலாம் உலக யுத்தம் உற்பத்திச் சக்திகள் தேசிய அரசின் வரம்புகளை தாண்டி வளர்ந்துவிட்டதை குறித்துநின்றன.

1915ல் ட்ரொட்ஸ்கி விளக்கியது போல் "இன்றைய யுத்தம் அதன் அடியில் தேசியத்தினதும் அரசினதும் அரசியல் வடிவத்துக்கு எதிரான உற்பத்திச் சக்திகளின் ஒரு கிளர்ச்சியை கொண்டுள்ளது. இது ஒரு சுதந்திரமான பொருளாதார அலகு என்ற விதத்தில் தேசிய அரசின் சரிவை குறித்து நிற்கின்றது. ... யுத்தத்தின் நிஜ புறநிலை மையங்களின் சரிவு அதற்குப் பதிலாக ஒரு உலகப் பொருளாதாரத்தின் பதிலீடும் விளங்குகின்றது. " 14

பூகோளமயமான உற்பத்தியின் அபிவிருத்தி இந்த முரண்பாடுகளை ஒரு புதிய உக்கிரமான முகட்டிற்கு உயர்த்தி உள்ளது. முதலாளித்துவ அபிவிருத்தியின் உதயத்தில் நிலமானித்துவ எதேச்சாதிகாரம் செய்ததைப் போல் தேசிய அரசும் ஒரு அரசியல், இராணுவ பாத்திரத்தை தொடர்கிறது. ஆனால் அதனது முன்னோடிகளைப் போல இதனது பொருளாதார சிறப்பு பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருளாதார வீழ்ச்சியே அதனை தூக்கி வீசுவதற்கான நிலைமைகளை சிருஷ்டித்துக் கொண்டுள்ளது.

தேசிய அரசு பற்றிய தமது வழிபாட்டில் ஸ்பார்ட்டசிஸ்டுகள் அரசியல் அடிப்படையாகக் கொள்வது லெனினை அல்ல. ஆனால் மாறாக பெரிதும் கவனம் செலுத்துவது முன்னைய புள்ளி குட்டி முதலாளித்துவ தீவிரவாதி ஈகன் டூரிங். அவரும் ஸ்பார்ட்டசிஸ்டுகளைப் போல் பொருளியல் காரணிகளுக்கு மேலாக அரசியல் , இராணுவ பலத்தை உயர்த்திப் பிடித்தவர்.டூரிங்கின் குட்டி முதலாளித்துவ கருத்துக்களுக்கும் முதலாளி வர்க்கத்தின் இராணுவ இயக்கத்தின் மீதான அவரின் கவர்ச்சியும் எதுவிதத்திலும் குறையாத விதத்தில் ஸ்பார்ட்டசிஸ்டுகளுக்கும் பொருந்தும்: வீழ்ச்சி கண்டு வரும் "பொருளாதார நிலைமையை"இறுதி வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றும் பொருட்டு முதலாளி வர்க்கம் இப்போது அரசுக்கு மேன்முறையீடு செய்து கொண்டிருப்பின் அது அவர்கள் திரு.டூரிங் கொண்டுள்ள நப்பாசையையே கொண்டுள்ளதைக் காட்டுகின்றது. அந்த நப்பாசை ".அரசியல் நிலைமைகளே பொருளாதார நிலைமையின் தீர்க்கமான காரணி". இது சுட்டிக்காட்டுவது திரு .டூரிங் செய்வதைப் போல் "ஆரம்பமான" நேரடியான

அரசியல் பலத்தை பயன்படுத்துவதன் மூலம் இரண்டாம் தரமான விடயம் அல்லது பொருளாதார நிலைமையையும் அதன் கட்டாயமான அபிவிருத்தியையும் மீண்டும் புதிதாக ஒழுங்குபடுத்த தம்மால் முடியும் என முதலாளிகளும் நினைப்பது போன்றதாகும். ஆதலால் அதன் மூலம் நீராவி இயந்திரத்தினதும் நவீன கைத்தொழிலினதும் உலக வர்த்தகத்தினதும் இன்றைய வங்கி கடன் அபிவிருத்திகளதும் பொருளாதார விளைவுகளை குறுப்பு துவக்குகள் மூலமும் மோசரின் றைபிள்கள் மூலமும் துடைத்துக் கட்ட முடியும் "என்பதைப் போன்றதாகும்.

—தொடரும்.

www.padippakam.com

# சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் இராஜ்குமாருக்கு எதிரான அரச வேட்டையைத் தோற்கடி!

சோசலிச சமத்துவக் கட்சியின் உடப்பு பிரதேச அங்கத்தவரான தோழர்.செல்லையா இராஜ்குமார் கடந்த ஜூன் 22ம் திகதி சிலாபம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு 20மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டு இருந்ததை சோ.ச.க.வன்மையாகக் கண்டனம் செய்கின்றது. இராஜ்குமார் சிலாபத்தில் உள்ள உறவினர் பாஸ்கரன் வீட்டில் இருக்கையில் இரகசியப் பொலிசார் எனக் கூறிக்கொண்டு அங்கு சிலாபம் பொலிசார் பாய்ந்து விழுந்தனர் . விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான 20 மின்விசை படகு இயந்திரங்கள் ஒழித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் வீட்டை சோதனையிட வேண்டும் எனவும் கூறியுள்ளனர். அவர்களின் "சோதனை"யில் எதுவும் கிடைக்காத நிலையில் சிறையில் இருந்து விடுதலையாகி வந்த யாரும் அங்கு இருக்கின்றார்களா? என விசாரித்தனர். இராஜ்குமார் வவுனியாவுக்கு பயணம் செய்கையில் மதவாச்சியில் கைது செய்யப்பட்டு இனவாத அரசின் பொய்க் குற்றச்சாட்டுக்களின் பேரில் சுமார் ஒரு வருடகாலம் பொலிஸ் தடுப்புக் காவலிலும் பண்டாரவளை "புனர்வாழ்வு" முகாமிலும் தள்ளப்பட்டு இருந்தவர். சோசலிச சமத்துவக் கட்சி அனைத்துலக ரீதியில் நடாத்திய பிரச்சாரத்தின் தாக்கம் காரணமாக விடுதலை செய்யப்பட்டவர். இராஜ்குமார் இந்த விபரங்களையும் மற்றும் தமது அரசியல் உறவுகளையும் எடுத்துக் கூறியதோடு தமக்கு எதிரான குற்றச்சாட்டு என்ன? எனப் பொலிசாரிடம் கேட்டார். பொலிசார் இராஜ்குமாருக்கு எதிரான அரசியல் வேட்டையை நியாயப்படுத்தும் பொருட்டு பொலிசுக்கு "பெட்டிசம்" கிடைத்துள்ளதாகவும் அதை விசாரிக்கவே தாம் வந்ததாகத் தெரிவித்தனர்.இந்நிலையில் சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் விஜே டயஸ் பொலிஸ் நிலையத்துடன் மேற்கொண்ட தலையீட்டில்



செல்லையா இராஜ்குமார் சோ.ச.க.சிலாபத்தில் நடாத்திய தோழர்.கிறேஷன் கீகியனகேயின் 9வது ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகின்றார்.

இராஜ்குமார் சோ.ச.க.கொள்கைப் பிடிப்பான அங்கத்தவர் என்றும் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் வேண்டியதைத் தொடர்ந்து பொலிசார் அவரை 20 மணித்தியாலங்களுக்குள் சரீரப் பிணையில் விடுதலை செய்யத் தள்ளப்பட்டனர். இந்த பொலிஸ் கைது, தடுப்பு வைப்புச் சம்பவத்துக்கு ஒரு சில மாதங்களிற்கு முன்னதாக இராஜ்குமார் உடப்பு மீனவ முதலாளிகளினால் பொலிசாரின் ஆதரவோடு தாக்கப்பட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்கு எதிராக முறைப்பாடு செய்யச் சென்ற இராஜ்குமாரினதும் சோ.ச.க.அமைப்பாளர் தயாரத்தினவினதும் முறைப்பாடுகளை பதிவு செய்ய பொலிசார் மறுத்தனர்.

இத்தடவை பொய்க் குற்றச்சாட்டுக்களை திணிக்க முடியாது போனதும் இந்த பொலிஸ் சுற்றிவளைப்புக்கள் மூலம் இராஜ்குமாரை பொலிசாரின் சேவையில் அமர்த்திக் கொள்ளும் வாய்ப்புக்கள் ஏதும் உண்டா எனவும் பார்த்துள்ளனர்.

சோ.ச.க.வினதும் அனைத்துலகக் குழுவினதும் போராட்டம் காரணமாக இராஜ்குமாருக்கு எதிரான உயிராபத்தும் , சித்திரவதைகளும் , நீண்டகால சிறையும் முன்னைய கட்டத்தில் தோற்கடிக்கப்பட்ட போதிலும் இன்று முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தினது அரசியல், பொருளாதார நெருக்கடிகள் உக்கிரமாகி இனவாத யுத்தம் தொடர்ந்து நீடித்து , புதிதாக இராணுவ தணிக்கைகள் கொணரப்பட்டுள்ள நிலையில் அரசின் இந்த வேட்டைகள் ஆரம்பமாகி உள்ளன. தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் இனவாத யுத்தத்தின் மக்கள் படுகொலையாளர்களை மூடி மறைக்க மட்டும் அல்லாது நாடு பூராவும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இடம்பெறும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மூடி மறைக்கவும் இராணுவ பொலிஸ் அடக்குமுறை ஆட்சியை அபிவிருத்தி செய்வது புதிய கட்டத்துக்கு வந்துள்ளது. எனவேதான் அரசாங்கம் முன்னர் ஒரு போதும் இருந்திராத பாணியிலான இராணுவத் தணிக்கையை அமுல் செய்துள்ளது என சோ.ச.க. சுட்டிக் காட்டியுள்ளது. இனவாத யுத்தத்தைப் பற்றியோ அல்லது ஏனைய இராணுவ நடவடிக்கைகளைப் பற்றியோ அல்லது அதை நடாத்தும் முப்படைகளின் தளபதிகளினதோ அல்லது பொலிஸ் மா அதிபரினதோ யுத்த நடவடிக்கைகள் பற்றியோ மட்டும் அல்ல அவர்களின் எந்த ஒரு நடவடிக்கை பற்றியும் எதையும் எழுதுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டளைகள் மூலம் அரச படைகளும் பொலிசாரும் நாடுபூராவும் சித்திரவதைகளையும் கொலைகளையும் நடாத்த அரசாங்கம் அதிகாரம் வழங்கியுள்ளது. இத்தகைய ஒரு பின்னணியிலேயே செல்லையா இராஜ்குமார் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதை சிந்தனை ஆற்றல் படைத்த எந்த ஒரு தொழிலாளியும் ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் புரிந்து கொண்டாக வேண்டும். ஆளும் வர்க்கத்தின் இந்த எதிர்ப்புரட்சி அவசியங்களும் அவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் குழப்பங்களும் பூகோளமயமான உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியினுள்ளேயே தோன்றியுள்ளது.கடந்த ஏப்பிரல் மாதத்தில் அமெரிக்க கிளின்டன் அரசாங்கத்தின் சிறப்பு பிரதிநிதியான ஐ.நா.சபையின் அமெரிக்கத் தூதுவர் பில் றிச்சார்ட்சனும் இராஜாங்கத் திணைக்களத்தின் கார்ள் இன்டர்பேர்த்தும் இலங்கை வந்ததும் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் யுத்தத்துக்கும் அரசியல் பொதிக்கும் அங்கீகாரம் வழங்கியதும் தீவின் தமிழ் சிங்கள முதலாளித்துவத்தின் சகல தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு சமரசத்தின் மூலம் ஒரு "உறுதியான ஆட்சியை"உருவாக்கும்படி கோரியதும் தெரிந்ததே.

இவை வடக்கு கிழக்கு உட்பட்ட தீவின் முழுப்பிராந்தியங்களையும் இராணுவம் சுரண்டும் அவசியம் மட்டும் அல்லாது அனைத்துலக மூலதனத்துக்கு சந்தைகளைத் திறக்கும் தென்ஆசியாவில் சிறப்பாக இந்தியத் துணைக்கண்ட சந்தைக்குள் ஒரு மையமாக இலங்கையின் முக்கியத்துவத்தை ஏகாதிபத்தியவாதிகள் நோக்குகின்றனர். .ஏகாதிபத்தியவாதிகள் கடந்த காலத்தில் பீ.எல்.ஓ. இஸ்ரேலையும் சமீபத்தில் ஐ.ஆர்.ஏ பிரித்தானிய அரசாங்கத்தையும் மாட்டிவைத்து உருவாக்கிய பாணியிலான சமரசத்தை இலங்கையினுள்ளும் திணிக்க முயற்சிக்கின்றார்கள் .இவற்றின் பின்னணியில் ஒருவர் மற்றவரது சந்தைக்குள் ஊடுருவுவது எப்படி எனக் கணக்குப் போடும் ஏகாதிபத்திய இலாப வெறி இருந்து கொண்டுள்ளது.

## தீர்வு பொதி

இந்நிலையில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மோசடி "அரசியல் தீர்வு பொதிக்கு" எதிராக இராணுவத் தளபதிகள் வெளிவெளியாக பேசிக் கொண்டுள்ளனர். இந்நிலையில் விடுதலைப் புலிகளதும் ஏனைய முதலாளித்துவத் தமிழ் கட்சிகளதும் வேலைத்திட்டம் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் தலையீட்டுடன் "தீர்வைத்" திணிப்பதாக உள்ளது. இதனை மூன்றாம் தரப்பினரின் தலையீட்டுடன் செய்யும் தீர்வு என அவர்கள் கூறிக் கொள்கின்றனர்.ஒன்றில் தனியான அரசுக்கு அல்லது சுரண்டலுக்கு மேலதிகமான வாய்ப்புக்கள் நிறைந்த தீர்வைக் கொணர விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றனர்.தமிழ்தேசிய இனத்தின் விடுதலையைப் பற்றி இந்த அமைப்புக்கள் இடைக்கிடையே நடாத்தும் பேச்சுக்கள் சர்வதேச மூலதனத்தின் அதிகாரத்தை நிறுவும் பிற்போக்குத் திட்டத்தின் ஒரு பாகமாகும். பொதுஜன முன்னணி அரசாங்கம் உக்கிரமாக்கியுள்ள யுத்தம் வடக்கிலும் தெற்கிலும் இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்துக்கான பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டும் ஒரு திட்டம்.ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் ஓராண்டு நீடிப்பும் புதிய இராணுவத் தணிக்கையும் இதன் புதிய அபிவிருத்திகள் எனச் சுட்டிக்காட்டும் நாம் இது தொடர்பாக சமசமாஜ, கம்யூனிச, இ.தொ.கா., நவசமசமாஜ தலைவர்கள் வாயை மூடிக் கொண்டுள்ளதையும் கவனத்துக்கு கொணர்கின்றோம். இந்த வகையில் இந்த இராணுவ பொலிஸ் சர்வாதிகார தயாரிப்புக்களை தோற்கடிக்க தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தலைமையை வழங்கும் ஒரே அமைப்பு சோசலிச சமத்துவக் கட்சி என்பதை இங்கு வலியுறுத்துகின்றது. அரச இயந்திரத்தின் கவனம் தோழர்.இராஜ்குமாருக்கு எதிராக திரும்பியுள்ளது தற்செயலானது அல்ல என்பதை நாம் இங்கு மீண்டும் சுட்டிக் காட்டுவதோடு இந்த ஆத்திரமூட்டல்களைத் தோற்கடிக்க சோ.ச.க. முன்னெடுக்கும் போராட்டங்களில் பங்கு கொள்ளுமாறு சகலரையும் வேண்டுகின்றோம்.




செல்லையா இராஜ்குமாரை இனவாத அரசின் பிடியில் இருந்து விடுதலை செய்ய சோ.ச.க.அனைத்துலக ரீதியில் முன்னெடுத்த போராட்டத்தை விளக்கும் நூல்.

படிப்பகம்

# சமசமாஜக் கட்சி இராணுவத் தணிக்கையை நியாயப்படுத்துகின்றது

லங்கா சமசமாஜக் கட்சி பொதுஜன முன்னணி அரசாங்கம் சமீபத்தில் கொணர்ந்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை பத்திரிகைகளில் வெளியிடுவதை தடை செய்யும் புதிய இராணுவ செய்தித் தணிக்கை முறைக்கு அரசாங்கத்தினுள் இருந்து கை உயர்த்தியுள்ளதோடு அதை நியாயப்படுத்தும் பிரச்சாரங்களிலும் ஈடுபட்டுள்ளது. அக்கட்சியின் பத்திரிகையான "சமசமாஜய"(ஜூன்) ஆசிரியத் தலையங்கம் இந்த தணிக்கைக்கு ஆதரவாக வக்காலத்து வாங்கியுள்ளது.

1988 89 யூ.என்.பி.ஆட்சி காலத்தில் இத்தகைய தணிக்கை முறை நடைமுறையில் இருந்ததாகவும் அது பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 1995லேயே நீக்கப்பட்டதாகவும் கூறும் இந்த ஆசிரியத் தலையங்கம், "யுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாக பொறுப்பற்ற விதத்தில் பத்திரிகைகள் முன்னெடுத்த பிரச்சாரம் காரணமாகவே" இத்தணிக்கையை அரசாங்கம் திணித்துள்ளதாக வாதிடுகின்றது.

அத்துடன் நின்றுவிடாத சமசமாஜக் கட்சித் தலைவர்கள் பிற்போக்கு ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தின் பேச்சாளர்களாக முன்னணியில் பாய்ந்து கொண்ட இராணுவக் கொலைவாளை உருவி மிரட்டவும் செய்கின்றார்கள். "தணிக்கையை நடாத்துவது இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எதிர்காலத்துக்கு இது செல்லுபடியான ஒரு முன்மாதிரி என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்." எனவும் எச்சரிக்கின்றார்கள்.



பற்றி வீரக்கோன்

பற்றி வீரக்கோன் முதலான சமசமாஜக் கட்சித் தலைவர்களுக்கு இன்று அம்பலமாகி இருப்பது சகல வகையறாக்களையும் சேர்ந்த பிற்போக்கு சக்திகளையும் அணிதிரட்டி இனவாத யுத்தத்தை வெற்றியீட்ட செய்வதேயாகும். அத்தோடு பத்திரிகையாளர்களும் பத்திரிகை முதலாளிகளும் ஆயுத வர்த்தகர்களும் தத்தமது சொந்த நலன்களின் பேரில் ஆளுக்காள் மோதிக்கொண்டால் இந்த யுத்தத்தை வெற்றி கொள்ள முடியாது போய்விடும் எனவும் இந்தச் சமசமாஜக் கட்சித் தலைவர்கள் முனகிக் கொள்கிறார்கள்.

இந்த விதத்தில் சமசமாஜக் கட்சி இராணுவ சர்வாதிகாரத் திசையில் ஆட்சியைக் கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை மூடி மறைப்பதோடு அதற்கு முண்டும் கொடுக்கின்றது. இராணுவத் தணிக்கையை காக்கும் பிரச்சாரம் அதன் ஒரு பாகமாகும்.

# முதலாளித்துவத்துக்கு....

11ம் பக்கம் தொடர்ச்சி

அலுவலகத்தில் இருந்து இப்போது தேடி எடுத்துள்ளதாக கூறப்படும் ஆயுதங்கள் தொடர்பாக கடந்த காலக் கதைகளை நினைவில் கொள்ளின் 1988 89 காலப்பகுதியிலும் நாம் ஏனைய சகல இடதுசாரி தொழிலாளர் வர்க்க அமைப்புக்களுக்கும் அரச பயங்கரவாதத்துக்கும் ஜே.வீ.பி. பாசிச தாக்குதல்களுக்கும் எதிராகத் தொழிலாளர் வர்க்க ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்ப வேண்டும் எனப் பிரேரித்தது உங்களுக்கு நினைவுக்கு வரும். தொழிலாளர் வர்க்கத்தின் பலத்தினை அடிப்படையாகக் கொள்ளாத வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள மீது நம்பிக்கை வைத்து தொழிற்பட்ட ஏனைய சகல இடதுசாரி அமைப்புக்களைப் போலவே உங்கள் கட்சியும் அந்தப் பிரேரணையை நடைமுறைக்கிட இணங்கவில்லை. நாம் இன்றும் நம்புவது அத்தகைய ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர், ஏழைகள், இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்து அவர்களை முதலாளித்துவ அரசில் இருந்து சுயாதீனமாக அணிதிரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்குமேயானால் உங்கள் கட்சிக்கு இன்று தொடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலை தவிர்க்கக் கூடியதாக மட்டுமல்ல. இலங்கையின் முழு அரசியல் சித்திரத்தையும் மாற்றி அமைக்கக் கூடிய அளவுக்கு பலம் வாய்ந்த நெருக்குவாரத்தினை அதன் மூலம் கட்டவிழ்த்துவிடவும் கூடியதாக இருந்திருக்கும் .

அந்த வரலாற்று படிப்பினையை மறந்து விடாமலும் உங்கள் அமைப்பின் தலைமைக்கு தொடுக்கப்பட்டுள்ள இன்றைய அச்சுறுத்தலில் ஒன்றிணைந்து அதில் இருந்து விடுபடவும் ஒரு வேலைத்திட்டத்தை தயாரிக்கவும் நவ சமசமாஜக் கட்சியுடன் ஒரு கலந்துரையாடலுக்கு சோசலிச சமத்துவக் கட்சியின் தயார் நிலையை இங்கு வெளிப்படுத்த நான் விரும்புகின்றேன்."

நாம் அன்று முன்வைத்த யோசனைகளுக்கும் ந.ச.ச.க. இணங்கவில்லை. அது சம்பந்தமான செய்திகளை விரிவாக விளக்கும் ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு நவசமசமாஜக் கட்சியின் சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான குற்றப் பத்திரம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதை நீங்கள் இன்றும் கம்கறு மாவத்த வெளியீட்டாளர்களிடம் இருந்து பெற்று வாசிக்க முடியும்.

புரட்சிக் கட்சி தனது மூலோபாயப் பணியை அதாவது முதலாளித்துவ வர்க்கத்துக்கும் சமரசக்காரர்களுக்கும் எதிராகப் போராடுவதை கைகழுவ விடாத அதே வேளையில் முக்கிய எதிரிக்கு எதிராக சந்தேகத்துக்கிடமான நண்பர்களுடன் என்றாலும் உபாய ரீதியான கூட்டுக்கு செல்வது புரட்சித் தலைமை கைகழுவிவிட முடியாத அவசியத்தை தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்கு அழுபவ ரீதியாக புகட்டுவதற்காகவாகும். இராஜ்குமாரை விடுதலை செய்யும் பிர்சசாரத்திலும் ந.ச.ச.க.தெரிவித்த ஆதரவை நன்றியுடன் ஏற்றுக் கொண்ட அதே வேளையில் ந.ச.ச.க. வேலைத்திட்டத்தின் வரையறைகள் காரணமாக தலைதூக்கும் வர்க்க சமரசம் பிற்போக்கானது என அம்பலப்படுத்துவதை நாம் கைவிட முடியாது மட்டும் அல்ல. அதை எமது அரசியல் பொறுப்பாகவும் கொண்டோம். இந்த உபாய நடவடிக்கையின் வெளித்தோற்றத்தில் தோன்றும் முரண்டுபாடுகளை அதை புரட்சிக் கட்சியின் மூலோபாய பணியுடன் ஒப்பிட்டு நோக்கும் இடத்தே தீர்த்துக் கொள்ள முடியும்.

நீங்கள் கேட்டுள்ள விளக்கம் இத்தகைய ஒரு குறுகிய கடிதத்தினுள் முடிந்தளவு முன்வைக்கப்பட்டுள்ளது என நான் நினைக்கின்றேன். இதை நாம் ஒரு பகிரங்க பதிலாக வழங்கியதற்குக் காரணம், நீங்கள் எழுப்பிய பிரச்சினைகளை தீர்ப்பது இன்னும் பலருக்கு உபயோகமாக இருக்கும் என நினைத்தேயாகும். சோசலிச சமத்துவக் கட்சியுடன் உங்கள் தொடர்புகளை தொடர்ந்தும் எதிர்பார்த்து இத்துடன் நிறுத்துகின்றேன்.

தோழமையுடன்,
விஜே டயஸ்,
சோ.ச.க.பொதுச் செயலாளர்.

# பகிடிவதை மசோதாவின் முதலடி சோ.ச.க. மாணவர் அமைப்புக்கு

சோசலிச சமத்துவக் கட்சியின் கொழும்பு பல்கலைக் கழக மாணவர் அமைப்பின் ஜனதா மாணவர் முன்னணி "பகிடி வதை மசோதாவும் பாடத்திட்ட அலகுமுறையைத் தோற்கடிக்கும் வழியும் "என்ற தலைப்பில் கடந்த மே 28ம் திகதி ஒழுங்கு செய்த கூட்டம் பல்கலைக் கழக நிர்வாகிகளினால் தடை செய்யப்பட்டது. நான்கு ஆண்டுகளாக கொழும்பு பல்கலைக் கழகத்தினுள் பகிரங்கக் கூட்டங்கள் நடாத்தி வந்துள்ள ஜனதா மாணவர் முன்னணி அந்தக் கூட்டங்களை நடாத்த பல்கலைக் கழகத்தின் பதிவு செய்யப்பட்ட மாணவர் சங்கங்களின் ஊடாக மண்டபம் பெறுவது வழக்கமாக இருந்து வந்தது. இம்முறையும் இந்தத் தலைப்பிலான கூட்டத்தை நடாத்தும் பொருட்டு அதில் கலந்து கொள்ளும் பேச்சாளர் பெயருடன் கூடிய விபரங்களைச் சமர்ப்பித்து, பல்கலைக்கழக மாணவர் ஆலோசகரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு இருந்தது. இங்ஙனம் அனுமதி பெற்ற படிவத்தை மாணவர் நிலையத்துக்கு பொறுப்பான அதிகாரியிடம் சமர்ப்பித்தபோது இந்தக் கூட்டத்தை தடைசெய்யும்படி உப-வேந்தர் உத்தரவிட்டிருப்பதாக அவர் ஜனதா மாணவர் முன்னணி அங்கத்தவர்களிடம் தெரிவித்தார்.



கொழும்பு பல்கலைக்கழக நிர்வாகத்தின் கெடுபிடிகளை எதிர்த்து சோ.ச.க.வும் அதன் மாணவர் அமைப்பும் பல்கலைக்கழக எதிரில் நடாத்திய மறியல் போராட்டம்

கூட்டத்தை தடைசெய்த நிர்வாகிகள் இந்த பகிடிவதை மசோதா இப்போது அமுலுக்கு வந்துள்ளதால் பல்கலைக்கழகத்தில் அரசியலில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யாத மாணவர் அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்கு முன்னர் போல் அனுமதி வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர். சிறப்பாக இந்தக் கூட்டத்திற்கு பயன்படுத்தப்படும் தலைப்பின் படி இதற்கு அனுமதி வழங்கினால் மசோதாவின் கீழ் தாமும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என கலைப் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

பகிடிவதை மசோதா எனப்படுவதன் கீழ் முதலாவது தாக்குதல் சோசலிச சமத்துவக் கட்சியின் மாணவர் அமைப்புக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருப்பது தற்செயலானது அல்ல. இலவசக் கல்வி உரிமையை ஒழித்துக் கட்டும் ஏகாதிபத்திய தாக்குதல்களுக்கு எதிராகப் போராட்டத்துக்குக் கிளம்பும் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் தமது உரிமையை வெற்றி கொள்வதற்கு அவசியமான புரட்சிகர முன்நோக்கையும் வேலைத் திட்டத்தையும் வழங்கும் ஒரே அமைப்பு சோசலிச சமத்துவக் கட்சியே. இந்தப் பகிடிவதை சட்டம் எனப்படுவதன் நிச இலக்கு, இலவசக் கல்வி உரிமையை காக்கும் போராட்டத்துக்கு தள்ளப்படும் மாணவர்கள் தொழிலாளர் வர்க்கத் தலைமையின் கீழ் அணிதிரள்வதை தடுப்பதே.

இந்த மசோதா ஜனநாயக உரிமைகளுக்கு விலங்கு மாட்டுவதையும் கல்வி நிறுவனங்களைச் சூழ முன்னர் ஒரு போதும் இருந்திராத அளவிலான அரச ஒடுக்குமுறையை திணிப்பதையும் இலக்காகக் கொண்டு திணிக்கப்படுகின்றது என இது பாராளுமன்றத்தில் அமைச்சரால் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே நாம் குறிப்பிட்டிருந்தோம். எமது எச்சரிக்கை இன்று ருசுவாகியுள்ளது.

www.padippakam.com

# கிறிஸ்லர்-டெயிம்லர் மோட்டார் கார் கம்பனி இணைப்பின் அர்த்தம் என்ன?

கிறிஸ்லர் கோர்ப்பரேசன் டெயிலர் பென்ஸ் நிறுவனத்தினால் 38 மில்லியன் அமெரிக்க டாலர் பங்கு கைமாற்று மூலம் வாங்கப்பட்டுள்ளமை உலகப் பொருளாதாரத்தின் பூகோளமயமாக்கத்துக்கு ஒரு பலம் வாய்ந்த எடுத்துக்காட்டாக உள்ளது. ஜெர்மனியினதும் அவ்வாறே ஐரோப்பாவினதும் ஒரு பிரமாண்டமான கைத்தொழில் நிறுவனம் ஒரு பெரும் அமெரிக்கன் கூட்டுத்தாபனத்தை தனதாக்கிக் கொண்டுள்ளது. இந்தக் கைமாற்று மூலம் அது 410000 தொழிலாளர் படையையும் 130 பில்லியன் டாலர் வருடாந்த வெளியீட்டையும் கொண்ட ஒரு ட்ரான்ஸ்நஷனல் இராட்சதன் ஆகியுள்ளது.

வரலாற்றில் இடம்பெற்ற ஒரு பிரமாணடமான கைத்தொழில் நிறுவனங்களின் இணைப்பு இதுவாகும். அத்தோடு ஒரு வெளிநாட்டினால் முன்னொருபோதும் இல்லாத வகையில் ஒரு பெரும் அமெரிக்கக் கம்பனி கையேற்கப்பட்டது இதுவே முதற்தடவை. இங்ஙனம் இணைக்கப்பட்ட கம்பனி டெயிம்லர் கிறிஸ்லர் என அழைக்கப்படும். உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையை கொண்டு பார்த்தால் இது ஜெனரால் மோட்டார்ஸ், போட், டொயோட்டோ, வொக்ஸ்வோகனுக்கு அடுத்ததாக ஐந்தாதவது இடத்தில் நின்று கொண்டுள்ளது. வாகனங்களின் பெறுமதியின் வரிசையில் டெயிம்லர்-கிறிஸ்லர் மூன்றாவது இடத்தில் உள்ளது. டெயிம்லர் -கிறிஸ்லர் ஒரு நாடாக இருப்பின் அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலகில் 37 வது இடத்தில் ஆஸ்திரியாவுக்கு அடுத்த இடத்தில் நின்று கொண்டுள்ளது. ஆனால் ஐரோப்பிய யூனியனின் ஏனைய அங்கத்தவர்களான கிறீஸ், போர்ததுக்கல், நோர்வே, டென்மார்க், பின்லாந்துக்கு முன்னணியில் நின்று கொண்டுள்ளது.

சமீப காலத்தில் மோட்டார் வாகன கம்பனிகளின் இணைப்புக்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் அவை சிறிய அல்லது வீழ்ச்சி கண்டுவரும் கம்பனிகள் பெரும் சக்திவாய்ந்த போட்டியாளர்களினால் விழுங்கப்படுவதாக விளங்கியது. ஆனால் டெயிம்லர் கிறிஸ்லர் கொடுக்கல் வாங்கல்கள் இரண்டு பெரும் இலாபம் படைத்த கம்பனிகளை உள்ளடக்கியுள்ளது. 1997ல் இரண்டினதும் மொத்த இலாபம் 5.7பில்லியன் டாலர்கள். டெயிம்லர் பென்ஸ் 1990களின் ஆரம்பத்தில் அடைந்த நஷ்டங்களில் இருந்து அதி உயர்ந்த இலாபம் ஈட்டும் வகையில் மீள நிர்மாணிக்கப்பட்டது. அதே சமயம் கிறிஸ்லர் எந்த ஒரு வாகன உற்பத்தியாளரைக் காட்டிலும் ஒரு வாகனத்துக்கு கூடிய இலாபம் சம்பாதிக்கின்றது.

இந்த இணைப்புக்கான உந்து சக்தி என்ன? உலகின் பெரும் சந்தைகளில் சிறப்பாக உலக முதலாளித்துவத்தின் முக்கிய மையங்களான வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியாவில் போட்டியிடக் கூடிய முன்னொருபோதும் இல்லாத அளவிலான பூகோளரீதியிலான நிறுவனத்தை உருவாக்குவதேயாகும். இந்த இணைப்புக்கு முன்னதாக கிறிஸ்லரும் டெயிம்லர் பென்சும் முக்கியமாக பிராந்திய உற்பத்தியாளர்களாகவே விளங்கினர். கிறிஸ்லர் வட அமெரிக்காவின் சந்தையில் மூன்றாவது பெரும் பங்கை கொண்டிருந்தது. டெயிம்பலர் பென்ஸ் ஐரோப்பாவில் ஆடம்பர சந்தையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்து.

1980பதுகளிலும் 1990ன் ஆரம்ப காலங்களிலும் கிறிஸ்லர் தனது ஐரோப்பிய, லத்தீன் அமெரிக்க உற்பத்தி நடவடிக்கைகளை நிதி நெருககடி காரணமாக விற்றுத்தள்ளத் தள்ளப்பட்டது. கடந்த ஏப்பிரலில் இது வடஅமெரிக்காவுக்கு வெளியே 17713 வாகனங்களை மட்டுமே விற்பனை செய்தது. அதன் உள்நாட்டுச் சந்தையில் 250000 வாகனங்களை விற்பனை செய்தது. டெயிம்லர் பென்ஸ் ஐரோப்பாவுக்கு வெளியே தனது முதலாவது பக்டரியை கடந்த ஆகஸ்ட் ஆரம்பித்தது. அது அலாபாமாவில் மெர்சீட்ஸ் பென்சின் விளையாட்டுக்கு பயன்படும் வாகனங்களை உற்பத்தி செய்தது.

இந்த இரண்டுகளும் ஆசியாவில் வசதிகள் கிடையாது. லண்டனில் இவர்கள் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் டெயிம்லர் பென்சின் தலைவர் ஜூர்கள் ஸ்கெரம்பும் கிறிஸ்லர் தலைவர் றொபேட் ஈடனும் தமது அடுத்த நடவடிக்கை ஒரு ஜப்பானிய கம்பனியை கையேற்பதாக இருக்கும் என தெரிவித்தனர். அத் பெருமளவுக்கு கிறிஸ்லரின் முன்னைய பங்காளியாக விளங்கிய மிட்சுபிசி கம்பனியாக இருக்கும் என தெரிவித்தனர். இது இணைக்கப்பட்ட கம்பனியின் பூகோள ரீதியான பிரசன்னாக விளங்கும்.

இந்த கம்பனிகளின் இணைப்பு இடம்பெற்ற சமயத்தில் நிதி விமர்சகர்களும் மோட்டார் வாகன கைத்தொழில் ஆய்வாளர்களும் எஞ்சியுள்ள மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் ஜெனரால் மோட்டார்ஸ், போட், றொயோட்டோ, ஹொண்டா, புதிய டெயிம்லர் கிறிஸ்லர் கம்பனிகளுடன் போட்டியிடுவதற்கு உலகளாவிப ரீதியிலான நிறுவனங்களாக இணைந்து கொள்ளத் தள்ளப்படுவர் எனத் தெரிவித்தனர். அவர்கள் தேசிய ரீதியில் வரையறுக்கப்பட்ட உற்பத்தியாளர்களாகவும் உள் நாட்டு சந்தையின் விற்பனையாளர்களாகவும் இருக்கு முடியாது. ஒரு ஆய்வாளர் லண்டன் டைம்சுக்கு தெரிவித்தது போல் "நாட்டுக் கொடிகள் இறக்கப்பட்டு, இலாபகரமான கொடி ஏற்றப்பட்டுள்ளது" என்றுள்ளார்.


## தொழில்கள் மீதான தாக்குதல்

இந்த இரண்டு நிறுவனங்களதும் இணைப்பு எந்த ஒரு பக்டரி மூடுவிழாவாகவும் இருக்காது என ஸ்கிரெம்பும ஈடனும் தெரிவித்தனர். ஏனெனில் இந்த இரு கம்பனிகளும் அநேக சந்தைகளில் நேரடியைக போட்டியிடவில்லை. உடனடியாக பக்டரி மூடுவிழாக்கள் இல்லாது போனாலும் இந்த இணைப்பு தொழில் நுட்பத் தொழிலாளர்களிடையேயும் வைட்கொலர் தொழிலாளர்களிடையேயும் பரந்த அளவிலான வேலைநீக்கங்களை உண்டுபண்ணும். டெயிம்லர் கிறிஸ்லர் நிர்வாக, பொறியியல் நடவடிக்கைகளை மத்தியமயமாக்க முயல்வதால் இது ஏற்பட இடமுண்டு.

1995ல் இருந்து டெயிம்லர் பென்ஸ் 41000 வேலைகளை வெட்டியுள்ளது. கிறிஸ்லர் கம்பனிகள் மிகவும் கவர்ச்சிகரரமான பண்பு தொழில் வெட்டுக்களிலும் உற்பத்தி செலவு வெட்டுக்களிலும் "நிபுணர்களைப்" பெற்றுள்ளதே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1980பதுகளில் இருந்து கிறிஸ்லர் தொழிலாளர் எண்ணிக்கையை 160000ல் இருந்து 79000 ஆகக் குறைத்துள்ளது.

இந்த இணைப்புக்களின் குறுகிய கால தாக்கங்கள் என்னவாக இருப்பினும் இக்கூட்டின் முக்கிய இலக்கு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதும் பரந்தளவிலான பொருளாதாரங்களை ஈட்டிக் கொள்வதுமே. இது தவிர்க்க முடியாத வகையில் தொழில் வெட்டுக்களை வேண்டி நிற்கின்றது. கொம்பக் கம்பியூட்டர் கம்பனி இக்கம்பனிகளின் இணைப்பு இடம்பெற்ற நாளே தாம் தமது டிஜிடல் ஈக்குவிப்மென்ட் கூட்டுத்தாபனத்தில் 15000 வேலைகளை வெட்டப்போவதாக அறிவித்தது.

அமெரிக்கன் பத்திரிகையான டெட்றொயிட் நியூஸ் இந்த மோட்டார் வாகன கம்பனி இணைப்பு "உலகளாவிய ரீதியில் குறைந்த உற்பத்தியில் ஈடுபடும் பக்டரிகளின் 25 பில்லியன்களை அழித்து எழுதுவதாக இருக்கும்" எனக் குறிப்பிட்டது. கிறிஸ்லர் தலைவர் றொபேட் ஈடன் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் நாம் உடனடி இலாப கணிப்புக்களால் வழிநடாத்தப்படவில்லை. அடுத்த தசாப்த காலத்தில் கம்பனியின் சுபீட்சங்களையிட்டே அக்கறை கொண்டுள்ளோம்" என்றுள்ளார்.



அமெரிக்க போக்குவரத்து ஊழியர் போராட்டம்

ஈடன் உலக மோட்டார் கைத்தொழிலின் வளர்சசி கண்டுவரும் கூடிய உற்பத்தி இயலளபு பற்றியே கவலை கொண்டுள்ளார். 2002 ஆண்டுகளில் சந்தை வேண்டும் மோட்டார் வாகன அசெம்பிளி பக்டரிகளைக் காட்டிலும் 80 கூடுதலான பக்டரிகள் இருக்கும். இந்தக் கூடிய உற்பத்தி இயலளபு ஆறு கிறிஸ்லர் கூட்டுத்தாபனங்களுக்கு சமமானது என்றுள்ளார்.

இந்த இராட்சத உபரி உற்பத்தி இயலளபு முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டில் இருந்து மட்டுமே "அபரிமிதமானதாக" இருக்கும். ஏனெனில் இது ஒரு இலாபத்தில் விற்பனை செய்யக் கூடிய கார்களைக் காட்டிலும் பெரிதும் அதிகமான கார்கள் உற்பத்தி செய்யப்படுவதை இது குறிக்கும். இலாப முறையின் வடிவினுள் இந்த உற்பத்தி இயலளபை உலகம் பூராவும் உள்ள மக்களின் மலிவானதும் வசதியானதுமான போக்குவரத்துக்காக பயன்படுத்திக் கொள்ள முடியாது.

கடந்த ஆண்டில் மட்டும் 750 மோட்டார் கைத்தொழில் இணைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. 28 பில்லியன் டாலர்கள் பெறுமதி கையேற்கப்பட்டுள்ளது. 38 பில்லியன் கிறிஸ்லர் டெயிம்லர் இணைப்பு, 1998ல் அத்தகைய கூட்டுக்களின் முன்னொருபோதும் இல்லாத அளவிலான தொகையை உறுதி செய்யும்.

## பூகோளமயமாக்கமும் தொழிற்சங்கங்களும்

டெயிம்லர் பென்ஸ் கம்பனி கிறிஸ்லரைக் கையேற்றுக் கொண்டமையானது ஜேர்மனியில் இருந்து மூலதனம் பிரமாண்டமான அளவில் வெளியே பெருக்கெடுப்பதன் ஒரு பாகமர்கும். இராட்சத கம்பனிகளான ஹேறாஸ்ட், பேட்ரல்ஸ்மான், சீமன்ஸ், வொக்ஸ்வேகன் கம்பனிகள் வெளிநாட்டுக் கம்பனிகளை வாங்குகின்றன. அல்லது ஜேர்மனிக்கு வெளியேயான புதிய பக்டரிகளிலும் கருவிகளிலும் முதலீடு செய்கின்றன. கடந்த ஆண்டில் மட்டும் வெளிநாட்டுக் கம்பனிகள் ஜேர்மனியில் முதலீடு செய்ததைக் காட்டிலும் ஜேர்மன கம்பனிகள் 10 மடங்கு அதிகமான தொகையை வெளிநாட்டில் முதலீடு செய்துள்ளன.

இந்த முதலீடுகளின் இலக்கு இக்கூட்டுத்தாபனங்கள் ஜேர்மனியினுள் உழைப்புச் சக்திக்கு செலுத்தும் தொகையைக் காட்டிலும் குறைந்த கூலியை வழங்குவதன் மூலம் உயர்ந்த இலாபத்தை திரட்டுவதேயாகும். டெயிம்லர் பென்ஸ் செக்கோசலவாக்கிய பெரும் உற்பத்தியாளரான ஸ்கோடாவை கொள்வனவு செய்துள்ளது. முன்னைய சோவியத் கூட்டு நாடுகள் பூராவும் பக்டரிகளை கொள்வனவு செய்துள்ளது அல்லது புதிதாக அமைத்துக் கொண்டுள்ளது. குறைந்த கூலியில் உழைப்பு தேடும் அதன் முயற்சியில் ஒரு அங்கமாகவே அலாபாமாவில் இறங்கியுள்ளது. இது இக்கம்பனி ஸ்ரட்கார்டிலும் ஏனைய ஜேர்மன் நகரங்களிலும் கம்பனி வழங்கும் மணிக்கு 29 டாலர்களின் அரைப் பங்காகும்.

கிறிஸ்லர் கையேற்கப்பட்டமையை தொடர்ந்து இணைக்கப்பட்ட கம்பனியானது தனது உற்பத்தியை ஜேர்மனியில் இருந்து மேலும் வடஅமெரிக்காவுக்கு நகர்த்துவதாக இருக்கும். இது ஜேர்மன் தொழிலாளர்களின் வேலையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தும் அதே சமயம், இது குறுகிய காலத்துக்கு அமெரிக்க, கனடிய தொழில்களின் எண்ணிக்கையில் ஒரு தற்காலிக அதிகரிப்பை உருவாக்கும்.

கிறிஸ்லர் டெயிம்லர் இணைப்பு பூகோள ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட மூலதனத்தின் தாக்குதல்களை எதிர்த்துப் போராடும் ஒரு அனைத்துலக மூலோபாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் தொழிலாளர் வர்க்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. இது தொழிலாளர் வர்க்கத்தை தேசிய எல்லைகளுக்குள்ளான அல்லது வெறும் தொழிற் சங்க ரீதியிலான போராட்டங்களுக்குள் மட்டும் கட்டுப்படுத்தி வைக்க துடிக்கும் பழைய தேசிய ரீதியிலான தொழிலாளர் அமைப்புக்களினதும் மத்தியதர வர்க்க மாஜி தீவிரவாதிகளதும் பின்தங்கிய நிலைமையையும் கேவலத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

முதலாளிகள் தமது நடவடிக்கைகளை ஒரு உலகளாவிய ரீதியில் ஒழுங்கு செய்யகின்றார்கள். தொழிலாளர் வர்க்கம் இதற்கு ஏற்ப செயற்பட வேண்டும். தொழிலாளர் வர்க்கம் இலாப முறைக்கு எதிராக அதனது சக்திகளை அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்தி ஒரு புரட்சிகர அரசியல் போராட்டத்தை நடாத்த வேண்டும். அதனது கட்டுப்பாடுகளை உற்பத்திச் சாதனங்கள் மீது ஸ்தாபிதம் செய்ய வேண்டும். பூகோளரீதியான பொருளாதாரத்தின் பரந்த வளங்கள் உலக சனத்தொகையின் சட, கலாச்சார மட்டத்தை உயர்த்த கைகொடுக்கும். ஒரு பொதுப் போராட்டத்தில் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தை ஒன்றிணைக்கப் போராடும் ஒரே அரசியல் இயக்கம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவே.

படிப்பகம்

www.padippakam.com


## மத்திய வங்கி ஊழியர் சங்கம்:

# புதிய முன்னோக்கு, வேலைத்திட்டத்துக்கான போராட்டம் தொடர்கிறது

கடந்த ஜூன் 30ம் திகதி நடைபெற்ற மத்திய வங்கி ஊழியர் சங்க தேர்தலில் சங்கத்தின் முன்னைய தலைமைப் பீடத்தைச் சேர்ந்த அந்திராதி தலைமையிலான தொழிற்சங்கவாதிகள தலைமைப் பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார்கள். சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில்தலைவர், செயலாளர் பதவிகளுக்கு போட்டியிட்ட கிரிபண்டா, ஜெராணி ரத்னாயக்க முறையே 175, 190 வாக்குக்களைப் பெற்றுள்ளனர். தொழிற்சங்கவாதிகள் குழு 600க்கும் அதிகமான வாக்குக்களைப் பெற்று பதவியில் அமர்ந்து கொண்ட போதிலும் எமது தேர்தல் துண்டுப் பிரசுரத்தில் நாம் எழுப்பிய தொழிலாளர் வர்க்க அரசியல் முன்னோக்கு, வேலைத்திட்டம் பற்றிய பிரச்சினை தீர்ந்துவிடவிலலை. மேலும் உக்கிரம் கண்டுள்ளது. அதன் முக்கியத்துவம் குறித்து அந்த தமிழ் துண்டுப் பிரசுரத்தின் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகின்றோம்.(ஆ-ர்)

கடந்த ஆண்டு மத்திய வங்கி ஊழியர் சங்கம் செயலற்று இருந்தது என்பது சகலரும் அறிந்ததே. சங்கத்திற்கு எதிரான அரச வேட்டை இடம்பெற்றுவந்த சூழ்நிலையிலேயே இது இடம்பெற்றது. அரச வேட்டைக்கும் அதனூடாக வெளிப்பட்ட தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான பொதுஜன முன்னணி அரசாங்கத் தாக்குதலுக்கும் எதிராக தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்து அரசியல் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய அவசியம் மத்திய வங்கி ஊழியர்களுக்கு இருந்து வந்தது. அதற்கு மாறாக சங்கத் தலைமையில் இருந்து வந்த அந்திராதி குழு மத்திய வங்கி நிர்வாகம் மனம்போன போக்கில் ஊழியர் மீது தாக்குதல் நடாத்த சந்தர்ப்பம் வழங்கி ஸ்தம்பித்துக் கிடந்தது.

சங்கம் வேட்டைக்கு உள்ளாகி இருந்த ஒரு நிலையில் சங்கத்தின் மாஜி.தலைமையை அதிகாரத்துவத்தில் அமர்த்துவதன் மூலம் வேட்டையில் இருந்து விடுபட முடியும் என எண்ணிய சங்க அங்கத்தவர்கள் பலர் கடந்த தேர்தலில் ரீ .அந்திராதியை தலைவராக்க வாக்களித்தனர். எனினும் அந்திராதி குழு செய்தது என்ன? தமது நாற்றமெடுப்பினால் மத்திய வங்கி ஊழியர்களை அரசியல் ரீதியில் ஸ்தம்பிக்க வைத்தனர். இந்தக் குழுவினருக்கு எதிரான அங்கத்தவர்களதும் அதிருப்தியும் நம்பிக்கையீனமும் வெளிப்பட்டு வரும் நிலையில் 60 சதவீத சம்பள அதிகரிப்பு கோரிக்கையை வீசிவிட்டு, நிர்வாகத்தின் தீர்வை திணிப்பது சம்பள உயர்வு பிரச்சாரத்தில் பங்கு கொண்டவர்களுக்கு தண்டனை வழங்குதல் என்பனவும் அரச வேட்டையில் சேர்ந்து கொண்டது.

ஊழியர் பிரச்சினையையிட்டு மத்திய வங்கி நிர்வாகிகளுக்கு இடைக்கிடையே முறைப்பாட்டு கடிதங்களை எழுதும் அதே வேளையில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்குவதையிட்டு முறைப்பட்டுக்கொண்டு பதவி உயர்வு பெறுவதன் மூலம் அந்திராதி கும்பலின் ஒரு பகுதியினர் வயிற்றை நிரப்பும் வேலையில் ஈடுபட்டிருந்தது. இது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல.

ஆனால் சங்கத்தின் தலைவர்களின் வங்குரோத்து, காட்டிக் கொடுப்பு சங்கத்தின் ஸ்தம்பிதம் பற்றி விமர்சிப்பதுடன் நிறுத்திக் கொள்ள முடியாது. தனது நாற்றமெடுப்பை மூடி மறைக்கும் பொருட்டு அந்திராதி கும்பல் வாயடிப்புக்களில் ஈடுபட்டுள்ளது. இவை கூட்டத்தில் பெருக்கெடுக்கும். இது பயங்கரமானது. நாம் மத்திய வங்கி ஊழியர்கள் எதிரில் தோன்றியுள்ள சவாலுக்கு -இது முழுத் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரிலும் தோன்றியுள்ள சவாலாகும்- முகம் கொடுக்க உரிய அரசியல் தயாரிப்பு அவசியம் என வேண்டுகின்றோம்.

மத்திய வங்கி ஊழியர்களுக்கு எதிராக அரசின் தாக்குதல் பொதுஜன முன்னணி அரசாங்கம் தூண்டிவிட்டுள்ள கொடிய அரசியல் தாக்குதலின் ஒரு பாகமாகும். இந்தத் தாக்குதல் அனைத்து நாடுகளதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளி இலாப மூட்டையை நிரப்பிக் கொள்ள அனைத்துலக மூலதனம் நடாத்தும் வேலைத்திட்டத்தினாலும் அதனை இலங்கையினுள் நடைமுறைக்கிடும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் நெருக்கடியாலும் தோன்றியுள்ளது.

அனைத்துலக மூலதனம் அனைத்து நாடுகளிலும் தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரம், நலன்புரி சேவைகளை வெட்டித்தள்ளி இலாப அமைப்பைக் கட்டிக் காக்க குறைந்த மட்டத்திலான உற்பத்திச் செலவை வேண்டி நிற்கின்றது. கிழக்கு ஆசியாவின் நெருக்கடி மூலம் வெளிப்பாடாகி உள்ள உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியினுள் பொதுமக்களின் உரிமைகளை நசுக்கித் தள்ள முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் வெறி தினமும் அதிகரித்து வருகின்றது. உலகச் சந்தைக்காக மோதிக்கொள்ளும் முக்கிய முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் மாபெரும் உலக யுத்தத்தை நோக்கி உலகை இழுத்துச் செல்கின்றன. இந்தியாவினதும் பாகிஸ்தானினதும் ஆளும் வர்க்கங்கள் காஷ்மீருக்கு உரிமை கொண்டாடிக் கொண்டு தென் ஆசியாவில் பிராந்தியத்தை அணுக்குண்டு யுத்தத்தின் விளிம்புக்கு தள்ளியுள்ளன. இதன் முக்கிய இலக்கு இரு நாடுகளதும் சோவினிசத்தை பரப்புவதன் மூலம் பொதுமக்களின் கண்களில் மண்ணைப்போட்டு அவர்களை கொடிய சுரண்டலுக்கு உள்ளாக்கும் அடக்குமுறை ஆட்சியை ஸ்தாபிதம் செய்வதே.

யூ.என்.பி. அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிரான பொதுமக்களின் பதட்ட நிலை உருவாகும் ஒரு நிலையில் அவர்களிடையே இருந்துவந்த குழப்ப நிலையைச் சுரண்டி ஏகாதிபத்தியவாதிகளின் ஆசீர்வாதங்களுடன் பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா. முதலான அமைப்புக்களதும் அதிகாரத்துவங்களதும் தொழிற்சங்கங்களதும் முண்டுடன் அனைத்துலக மூலதனத்தினதும் அதன் ஏஜன்டான இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் தாக்குதலை முன்னெடுப்பதே முதலாளி வர்க்கத்தின் உபாயமாக விளங்கியது. இந்தத் துரோகிகளின் உதவியோடு கடந்த நான்கு ஆண்டுகளில் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளர் , ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்கு எதிராகத் தொடுத்த தாக்குதல்களை எதிர்த்து இவர்தளின் பதட்ட நிலை மேலும் மேலும் அபிவிருத்தி கண்டுகொண்டுள்ளது.

இதனால் அரசியல் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தை உக்கிரமாக்கி, நாடு பூராவும் இராணுவவாதத்தை அபிவிருத்தி செய்து வருகின்றது. விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் யூ.என்.பி.மற்றும் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அமைப்புக்களுடன் இணைந்து அரசியல் தீர்வு யோசனை எனப்படுவதன் மூலம் பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டும் வேலைத்திட்டத்தினை ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டுடன் அரசாங்கம் முன்னணிக்குத் தள்ளியுள்ளது. இது பொதுமக்களை நசுக்கித் தள்ளும் அந்த வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும்.

மே மாதத்தின் கடைப்பகுதியில் நடைபெற்ற உதவி வழங்கும் குழுவின் கூட்டத்தில் பொதுமக்களின் உரிமைகளை மேலும் நாசமாக்கும் இன்னும் ஒரு தொகை தாக்குதல்களை நடைமுறைக்கிடும்படி இலங்கை அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளது. காப்புறுதிக் கூட்டுத்தாபனம், அரச வங்கிகள் உட்பட்ட நிதி துறையை அனைத்துலக மூலதனத்துக்கு திறந்து விடுவது, மற்றும் முக்கிய அரச துறைகளை தனியார்மயமாக்குவது , அரச ஊழியர்களின் எண்ணிக்கையை மீண்டும் வெட்டுவது , ஓய்வூதிய திட்டத்தை ஒழிப்பது என்பனவும் அவற்றுள் அடங்கும்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை நசுக்கும் தாக்குதலை உக்கிரமாக்கியிருப்பது இத்தகைய ஒரு நிலையிலேயே. இலங்கை மின்சார சபை, உருக்கு கூட்டுத்தாபனம் முதலான இடங்களில் தொழிலாளர் போராட்டங்களை பொலிஸ்-இராணுவ தாக்குதல்கள் மூலம் நசுக்கிய அரசாங்கம், அடுத்ததாக மத்திய வங்கி ஊழியர்களை அரச வேட்டையின் மூலம் அடக்கியது. சமீபத்தில் தபால் சேவை மேலதிக நேர வேலைநிறுத்தத்தை உடைக்க இராணுவத்தை ஈடுபடுத்தியது. இப்போது துறைமுக ஊழியர்களை அவசரகாலச் சட்டத்தின் கீழ் நசுக்கித் தள்ள அரசாங்கம் தயாராகி வருகின்றது. மாணவர் பிரச்சாரங்களுக்கும் விவசாயிகள், மீனவர்கள் பிரச்சாரங்களுக்கும் எதிராக இடைவிடாது பொலிஸ், குண்டர் தாக்குதல் தொடுக்கப்பட்டது. அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் இத்திசையில் இழுத்துச் செல்வது இராணுவ-பொலிஸ் சர்வாதிகாரத்துக்காகவே.

தொழிற்சங்கவாத வேலைத்திட்டத்தின் மூலம் இந்தத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாது. அனைத்துலக மூலதனத்தின் தாக்குதலும் உற்பத்தியின் பூகோளமயத்தின் எதிரில் தொழிற்சங்கங்களின் வரையறையும் வங்குரோத்தும் மின்சாரசபை, உருக்கு கூட்டுத்தாபனம். தோட்டத்துறை, மத்திய வங்கி, தபால் சேவை, துறைமுகம் முதலான இடங்களில் அம்பலமாகியுள்ளது. தரத்துக்கு இணங்கவும் வேலைத்தலத்துக்கு இணங்கவும் அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் தேசிய அரசுடன் பிணைந்து முதலாளித்துவ எஜமானர்களுடன் பேரம்பேசலில் ஈடுபடுவதன் மூலம் சம்பளம், சேவை நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதை உரிமையாக்கிக் கொண்டிருந்த அமைப்புக்களாகும். இன்று வளர்ச்சி கண்டுள்ள நிலை முதலாளித்துவ எஜமானர்களதும் அவர்களது அரசாங்கங்களதும் அனைத்துலக மூலதனத்தின் சுரண்டலுக்கு தொழிலாளர்களை பலிகடாக்கள் ஆக்குவதாகும். இந்த நிலைமையினுள் தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் பழைய பாணியிலான பேரம்பேசல்களைக் கொண்டு நடாத்த முடியாது வங்குரோத்தடைந்துள்ளது. முதலாளிகளுடன் பேரம்பேசுவதற்கு கட்டுப்பட்ட சந்தர்ப்பவாத தலைவர்கள் தற்போது தொழிற்சங்கங்களை தொழிலாளர்களை முதலாளிகளுக்கு கட்டிப்போடும் விலங்குகளாக்கிக் கொண்டுள்ளனர். தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்துக் கொள்ளவும் பறித்துக் கொடுக்கவும் வாய்ப்பளிக்கும் துரோகிகளாக அவர்கள் செயற்படுகின்றார்கள். முதலாளித்துவ தாக்குதலின் எதிரில் தொழிலாளர்களை அரசியல் ரீதியில் தயார் செய்வதை - தொழிலாளர் போராட்டங்களுக்கு குழி பறிக்கும் சக்திகளாக தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் மாறியுள்ளன.

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ரீ.அந்திராதி தலைமை இந்த கடைகெட்ட நாற்றடுப்பையும் துரோகத்தையும் காட்டிக் கொண்டுள்ளது. ஒரு காலத்தில் பெரும் வாயடிப்புக்கள் மூலம் இடதுசாரி வேஷம் போட்டுக் கொண்டிருந்த அந்திராதி போன்றவர்களின் நிலைப்பாடு இன்று வெளியரங்குக்கு வந்துள்ளது. மத்திய வங்கி ஊழியர்களிடையே அந்திராதிக்கு சார்பான பகுதியினர் இந்த அம்பலப்படுத்தல்களை தனிப்பட்ட சேறடிப்பு எனக் குற்றம் சாட்டுகின்றனர். இது தனிப்பட்ட சேறடிப்பு அல்ல. உண்மை நிலையாகும். அவர்களும் சகல தொழிற்சங்கத் தலைவர்களும் பழைய தொழிற்சங்கவாத வேலைத்திட்டங்கள் வீழ்ச்சிகண்டு போயுள்ள நிலையில் முதலாளித்துவத்தின் சார்பில் பேரம் பேசுபவர்களாகவும் தொழிலாளர்களை பலிகொடுப்பவர்களாகவும் மாறியுள்ளனர்.

பாருங்கள்.சோசலிச சமத்துவக் கட்சியின் குழு( முன்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்) தொழிற்சங்கங்களின் வரையறைகளை சுட்டிக் காட்டி, ஏனைய தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுடன் இணைவதற்கு. அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடன் கூட்டினை உருவாக்கிக் கொள்ளவும் தொழிலாளர் நடவடிக்கை குழுக்களை அமைக்கவும் யோசனை தெரிவித்தது. நீங்கள் இவற்றுக்கு வாக்களித்து நிறைவேற்றிய சந்தர்ப்பங்களும் பல.தொழில், சம்பளம் வாழ்க்கை நிலைமைகள் , நலன்புரி சேவை உரிமைகளைக் காக்கும் போராட்டம் அனைத்துலக சோசலிசத்தின் ஒரு பாகமாக இலங்கையினுள் சோசலிச வேலைத்திட்டத்துக்கு போராடுவதுடன் இணைந்துள்ளதை சோ.ச.க. குழு சுட்டிக்காட்டியது. இனவாத யுத்தம் சிங்கள-தமிழ் தொழிலாளர்களை பிளவுபடுத்தி தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கி, நாடுபூராவும் இராணுவ-பொலிஸ் அடக்குமுறை ஆட்சியை திணிக்கும் ஒரு முயற்சியாகும் என நாம் சுட்டிக் காட்டினோம். விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் மறுபுறத்தில் ஏகாதிபத்தியச் சார்பு பிற்போக்கு திட்டமாகும் எனவும் நாம் சுட்டிக் காட்டினோம். பொதுமக்களின் வாழ்க்கை உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் காக்கும் பொருட்டு அவர்களின் அரசாங்கத்தை தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை-சிங்கள-தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் பொதுமக்களின் ஐக்கியத்தின் மூலமும் சமாதானத்தின் மூலமும் வாழக்கூடிய இலங்கை-ஈழம் சோசலிசக் குடியரசு ஒன்றியத்துக்காகப் போராட வேண்டியதன் அவசியத்தை நாம் சுட்டிக் காட்டினோம். சுருக்கமாகச் சொன்னால் நாம் கூறியது, சோசலிச பொதுஜன இயக்கத்தை கட்டியெழுப்பும் போராட்டத்துக்கு மத்திய வங்கி ஊழியர்கள் இணைய வேண்டியதன் அவசியத்தையும் அதன் ஒரு பாகமாக மட்டுமே தமது உரிமைகளை காக்கும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றோம்.

ரீ.அந்திராதி முதலிய தலைவர்கள் அதை மூர்க்கமாக எதிர்த்தனர். அதற்குப் பதிலாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்புவிடுப்பதையும் தொழில் அமைச்சருடன் வயிறளப்பதையும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதையும் இவர்கள் வேலைத்திட்டமாகக் காட்டினர். இன்று மத்திய வங்கி ஊழியர்கள் பெரும் பொறிக் கிடங்கில் வீழ்த்தப்பட்டுள்ளனர்.சோசலிச சமத்துவக் கட்சி இந்த துரோக வேலைத்திட்டங்களை வன்மையாக எதிர்த்தது. அன்று சோ.ச.க.குழுவில் இருந்த மத்திய வங்கி ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் எச்.எம்.பி. ஹேரத் கட்சித் தீர்மானங்களுக்கு எதிராக இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டமைமை சோ.ச.க.அப்பட்டமாகக் கண்டனம் செய்ததை நீங்கள் அறிவீர்கள். அந்திராதியின் துரோக விதிமுறைக்கு கீழ்ப்படிந்து போயுள்ள அவரில் இருந்து பிரிந்து கொண்டுள்ள எமது குழு, இந்தத் தேர்தலுக்கு அவரை வேட்பாளராக நிறுத்தாததற்குக் காரணம் அதுவே. இப்போது அந்திராதியினதும் ஹேரத்தினதும் கையொப்பத்துடன் சில நாட்களுக்கு முன்னர் வெளியான தேர்தல் பிரசுரத்தில் தாம் மத்திய வங்கி நிர்வாகிகளுடன் விளைதிறனைப்பற்றி -திட்டவட்டமான திட்டத்தை உருவாக்குவது பற்றி ஒரு கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு எதிர் அல்ல எனக் கூறியுள்ளனர். உங்களுக்கு தெரிகின்றதா. இது மத்திய வங்கி அதிகாரிகளின் பாஷையாகும். அந்திராதி பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரவும் துடித்தவர். அவரின் வேலைத்திட்டத்தில் அந்த அரசியல் அடங்கிக் கொண்டுள்ளது.

மத்திய வங்கி ஊழியர்களே-தோழர்களே, நாம் இந்த விடயங்களை விளக்கியது எம் மீது திணிக்கப்பட்டுள்ள அரசியல் ஸ்தம்பிதத்தையும் காட்டிக்கொடுப்பையும் உடைத்து தள்ளி முன்நோக்கி செய்வதற்கான வேலைத்திட்டத்தை தெளிவுபடுத்துவதற்காகும். வேறு முற்போக்கு பதிலீடு கிடையாது. நிர்வாகிகளுக்கு தொழிலாளர்களை பலிகடாக்களாக்கும் பிற்போக்கு அரசியலை நீங்கள் நிராகரிக்க வேண்டும் என நாம் வேண்டுகின்றோம். அந்திராதி போன்ற சந்தர்ப்பவாதிகள் இவை அவசியல் இல்லை என குரைக்கலாம். அவர்கள் பிற்போக்கின் சார்பில் குரைப்பவர்கள். சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் எம்முடன் இணையுமாறு உங்களை வேண்டுகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

# மாலைதீவு ட்ரைஸ்டார் ஆடை தொழிற்சாலையை மூடி தொழிலாளர் வேலைநீக்கம்

ட்ரைஸ்டார் ஆடைநிறுவனத்தினால் மாலைதீவு மாபும் துலஸ்துவ தீவுகளில் நடாத்தப்பட்டு வந்த ஆடைத்தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டதால் அங்கு சேவை செய்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இங்கு இலங்கைத் தொழிலாளர்கள் மட்டுமன்றி பங்களாதேஷ், நேபாள தொழிலாளர்களும் வேலை செய்து வந்தனர்.

தொழில் இழந்த தொழிலாளர்கள் கடந்த மார்ச் 31ம் திகதி பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள ட்ரைஸ்டார் நிறுவனத்தின் தலைமையகத்துக்கு வந்து , மூன்று மாதச் சம்பளம் வழங்கும்படியும் தொழிலை மீண்டும் வழங்கும்படியும் தொழில் இல்லாது போனால் உரிய நஷ்டஈடு வழங்கும்படியும் நிர்வாகிகளிடம் கேட்டனர். முதலாளித்துவ நிர்வாகி இதற்கு பதிலளிக்காது தட்டிக்கழித்துள்ளார். இச்சமயத்தில் தொழிலாளர்கள் அங்கு சென்ற "தொழிலாளர் பாதை "நிருபரிடம் தாம் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளை விபரித்தனர்.



மாலைதீவு ட்ரைஸ்டார் தொழிலாளர் அதன் பம்பலப்பிட்டி தலைமையகத்தில் வேலையிழந்ததையிட்டு எதிர்ப்புக் காட்ட வந்திருந்த போது எடுத்த படம்

தொழிலாளர்கள் கூறியதன்படி ட்ரைஸ்டார் நிறுவனம் மாபும் துலுஸ்துவ தீவுகளில் நடாத்தி வந்த தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளமாக 150 டாலர்கள் வழங்கி வந்துள்ளது. கைஉதவியாளர்களுக்கு மாதச் சம்பளமாக 110 டாலர்கள் வழங்கியுள்ளது. தொழிலாளர்கள் இந்தச் சொற்ப சம்பளத்தை பெற்றுக் கொள்ள நாளுக்கு 12 மணித்தியாலங்கள் சேவை செய்ய வேண்டும். எட்டு மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக செய்யும் சேவைக்கு எதுவிதமான மேலதிகக் கொடுப்பனவும் கிடைப்பதில்லை என தொழிலாளர்கள் தொழிலாளர் பாதையிடம் தெரிவித்தனர்.

இத்தொழிலாளர்கள் குறிப்பிட்டதன்படி இவர்களுக்கு அவசியமான குடிநீர் கூடக் கிடைப்பதில்லை. தொழிலாளர்கள் குடிநீரை மழை நீரில் இருந்து சேகரிப்பதும் கடல்நீரில் குளிப்பதுமே தொழிலாளர்களின் வழக்கமாக இருந்தது. இந்தக் கஷ்டங்களுக்கு மத்தியில் சேவை செய்த தொழிலாளர்களுக்கு வைத்திய வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் தொழிலாளர்கள் பல்வேறுபட்ட நோய்களுக்கு உள்ளாகினர்.

படுமோசமான சேவை நிலைமைகளின் கீழ் தொழிலாளர்களை சுரண்டுவதில் ஈடுபட்டிருந்த ட்ரைஸ்டார் நிர்வாகிகள் நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதாகக் கூறி பக்டரியை மூடினர். தொழில் உரிமைகள் உட்பட சகல உரிமைகளும் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் மத்தியில் பெரும் கொதிப்பு உருவானது. இந்நிலையில் தொழிலாளர்களிடையே உருவான தகராறைச் சாட்டாகக் கொண்டு தொழிலாளர்களை ஒடுக்கித் தள்ள நிர்வாகிகள் தொடங்கினர். இதன்படி மாலைதீவு பொலிசார் 10 தொழிலாளரைக் கைது செய்தனர்.

கைது செய்தது மட்டுமன்றி அந்தத் தொழிலாளர்களை சகோதர தொழிலாளர்கள் பார்வையிடுவதையும் தடை செய்தனர். கைதான ஒரு தொழிலாளி தனது அனுபவத்தை பின்வருமாறு கூறினார்.

"பொலிசார் எம்மை கதிரையில் இருத்தி கைகளை பின்னால் வைத்து கைவிலங்கு போட்டுக் கடலில் அமிழ்த்தியுள்ளனர். தீச்சுவாலையில் 4.5 மணித்தியாலங்கள் இருக்க நேரிட்டுள்ளது." என்றார்.

மாலைதீவு சட்டத்தின்படி பொலிசார் கைது செய்யும் ஆட்களை தாக்குவதில்லை எனக் கூறிக்கொண்டாலும் தாம் தொடர்ந்து தாக்கப்பட்டதாக இத்தொழிலாளர்கள் தெரிவித்தனர். இதன் பின்னரே இவர்கள் விடுதலை செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டு உள்ளனர். இவ்வாறு மாலைதீவுக்கு அனுப்பப்பட்ட தொழிலாளர்கள் ட்ரைஸ்டார் பக்டரியில் சேவை செய்த தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போது இவர்களுக்கு இரண்டு இடத்திலும் வேலை இல்லாது போயுள்ளது.

# வீரகேசரி பத்திரிகையாளர் கைதைக் கண்டிக்கின்றோம்

வீரகேசரி அலுவலக நிருபர் எஸ் சிறீகஜனும் வவுனியா நிருபர் பீ.மாணிக்கவாசகமும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு இருப்பதை வன்மையாகக் கண்டனம் செய்யும் சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் பாதையும் அவர்களை உடனடியாக விடுதலை செய்யும் படி வேண்டுகின்றது. எஸ்.சிறீகஜன் ஜூலை 16ம் திகதி கைது செய்யப்பட்டுள்ள அதே வேளையில் மாணிக்கவாசகம் ஜூலை20திகதி கொழும்பில் இருந்து வவுனியா சென்ற சிறப்பு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். தகவல் ஒலிபரப்பு அமைச்சர் இவர்கள் பத்திரிகைத் துறையுடன் தொடர்புபட்ட விடயங்களின் பேரில கைதுசெய்யப்படவில்லை எனக் கூறிக்கொண்டுள்ள அதே வேளையில் இவர்கள் எதற்காகக் கைதுசெய்யப்பட்டார்கள் என்பதை குறிப்பிடவில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் எதையும் எவருக்கும் எதிராகச் செய்யும் அதிகாரம் அரசுக்கு இருந்து கொண்டுள்ளதையே அவரின் அமைச்சரவை பத்திரிகையாளர் மகாநாட்டு பேச்சு காட்டிக் கொண்டுள்ளது. பத்திரிகைகளில் வடக்கு கிழக்கு யுத்தம் தொடர்பாக எந்த செய்திகள் வெளியாக வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் இராணுவ தணிக்கை அதிகாரிக்கு வழங்கப்பட்டு பத்திரிகைகளுக்கு கடிவாளம் போடப்பட்டுள்ள நிலையில் இடம்பெற்றுள்ள இந்த கைதுகள் முதலாளித்துவ அமைப்பின் கீழ் எந்த ஒரு ஜனநாயக உரிமைக்கும் உத்தரவாதம் கிடையாது என்பதை மீண்டும் ஊர்ஜிதம் செய்கின்றது.

# கேமர் றவுஜ் தலைவர்...

5ம் பக்கத் தொடர்ச்சி

தசாப்தத்துக்கும் மேலாக பொல் பொட்டின் பிரதிநிதியை ஐ.நா.வில் கம்போடியன் பேராளராக இருத்துவதற்கும் ஆதரவளித்தன. 1980பதுகள் பூராவும் றீகன் நிர்வாகம் கம்போடியாவிலான 1975 78 சம்பவங்களை ஒரு மக்கட் படுகொலையாக இனங்காண்பதையோ அல்லது இந்தப் பரந்த கொலைகளுக்கு கேமர் றவுஜை பொறுப்பாளியாக்கும் அனைத்துலக முயற்சிகளையோ தடை செய்தது.

கேமர் றவுஜின் கடைசி வீழ்ச்சியும் அது போட்டிக் குழுக்களாக சிதறுண்டு போனமையும் 1993ல் ஐ.நா.வின் ஆதரவுடன் கம்போடியா மீது ஒரு புதிய ஏகாதிபத்திய தீர்வினைத் திணிப்பதற்கு வாய்ப்பாகியது. ஐ.நா.வின் தலையீட்டின் நோக்கம் அனைத்துலக முதலீட்டாளர்களுக்கான மலிவு உழைப்பு களமாக கம்போடியாவை திறந்து விடுவதாக விளங்கியது. அதில் இருந்து முக்கிய கேமர் றவுஜ் குழுக்கள் சரணடைந்ததோடு இராணுவத்தினுள்ளும் உத்தியோகபூர்வமான கம்போடியன் அரசியல் வாழ்க்கையினுள்ளும் இணைந்து கொண்டன. இதன் மிச்சசொச்சங்கள் தாய்லாந்து கம்போடியன் எல்லையில் நின்று சண்டையிடுகின்றன.

கடந்த ஆண்டில் கேமர் றவுஜ் மிச்சசொச்சங்களுக்கு இடையே ஏற்பட்ட உள்வாரி பிளவுகளுக்குப் பின்னரே பொல்பொட் கைது செய்யத் தள்ளப்பட்டார். பொல்பொட் ஒரு யுத்தக் கிரிமினல் ஆகக் கைது செய்யப்படுவதற்கு தான் காட்டி வந்த எதிர்ப்பை அமெரிக்கா வாபஸ் பெற்றுக் கொண்டது.

லண்டன் கீழைத்தேய. ஆபிரிக்க ஆய்வுகள் நிறுவனத்தின் ஒரு விரிவுரையாளரும் ஒரு கம்போடியன் கல்விமானுமான ஸ்டீபன் ஹேடர் கூறியது போல்: இந்த முழு நிலைமைக்கும் உண்மையில் அமெரிக்கா பெரும் பொறுப்பாளி. யுத்த அட்டூழியங்கள் பற்றிய ஒரு வழக்கு விசாரணை அமெரிக்காவுக்கு ஒரு பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கும். ஏனெனில் இது 1969 73 வரை அமெரிக்க குண்டுவீச்சுக்கள் பற்றிய . பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கும்.

பொல்பொட்டின் மரணத்தின் பின்னர் வரலாற்று சம்பந்தமான தமது அலட்சியத்தோடு அமெரிக்க வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் ஹென்றி கீசிங்கருடனான பேட்டிகளை பிரசுரித்திருந்தது. அவற்றில் கம்போடியன் துன்பியல் நாடகத்தில் அமெரிக்கப் பங்களிப்பு பற்றி எதுவும் குறப்பிடப்படவில்லை. நிக்சனது கம்போடிய கொள்கையின் முக்கிய சிற்பியான கீசிங்கர் பொல்பொட்டின் இரத்தம் தோய்ந்த குற்றங்களை பற்றி குறிப்பிட்டதோடு உயிர்வாழும் கேமர் றவுஜ் தலைவர்களுக்கு எதிரான யுத்த குற்றங்கள் பற்றிய விசாரணையின் சாத்தியங்கள் பற்றியும் உரையாடினார். உண்மையைச் சொன்னால் அத்தகைய எந்த ஒரு விசாரணையிலும் குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்பதற்கு கீசிங்கர் தகுதி படைத்தவர்.

# இந்திய அரச வங்கிகள் 1609கோடி அறவிடமுடியாக் கடன் தள்ளுபடி

இந்திய அரசுடமை வங்கிகள் கடந்த ஆண்டில் அறவிடமுடியாக் கடனாக மொத்தம் ரூபா.1609 கோடியை இரத்துச் செய்துள்ளன. இதே சமயம் அரசதுறை வங்கிகளில் கடந்த மூன்று நிதியாண்டுகளிலும் யூகோ வங்கியும் யுனைட்டெட் பாங்கக் ஒப் இந்தியாவும் நஷ்டம் கண்டுள்ளன.

யூகோ வங்கி 1994 95ல் 83 கோடி ரூபாவும் 95 96ல் 239 கோடி ரூபாவும் 96 97ல் 176 கோடி ரூபாவும் நஷ்டம் கண்டுள்ளது.

கடந்த மாதம் இந்திய அன்னிய செலாவணிச் சந்தையில் டாலருக்கு முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு தேவை எழுந்ததால் இந்திய ரூபாவின் மதிப்பு (டாலருக்கு) 41.76 ரூபாவாக சரிந்தது. முன்னர் இது 41.73 ரூபாவாக இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அணுவாயுத பரிசோதனையைத் தொடர்ந்து வெளிநாட்டு முதலீடுகளுக்கும் கடன்களுக்கும் முன்னணி ஏகாதிபத்திய நாடுகள் விதித்துள்ள தடையும் ஆசியாவினை ஆட்டிப்படைத்துவரும் பொருளாதார வீழ்ச்சியும் இந்திய நாணயத்தின் சரிவில் முன்னொருபோதும் இல்லாத செல்வாக்கு செலுத்துகின்றன.

# இந்திய தபால் ஊழியர் வேலைநிறுத்தம

இந்திய பாரதீய ஜனதா கட்சி கூட்டரசாங்கம் இராணுவத்தை தபால் சேவைக்கு அமர்த்தப் போவதாக பயமுறுத்தியதை தொடர்ந்து தபால் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை கமிட்டி அதனது எட்டு நாள் வேலைநிறுத்தத்தை ஜூலை 16ம் திகதி நிறுத்திக் கொள்ளும்படி உத்தரவிட்டது. இந்த வேலைநிறுத்தத்தில் சுமார் 6 இலட்சம் தொழிலாளர்கள் பங்கு கொண்டனர்.

தபால் தொழிற்சங்க அலுவலர்கள் தபாற் போக்குவரத்து அமைச்சர் சுஷ்மா சுராசுடன் நடாத்திய இரண்டு மணித்தியால பேச்சுவார்த்தைகளின் பின்னர் அரசாங்கம் தபால் ஊழியர் பட்டய கோரிக்கையை கருணையுடன் கையாளும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

தேசிய தபால் சேவை அமைப்புக்களதும் தொலைத் தொடர்பு ஊழியர் தேசிய தேசிய சம்மேளனத்தினதும் பேச்சுக்களுக்கு முபணான விதத்தில் அமைச்சர் சுவராஜ் நான்கு மாத கால கூட்டரசாங்கம் தொழிற் சங்கங்களின் எந்த ஒரு கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவித்தார். ஆனால் அமைச்சர் தபால் ஊழியர்களின் வேலைநிறுத்தக் காலத்துக்கு முழுச் சம்பளம் வழங்கும்படி அமைச்சரவைக்கு சிபார்சு செய்துள்ளார்.பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் வாஜ்பாய். "வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் பழிவாங்கப்படமாட்டார்கள்" என வாக்குறுதி அளித்தார்.

படிப்பகம்

www.padippakam.com

# பொதுஜன முன்னணி இராணுவத்தின்...

1ம் பக்கத் தொடர்ச்சி

சர்வாதிகார ஆட்சி நிலைமைகளின் அபிவிருத்தியின் கொடிய தன்மையையும் நோக்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த இராணுவ ஆட்சியை நோக்கி பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் முதலாளி வர்க்கத்தையும் தள்ளி இருப்பது எது? படுமோசமான பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிகளே இந்நிலைமைக்கு ஆளும் வர்க்கத்தை தள்ளியுள்ளது. வளர்ச்சி கண்டுவரும் உலக முதலாளித்துவத்தின் நெருக்கடி இலங்கை முதலாளி வர்க்கத்தின் திட்டங்களை தவிடு பொடியாக்கியுள்ளது. உலகப் பொருளாதாரத்தின் பூகோளமயமாக்கத்தினதும் ஒன்றிணைப்பினதும் நிறுத்த முடியாத போக்குக்களின் நிலைமைகளுக்குள் இலங்கை முதலாளி வர்க்கத்தின் நடவடிக்கைகள் தீர்மானம் செய்யப்படுகின்றது. அனைத்துலக மூலதனத்துடன் இணைந்து உபரி பெறுமானத்தை சூறையாடுவதை த்விர வேறு வழி முதலாளி வர்க்கத்துக்கு இல்லை.

தென்கிழக்கு ஆசியாவில் நெருக்கடி குமுறிக் கொண்டுள்ள நிலையில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் பொதுவில் பல்வேறுபட்ட பொருளாதார நிபுணர்களும் கூறிக் கொள்வது என்ன?இவை இலங்கைக்கு எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை! ஆனால் இன்று முழு ஆசியாவையும் பாதிக்கும் வகையில் நெருக்கடி அபிவிருத்தி கண்டு வருகின்றது. இவை இலங்கைப் பொருளாதாரத்துக்கு தலையிடி கொடுக்கின்றது.

அனைத்துலக மூலதனத்தை தருவிக்கும் பொருட்டு ஜூனில் பாரிசில் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் ஆதரவுடன் நடைபெற்ற இலங்கைக்கு உதவ வழங்கும் நாடுகளின் கூட்டம் கட்டளையிட்டபடி அரசாங்க நிறுவனங்களின் தனியார்மயமாக்கம் பூர்த்தி செய்யப்படாது உதவி வழங்குவதில்லை என்பதில் கண்டிப்பாக இருந்து கொண்டுள்ளது. அரசாங்கத் துறையில் 2 இலட்சம் வேலைகள் வெட்டப்பட வேண்டும். ஓய்வூதியம் வெட்டு முதலான பெரும் தாக்குதல்கள் தொழிலாளர் ஒடுககப்படும் மக்களின் தொழில் , வாழ்க்கை நிலைமைகள் மீது தொடுக்கப்பட வேண்டும் என்பதில் ஏகாதிபத்திய வங்கியாளர்கள் கண்டிப்பாக இருந்து கொண்டுள்ளனர்.

ஆளும் வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி மூலோபாயத்துக்கு எதிராகத் தொழிலாளர் வர்க்கம் தனது புரட்சிகர மூலோபாயத்துக்கு எதிராகத் தொழிலாளர் வர்க்கம் தனது புரட்சிகர மூலோபாயத்தின் அடிப்படையில் முதலாளி வர்க்கத்தில் இருந்து சுயாதீனமாக அணிதிரள வேண்டும். இந்த மூலோபாயம் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்து அனைத்துலக சோசலிசத்துகான போராட்டத்தை முன்னெடுப்பதன் ஒரு பாகமாக சமூக, ஜனநாயக, பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதாகும். தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தம் முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி மூலோபாயத்தின் மையத்தில் இருந்து கொண்டுள்ளது. சிங்கள இனவாதத்தின் மூலம் தொழிலாளர்களை பிளவுபடுத்துவது ஆளும் வர்க்கத்தின் முலோபாயத்தின் மையமாக இருந்து கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் இந்தப் பிற்போக்கு பிரிவை உக்கிரமாக்கி, தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஏகாதிபத்தியச் சார்பு அவசியங்களை ஊர்ஜிதம் செய்ய உதவுகின்றது.இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசினை அமைக்கும் போராட்டத்தின் ஒரு பாகமாக இலங்கையின் தொழிலாளர் வர்க்கம் இந்தியத் துணைக்கண்ட தொழிலாளர்களுடன் இணைந்து நடாத்தும் போராட்டம் மூலம் இந்தப் போராட்டத்தைஅபிவிருத்தி செய்வது தீர்க்கமானது. அதன் மூலமே இலங்கை-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை ஸ்தாபிதம் செய்ய முடியும்.

# தோட்ட இளைஞர்களை....

1ம் பக்கத் தொடர்ச்சி

4. தாமோதரம் 5. பிச்சமுத்து சந்திரன் 6.செல்லமுத்து லேகநாதன்(குடாஓயா) 7.பொன்னையா சரவணகுமார் ( கொட்டகலை )8. ஆறுமுகம் காளிமுத்து(ஸ்ரத்டன் கிழக்கு)

உதயகுமார் கைதாகி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு இருந்த வேளையில் கடுமையான சுகவீனமுற்று ஜூலை 10ம் திகதி கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதோடு மீண்டும் அங்கிருந்து தடுப்புக் காவல் நிலையத்துக்கே கொண்டு செல்லப்பட்டுள்ளார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் அவர் ஐந்து நாட்களாக நடுக்கத்துடன் கூடிய காய்ச்சலினால் கடுமையாகப் பீடிக்கப்பட்டிருந்ததாக வைத்திய அறிக்கைகள் தெரிவித்தன. "இந்தக் காய்ச்சல் கடும் சந்தேகத்துக்கு இடமானது" எனக் கூறி இவரை முடிந்த அளவு விரைவாக ஆஸ்பத்திரியில் இருந்து புலனாய்வு பகுதிக்கு கொண்டு செல்ல பாதுகாப்பு அதிகாரிகள் நெருக்குவாரம் கொடுத்து வந்ததாகத் தெரிய வருகின்றது.

ஜூன் 1ம் திகதி இரவு அட்டன்-சனன் தேயிலை தோட்ட பக்டரியில் இடம்பெற்ற குண்டுவீச்சை தொடர்ந்து இச்சம்பவத்தில் தொடர்புபட்டவர்களாக பொய் குற்றச்சாட்டு சுமத்தி கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்களுக்கு எதிராக பல்வேறு சித்திரவதைகளும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.சோ.ச.க. அங்கத்தவர் என்பீல்ட் தோட்டத் தொழிலாளி தேவபதி சவரிமுத்து ஜூன் 24ம் திகதி அட்டன் பொலிசாரினால் பொய் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட போதிலும் சோ.ச.க. வின் தலையீட்டைத் தொடர்ந்து அவர் வாய்முறைப்பாடு பெற்றுக் கொண்டு அன்றைய தினமே விடுதலை செய்யப்பட்டுள்ளார். இருப்பினும் அவரை கைது செய்யும் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்து கொண்டுள்ளது.

உதயகுமாரும் சவரிமுத்துவும் அவ்வாறே இம்முறை கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களில் பலரும் பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு சில மாதங்களுள் கைது செய்யப்பட்டதோடு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் தடுத்துவைக்கப்பட்டு இருந்தவர்கள்; சோசலிச சமத்துவக் கட்சியின் நீண்ட அரசியல் பிரச்சார இயக்கத்தினதும் சட்ட நடவடிக்கையினதும் பெறுபேறாக விடுதலை செய்யப்பட்டவர்கள். ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் சித்திரவதைகளுடன் சிறையில் தள்ளப்பட்டு இருந்தவர்கள். இறுதியில் இநத இளைஞர்களுக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டையும் முன்வைக்க பொலிசும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் வெற்றிபெறவில்லை.

பிராந்திய சோ.ச.க.அங்கத்தவர்களும் மற்றும் ஆதரவாளர்களும் நடாத்திய பலம் வாய்ந்த அரசியல் தலையீட்டுக்கு எதிராக தாக்குதலில் இறங்கிய சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் இவர்களை பொலிசாரிடமும் பிடித்துக் கொடுத்தனர்.

ஏனைய சகல இடங்களில் போலவே தோட்டத் துறையின் உள்ளும் தனியார்மயத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தமது தொழில், சம்பளம், சேவை நிலைமைகள் உட்பட்ட அடிப்படை உரிமைகளைக் காக்கும் போராட்டத்துக்கு வரும் தொழிலாளர், இளைஞர்கள் இனவாத யுத்தத்தின் தாக்கத்தின் கீழ் "பயங்கரவாதிகள் அல்லது "விடுதலைப் புலிகள்" என்ற லேபலை ஒட்டி அவர்களை பழிவாங்க பொதுஜன முன்னணி அரசாங்கம் முயற்சிக்கின்றது. தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் அதை ஒரு பெரும் அபாய அறிவிப்பாகக் கொள்ள வேண்டும். உதயகுமார் உட்பட எட்டு தோட்டப்புற இளைஞர்களையும் மற்றும் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும் பலம் வாய்ந்த அரசியல் பிரச்சார இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும்.அந்தப் பிரச்சார இயக்கத்தை சூழ தொழிலாளர், இளைஞர்களை அணிதிரளும்படி சோ.ச.க.வேண்டுகின்றது.

# பிரித்தானிய-அயர்லாந்து....

6ம் பக்கத் தொடர்ச்சி

செலவிடுகின்றது. அந்தளவுக்கு வட அயர்லாந்தின் பொருளாதாரத் திறமையீனம் இருந்து கொண்டுள்ளது. 1985ம் ஆண்டில் மார்க்கிரெட் தட்ச்சர் ஆட்சிக் காலத்தில் இருந்து பதவிக்கு வந்த பிரித்தானிய அரசாங்கங்கள் இந்த நிலைமையில் இருந்து தலையெடுக்க முயன்று வந்தன.

மற்றொரு முக்கியமான விடயத்தையும் நாம் கணக்கில் கொண்டாக வேண்டும். அயர்லாந்து குடியரசு அமெரிக்க மூலதனத்தினால் பொறுப்பேற்கப்படுவதை முடக்கிவைக்க பிரித்தானிய ஏகாதிபத்தியம் முயற்சிக்கின்றது. அது ஐரோப்பிய யூனியனின் பரந்த சந்தைக்கான ஒரு ஏற்றுமதி மேடையாக அயர்லாந்தை பயன்படுத்த முயற்சிக்கின்றது. அயர்லாந்து ஈரோ-நாணய கூட்டின் ஸ்தாபக அங்கத்தவராக இருந்து கொண்டுள்ளது. ஆனால் பிரித்தானியா குறைந்த பட்சம் தற்காலிகமாகவேனும் வெளியில் நின்றுகொண்டுள்ளது. அயர்லாந்து முதலாளி வர்க்கம் இந்த உத்தேச மாற்றங்களில் மனமுவந்து பங்கு கொள்கின்றது. ஏனெனில் இது பிரமாண்டமான அளவில் அனைத்துலக மூலதனத்தில் தங்கியுள்ளது. அமெரிக்காவை தளமாகக் கொண்ட பெரும் கூட்டுத்தாபனங்களுடனான தனது உறவுகள் பிரித்தானியாவுடனான எந்த ஒரு பொருளாதாரக் கூட்டின் முன்னேற்றத்துக்காக செயற்படும் என அயர்லாந்து நம்புகின்றது.

இந்த உடன்படிக்கைக்கான தரகர் வேலையில் ஈடுபட்ட அமெரிக்கா தெற்கு அயர்லாந்தின் வெளிநாட்டு முதலீட்டில் முக்கால் பங்கைக் கொண்டுள்ளது. அத்தோடு வட அயர்லாந்திலும் தனது செல்வாக்குக்கான தளங்களை திறந்துவைக்க அது முயற்சிக்கின்றது.

இந்த உடன்படிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் புதிய ஏற்பாடுகள் அயர்லாந்துக்கு எல்லைக்கு இரு தரப்பிலும் சுபீட்சத்தைக் கொணரப் போவதாகக் கூறிக் கொள்கின்றனர். இது நெருக்கடியற்ற முதலாளித்துவ அபிவிருத்தி பற்றி கற்பனை செய்கின்றது. கடந்த 10 மாதங்களுக்கு மேலாக ஆசியாவில் இடம்பெற்றுவரும் நிகழ்வுகளை இவை புறக்கணித்து விடுகின்றன. ஆசிய பொருளாதாரங்கள் - முன்னர் ஆசியாவின் பொருளாதார புலிகள் என வருணிக்கப்பட்டவை- தரையில் தகர்ந்து கொட்டியதையும் பொருளாதார பெருநாசத்தின் பிராந்தியமாக மாறியதையும் சமீபகால நிகழ்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

என்னதான் பொருளாதார அபிவிருத்திகள் இடம்பெற்றாலும் அயர்லாந்து தொழிலாளர்களின்-வடக்கும் சரி தெற்கும் சரி- சமூக அந்தஸ்தில் ஒரு நீண்டகால அபிவிருத்தியை ஏற்படுத்திவிடாது.இதனால் இலாபம் அடையப் போகின்றவர்கள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் ஒரு சில சிறிய குழுவினரான வசதி வாய்ப்புக்கள படைத்த அயர்லாந்தின் முதலாளிகளும் புதிய ஒழுங்கினை நிர்வகிக்கும் உயர் மத்தியதர வர்க்கத்தினருமே. தெற்கு அயர்லாந்து தொழிலாளர்களின் அனுபவங்கள் வெற்று வாக்குறுதிகளே. இது வட-அயர்லாந்து தொழிலாளர்களுக்கும் இன்று வழங்கப்பட்டு வருகின்றது. ஐரிஸ் குடியரசின் பொருளாதார "வெற்றிகள் " குறைந்த கூலி, தற்காலிக, பகுதிநேர வேலை, சமூக வறுமையின் பெருக்கத்தின் அடிப்படையிலேயே ஈட்டிக் கொள்ளப்பட்டவை. பெரும் வர்த்தக நிறுவனங்களின் வரி வெட்டுக்களுக்கு சாதகமாக பொதுஜன செலவுகள் வெட்டப்பட்டன.சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் வறுமையில் வாழ்கின்றனர். ஏழைகளுக்கும் செல்வந்தருக்கும் இடையேயான இடைவெளி நீண்டு செல்கின்றது.

வட அயர்லாந்து தொழிலாளர்களின் நிலைமை இன்னும் மோசமானது. வட-அயர்லாந்து ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள (UK) வறிய பிராந்தியம். உற்பத்தி அடிப்படை தகர்ந்து போனமையானது வறுமையையும் வேலையின்மையையும் அதிகரித்துள்ளது. பல தசாப்தங்களாக இடம்பெறும் ஆயுத மோதுதல்கள் காரணமாக முதலீடு தடைப்பட்டு . வேலையின்மை பெருகியுள்ளது.

## சின்பின் பாத்திரம்

இந்த உடன்படிக்கைக்கும் வட அயர்லாந்து பிரச்சினையைத் தீர்க்கும் முன்னைய முயற்சிகளுக்குமான முக்கியமான வேறுபாடு , இந்த அரசியல் தீர்வில் சின்பின் சேர்த்துக்கொள்ளப்பட்டு . புதிய அரச அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டதேயாகும். இந்த அபிவிருத்தியின் ஆழமான அரசியல் சிறப்பு முக்கியத்துவம் என்ன?

சின்பின் கத்தோலிக்கத் தொழிலாளர்களதோ அல்லது "தேசியவாத சமூகம்" எனப்படுவதினதோ நலன்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. மாறாக இது ஒரு குட்டி முதலாளித்துவ தட்டினரை பிரதிநிதித்துவம் செய்கின்றது. பிரித்தானியா யூனியனிஸ்டுகளைச் சார்ந்து கொண்டிருந்ததால் இவர்களின் சமூக அபிலாசைகள் சிதறுண்டு போய்விட்டது. எனவேதான ஜெரி அடம்ஸ் தனியார் சொத்துடமையையும் இலாப அமைப்பையும் பேணும் நிர்வாகத்தில் தனது இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்கிறார். ஏகாதிபத்திய எதிர்ப்பு கோசங்களில் ஈடுபட்டுவந்த சின்பின் தலைவர்கள் இன்று பெரும் வர்த்தக நிறுவனங்களின் ஆட்சியைக் காக்கும் பொறிமுறையில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர். இது தேசியவாத முன்நோக்கின் தர்க்க ரீதியான விளைவாகும். பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஆபிரிக்க தேசிய காங்கிரசும் சண்டினிஸ்டாக்களும் லத்தீன் அமெரிக்கா பூராவும் இருந்து வந்த மாஜி.கெரில்லாக் குழுக்களும் பயணம் செய்த பாதையில் சின்பின்னும் சென்று கொண்டுள்ளதைக் காட்டிக் கொண்டுள்ளது.

அயர்லாந்து பிரச்சினையை பொருளாதார வாழ்க்கையை அடிப்படையான முறையில் மறுசீரமைப்பு செய்வதன் மூலம் மட்டுமே தீர்த்து வைக்க முடியும்.பிரமாண்டமான தொழிலாளர் வர்க்கத்தை வரலாற்றின் அரங்கத்துக்கு கொணரும் ஒரு அரசியல் , பொருளாதார இயக்கம் அவசியம்.கத்தோலிக்க-புரட்டஸ்தாந்து தொழிலாளர்களுக்கும் அயர்லாந்து - பிரித்தானிய தொழிலாளர்களுக்கும் இடையேயான நூற்றாண்டுகால பிளவுகளைத் தீர்த்துவைப்பதற்கான புறநிலை நிலைமைகள் இன்று இருந்து கொண்டுள்ளது. சோசலிசத்துக்கும் அனைத்துலகவாதத்துக்குமான போராட்டத்தை முன்னெடுக்கும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஒரு பகுதியாக ஒரு புரட்சிகர அரசியல் அமைப்பை அயர்லாந்தில் கட்டியெழுப்புவது அவசியமாகியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# பங்கு கார்டுகளும் பறிபோகும் அபாயம்

அரசாங்கத் துறை தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு நெத்தலி விலைக்கு விற்றுத்தள்ளப்பட்ட போது செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி இலாபத்தில் 10வீதத்தை தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்க இணக்கம் காணப்பட்டது. தொழிலாளர்களை முதலாளி வர்க்கத்துடனும் மூலதனத்துடனும் கட்டிப்போடும் இந்த நடவடிக்கைகளின் தீய விளைவுகள் ஒரு புறமிருக்க இணக்கம் காணப்பட்டபடி இலாபம் பகிர்ந்தளிக்கப்படவில்லை. அதற்கு மாறாக பங்கு கார்டுகளே வழங்கப்பட்டன.

இந்தக் கார்டுகள் 1995ம் ஆண்டுக்குப் பிந்திய சேவைக் கால்ததை கணக்கிட்டு அதன் அடிப்படையில் 10 தொடக்கம் 250 வரையிலான கார்டுகள் வழங்கப்பட்டன. தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்டதன் பின்னர் கம்பனிகள் கோடிக்கணக்கான ரூபாக்களை இலாபமாக சுருட்டிக் கொண்டு தொழிலாளர்களுக்கு இலாபம் என்ற பெயரில் எலும்புத் துண்டை வீசி எறிந்துள்ளனர். இந்தப் பங்கு கார்டுகளை அடிப்படையாகக் கொண்டு- தேயிலை விற்பனையின் அடிப்படையில் வழங்கப்பட இருந்த ரூபா.101 சம்பளமும் இன்று ரூபா.95 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரித்துக் கொம்டு செல்லும் ஒரு நிலையில் தோட்டத் தொழிலாளி பங்கு கார்டை வங்கியில் இருப்பு வைத்துவிட்டு பார்ததுக் கொண்டு இருக்கும் நிலை உண்டா? வீட்டுப் பாவனைப் பொருட்களையே விற்றுத்தள்ளும் அவல நிலைக்குள் தள்ளப்பட்டுள்ள அவர்கள் இந்த கார்டுகளை முதலாளிகள் செய்வது போல் பங்கு இலாபம் அதிகரிக்கும் நாளை எதிர்பார்த்து கல்லாப்பெட்டியில் இருப்பு வைக்க முடியுமா?

தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் வறுமையை போக்கவும் அவர் வட்டிக்கு அடகு வைத்த நகைகளை மீட்கவும் பெற்ற கடன்களை திருப்பு அடைக்கவும் இந்தக் கார்டுகளை விற்றுத் தள்ளி வருகின்றார்கள். இது இப்படியே நடக்கும் என எதிர்பார்த்து இருந்து முதலாளிகளும் தொழிற்சங்க பிற்போக்கு அதிகாரத்துவங்களும் இவற்றை வாங்க முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றார்கள்.

முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கமும் இ.தொ.கா.உட்பட்ட பிற்போக்கு தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் இந்த பங்கு கார்ட்டுகளை தொழிலாளர்களுக்கு கிடைக்கும் முக்கிய சலுகையாகவும் உரிமையாகவும் தூக்கிப் பிடித்து வந்தது இப்போது அம்பலமாகி உள்ளது. இன்றைய முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொழிலாளி தனது சொந்த உழைப்புச் சக்திக்கு நியாயமான கூலியை பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலையில் இந்த பங்கு கார்டுகளை உரித்தாக்கிக் கொள்வது எப்படி? தோட்டங்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கும் வேலைத் திட்டத்துக்காகப் போராடும் அவசியத்தை இவை தவிர்க்க முடியாததாக்கியுள்ளன.


## புதிய தொழிலாளர் பாதை வெளியீடு



### லியொன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்



### சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00

## மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினைகளும்

### ஒன்பது விரிவுரைகள்

1. லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசத்தின் தலைவிதியும்
2. பூகோளமயமாக்கமும் வரலாற்று அர்த்தமும் புரட்சிகரத் தன்மையும்
3. சீர்திருத்தவாதமும் புரட்சியும்–போர்ண்ஸ்டீனிற்கு எதிரான போராட்டமும் வரலாற்று முன்நோக்கும்
4. கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்: ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
5. நிரந்தரப் புரட்சி--இந்தியாவிலும் சீனாவிலும் அதன் படிப்பினைகள்.
6. நிரந்தரப் புரட்சி-காஸ்ட்ரோவாதமும் குட்டி முதலாளித்துவ தேசியவாதமும்
7. தொழிற்சங்கங்களின் 150 ஆண்டுகள்– ஒரு மார்க்சிச மதிப்பீடு
8. கலை, கலாச்சாரம், சோசலிசம்
9. சோசலிச சமத்துவமும் புரட்சிக் கட்சியின் வேலைத்திட்டமும்

| சிலாபம் மெல்புர சனசமூக நிலையம் | கம்பஹா சுபத மாவத்த | கொழும்பு பொது நூல் நிலையம் |
|---|---|---|
| மார்ச் 15 | மார்ச் 22 | மே 10 |
| மார்ச் 29 | ஏப்பிரல் 05 | மே 24 |
| ஏப்பிரல் 5 | ஏப்பிரல் 26 | ஜூன்07 |
| ஏப்பிரல் 12 | மே 10 | |
| ஏப்பிரல் 26 | மே 24 | |
| மே 17 | ஜூன் 7 | |
| மே 31 | ஜூன் 21 | |
| ஜூன் 21 | ஜூலை 5 | |
| ஜூலை 5 | ஜூலை 19 | |
| | ஆகஸ்ட் 23 | |

சோசலிச சமத்துவக் கட்சி
மாத இதழ்




சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . திகதி . . . . . . .

இச் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220


படிப்பகம்

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.